# கரிகால் வளவன்

(ஒரு வரலாற்று நாடக நூல்)

UNIVERSITY EXTENSION LIBRARY
7 FEB 1962
MADURAI

வி. நரசிம்மன், எம். ஏ.

Univ. Grants Commission

முதற் பதிப்பு: 1957
இரண்டாம் பதிப்பு: 1959

விலை ரூபா
இரண்டு

UNIVERSITY * MADRAS *

# முன்னுரை

நம் பண்டைத் தமிழ்நாட்டு வரலாறு முறையாக வரையப்பட்டிருக்கவில்லை. ஆயினும், அது ஒருவாறு விளங்குமாறு புலமை சான்ற தமிழ்ப் புலவர்கள் செய்யுட்கள் பல இயற்றியுள்ளனர். அச்செய்யுட்கள் கொடைமடமன்றிப் படைமடம் படாத் தமிழ் வேந்தர் பல்லோர் வாழ்க்கை வரலாறுகளை நமக்கறிவிக்கின்றன.

நந்தமிழகத்துப் பண்டை வேந்தருள் சிறந்தோராகக் கருதப்படுவார் சிலருள் சோழன் கரிகாலன் ஒருவன். இவன் பண்டைப் புராணச் சோழர்க்கும், தமிழிலக்கியச் சோழர்க்கும் இடைப்பட்டவனாய் இருவரையும் இணைக்கும் பண்பினன் எனக் கூறலாம். ஏனெனில், உலக மக்கட்குரிய இயல்புகளோடு தேவர்கட்குரிய அரிய பண்புகளையும் நூல்கள் இவன் மீதேற்றி இவனைப் புகழ்கின்றன.

இவன் பொன்னி நதியாகிய காவிரி நதி நாட்டினுக்கு நன்கு பயன்படுமாறு, அரிதின் முயன்று கரை கட்டியும், கால்வாய்கள் வெட்டியும், நிலந் திருத்தியும், 'சாலிநெல்லின் சிறைகொள் வேலி, ஆயிரம் விளையுட்டாக, காவிரிபுரக்கும் நாடுகிழவோன்' ஆயினன்.

இவன் வரலாறாக இலக்கியங்களுட் கண்டவற்றையெல்லாம் ஒருசேரத் திரட்டி இந்நூல் யாக்கப்பெற்றுள்ளது. 'தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி'னான் இவன். அஃதெங்ஙனம் என்பதை நச்சினார்க்கினியர் தமது உரையில், 'தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே, நன்முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலே யிருந்து' என விளக்கியுள்ளார். இச்செய்தி இந்நூலுள் சிறிது கற்பனையோடு கூறப்படுகின்றது.

மற்றும், "உரைமுடிவு காணான் இளமையோன் என்ற, நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்து, சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை, கல்லாமற் பாகம் படும்" என இவனைக் குறித்துக் கூறப்படுவதால் அதனை விளக்கப் புனைந்துரையாக ஒரு வழக்கும் குறிக்கப்பட்டுள்ளது.

இன்னும் இவன் செண்டுகொண்டு கிரிதிரித்தது, இமயத்துப் புலிபொறித்தது, வச்சிர நாட்டான்பால் முத்துப்பந்தரும், மகத நாட்டான்பால் பட்டி மண்டபமும், அவந்தி வேந்தன்பால் வாயிற்றோரணமும் பெற்றது முதலாகிய வரலாறுகளும் ஈண்டுக் கொள்ளப் பட்டு இனிய வரலாறுகளாகக் கூறப்படுகின்றன.

கரிகாலன் நாங்கூர்வேளிடை மகட்கொண்டான். அத்திருமணம் இங்கு அகப்பொருள் இலக்கணத்தை யொட்டி, களவியல் முறை பொருந்துமாறு ஒரு வரலாறும் இதனுட் குறிக்கப்படுகின்றது. இனி, பண்டைத் தெலுங்க நாட்டு மன்னர் சிலர் அதாவது ரே நாட்டு மன்னர் தம்மைக் கரிகால் வளவனது மரபில் வந்தவராய்க் கூறிக் கொண்டு, அவ்வகையிலும் புனைந்துரையாக ஓர் இனிய வரலாறும் இதனுள் குறிக்கப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறின் இம்மன்னன் வாழ்க்கை வரலாறு தமிழராகிய நமக்குப் பெருமிதத்தைத் தருவது என்னலாம். இவ்வரலாற்றை ஒரு நாடக நூலாக அமைப்பின், அது மாணவர் விரும்பிக் கற்க ஏதுவாகுமென்று கருதி இந்நூல் அவ்வகையில் இயற்றப் பெற்றுள்ளது. கல்வியறிஞர் உலகம் இதனை வரவேற்குமென்று நம்புகின்றேன்.

ஆக்கியோன்

# நாடக உறுப்பினர்

| | |
|---|---|
| கரிகாலன் | நாடகத் தலைவன் |
| நாங்கூர் நங்கை | நாடகத் தலைவி |
| ரேநாட்டு மங்கை | கரிகாலனது மற்றொரு மனைவி |
| உருவப்பஃறேர் இளஞ் சேட் சென்னி | கரிகாலன் தந்தை |
| இரும்பிடர்த்தலையார் | கரிகாலனது மாமன், ஒரு புலவன் |
| கருங்குழலாதனார் | |
| முடத்தாமக் கண்ணியார் | சங்கத்துச் சான்றோராகிய ஆண்பாற் புலவர் |
| கடியலூர் உருத்திரங் கண்ணனார் | |
| பரணர் | |
| வெண்ணிக் குயத்தியார் | சங்கத்துப் பெண்பாற் புலவர் |
| நாங்கூர்வேள் | கரிகாலனது மாமனார் |
| இருங்கோவேள் | கரிகாலனது பகைவருள் ஒருவர் |
| கோதமன் | அகோர முனிவரது சீடர் |
| கோசிகன் | |
| அகோர முனிவர் | கொடிய தவசி |
| மெய்கண்ட முனிவர் | நல்ல முனிவர் |
| மாடன் | |
| இருளன் | |
| முனியன் | கள்வர் கூட்டத்தார் |
| சாமுண்டி | |
| மூக்கன் | |
| ஆதி மந்தி | கரிகாலன் மகள் |
| ஆட்டனத்தி | ஆதிமந்தியின் கணவன் |
| மருதி | கடலினின்று ஆட்டனத்தியை மீட்டவள் |

ரேநாட்டரசன், வேங்கடவரசன். வேளிர்பதின்மர், தாயமாக்கள், கழுமலத்து விழுமியோர், அமைச்சர், ஐம் பெருங் குழுவினர், எண்பேராயத்தார், கட்டியக்காரர், பரணர், காவலர், தோழி, பெருஞ்சேரலாதன், பாண்டியர் முதலியோர்.

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| முனனுரை | | iii |
| நாடக உறுப்பினர் | | v |

### அங்கம் ஒன்று

| | | | |
|---|---|---|---|
| களம் 1. | கரிகாலன் பிறப்பு | ... | 1 |
| ,, 2. | தாயமாக்கள் தீயசெயல் | ... | 7 |
| ,, 3. | கரிகாலன் சிறைவீடு | ... | 12 |
| ,, 4. | கழுமலத்து விழுமியோர் | ... | 17 |
| ,, 5. | கருவூர்த் தெருவில் களிறு | ... | 24 |

### அங்கம் இரண்டு

| | | | |
|---|---|---|---|
| களம் 1. | கரிகாலன் அரசெய்தல் | ... | 28 |
| ,, 2. | நரைமுடித்து உரைமுடிவு காணல் | ... | 37 |
| ,, 3. | இகல் கருதிய பகைவர் | ... | 43 |
| ,, 4. | போர்க்குப் பெயர்தல் | ... | 53 |
| ,, 5. | வெண்ணிப்பறந்தலை, வாகைப் பறந்தலை | ... | 56 |

### அங்கம் மூன்று

| | | | |
|---|---|---|---|
| களம் 1. | நாங்கூர் நங்கை | ... | 62 |
| ,, 2. | மணவினை மாட்சி | ... | 69 |

### அங்கம் நான்கு

| | | | |
|---|---|---|---|
| களம் 1. | வடநாட்டு நெடுஞ்செலவு | ... | 73 |
| ,, 2. | காஞ்சி நிகழ்ச்சி | ... | 80 |

களம் 3. சாத்தன் செண்டு ... 86
,, 4. ரேநாட்டு மாநாட்டில்... ... 89
,, 5. புலிமுழையில் புல்வாய் ... 101
,, 6. வருவது தானே வரும் ... 111

அங்கம் ஐந்து

களம் 1. வென்றி மேம்பாடு ... 126
,, 2. புனலாடல் ... 130
,, 3. ஆதிமந்தியின் கற்பு மேம்பாடு ... 134
,, 4. இலங்கைச் செலவு ... 138
,, 5. காவிரியை ஏவல் கொள்ளல் ... 142
,, 6. பொன்னிச் செல்வன் பொலிவு மேம்பாடு ... 146

# கரிகால் வளவன்

அங்கம் : ஒன்று
களம் : ஒன்று

## கரிகாலன் பிறப்பு

**இடம்** : உறையூரில் சோழன் அரண்மனையில் ஒரு கூடம்.

**காலம்** : காலை.

**உறுப்பினர்** : உருவப்ப..்றேர் இளஞ்சேட் சென்னி, மெய்கண்ட முனிவர், பரணர், அமைச்சர், காவலன் முதலியோர்.

*[அரசர், முனிவர், பரணர் ஆகியோர் அவரவர்க்குரிய இருக்கைகளில் அமர்ந்துள்ளனர்.]*

**அரசர் :** முனிவர் பெரும, தங்கள் வரவு நல்வரவாகுக! எளியேனை ஒருபொருட்டாக எண்ணித் தாமே இங்கெழுந்தருளப் பெற்றது என் முன்னோர் முன்னிய தவப்பயனென்றே எண்ணுகின்றேன். இவ்வெளியேனால் ஆற்றத்தக்க பணி ஏதேனுமுளதோ?

**மெய்கண்ட முனிவர் :** சென்னி மன்னவ, வாழ்க! ஒரு கருமம் கருதியே ஈண்டுப் போந்தோம். உலக நன்மையின்பொருட்டு ஓர் அரிய நிகழ்ச்சி நிகழ வேண்டியுள்ளது. இறைவன் திருவுள்ளம் எப்படியோ? ஆயினும் மக்கள் முயற்சியும் வேண்டும் என்று கருதியே இவண் அடைந்தோம்.

**பாணர் :** மன்னர் மன்ன, நீத்தார் பெருமையை நோக்கினீரோ? அன்னார்க்கு இந்நிலவுலகில் வேண்டுவது ஒன்றுமில்லை ஆயினும் உலக நன்மை யின் பொருட்டு அவர்கள் கொள்ளும் அக்கறையை எண்ணிப் பாருங்கள். இதுவே அன்னார் தன்மை. கைம்மாறு வேண்டாத கடப்பாட்டையுடைய மாரி யைப் போன்றது அவர் தம் கருணை. இதற்கு உலகம் என்னாற்றுங்கொல்லோ?

**அரசர் :** முனிவர் பெருமானே, தாங்கள் கூறும் உலக நன்மை யாதோ? எளியேனுக்கு அதனைக் கூறக்கூடுமாயின் கூறுமாறு வேண்டுகின்றேன். அது குறித்து என்னால் செய்யத்தக்க பணி ஏதேனும் இருப்பின் கட்டளை யிட்டருள்க!

**முனிவர் :** மன்னவ, அது உன்னிடம் கூறத்தக்கதே. உனக்கும் அதற்கும் தொடர்பு இருத்தலினால் அன்றோ இங்குப் போந்தேன்? உனது மனைவி கருவுற்றிருக்கின்றாள் அன்றோ? கருவுயிர்க்கும் கால மும் அணித்தாகவே உள்ளதன்றோ? இன்னும் சிறிது நேரத்தில் கோள்களின் போக்கில் ஓர் அரிய நிலை ஏற்படப்போகின்றது. அந்நிலையில் ஒருவர்க்கு ஒரு மகன் பிறந்தால், அவன் உலக முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளுவான். அத் தகைய ஓர் அரசனை உலகம் பெறுகின்றதா என்று காணுதற்கே இங்கு வந்தேன். இறைவன் அருள் புரிவார் என்றே எண்ணுகின்றேன்.

*[பணிப் பெண் ஒருத்தி வருதல்.]*

**பணிப் பெண் :** அரசே, வாழ்க! அரசியார் கருவுயிர்க் கும் காலம் நேர்ந்துள்ளது. இப்போதுள்ள நிலையை நோக்கின் இன்னும் ஒருநாழிகைப் பொழுதிற்குள் மகவு பிறந்துவிடும் எனத் தோன்றுகின்றது.

**முனிவர் :** யான் கூறிய கோள்களின் நிலை இன்னும் மூன்று நாழிகைப் பொழுது கழித்தே ஏற்படப்

போகின்றது. பணிப் பெண் கூறுவதினின்று இன்னும் ஒருநாழிகைப் பொழுதிற்குள் குழந்தை பிறக்கும் என்று அறிகின்றோம். இறைவன் திருவுள்ளம் வேறுவிதம் போலும்!

**பரணர்:** முனிவர் பெரும, இறைவன் திருவுள்ளம் வேறுவிதமாயின் தாங்கள் இங்கு வந்தே இருக்க மாட்டீர்கள் என்று எண்ணுகின்றேன். இது ஏதோ இறைவன் திருவிளையாடல். இன்னும் ஒரு நாழிகையில் பிறக்கப்போகும் மகவை, பின்னும் இரண்டு நாழிகைப்பொழுது கழித்துப் பிறக்குமாறு செய்தற்கு ஏதேனும் வகை இல்லையோ?

**முனிவர்:** புலவரே, நீவிர் தூண்டுவதும் இறைவன் செயலே! ஒருவழி உண்டு. அதாவது தாய் தன் கால்கள் மேற்புறம் நோக்கியிருக்குமாறு அமர்ந்து கொண்டால் மகவு தாமதப்பட்டுப் பிறக்கலாகும். ஆனால், அது தாய்க்கு மிக்க துன்பமாயிருக்கும்.

**அரசர்:** அரசன் என்பான் உலகிற்கு வரும் அல்லல் தீர்ப்பான் அல்லனோ? எனக்குரிய இன்ப துன்பங்களில் என் மனைவிக்கும் பங்குண்டு அன்றோ? ஆதலின் உலகங் காத்தலாகிய என் கடமையிலும் அவளைப் பங்குகொள்ளுமாறு செய்கின்றேன். மகவு சிறிது காலந்தாழ்த்துப் பிறத்தற்கு ஆவன செய்யுமாறு கூறுகின்றேன்.

**முனிவர்:** நல்லது! அவ்வகையில் முயலுக! நம் கடன் பணிசெய்து கிடப்பதே! கருத்து நிறைவேறின் யாவர்க்கும் களிப்பே!

**அரசர்:** பணிப் பெண்ணே, நீ சென்று அரசியிடம் இன்னும் மூன்று நாழிகை கழித்து மகவு பிறத்தற்காக முனிபுங்கவர் கூறிய உபாயத்தை அறிவிப்பாய்!

**பணிப் பெண்:** சித்தம் அரசே!

*[பணிப் பெண் போய் மூன்று நாழிகைப் பொழுது கழித்துத் திரும்பி வருதல்.]*

**முனிவர் :** பெண்ணே, யாதாயிற்று ?

**பணிப் பெண் :** அரசியார் ஆண் மகவை யீன்றனர்.

**முனிவர் :** இறைவன் திருவுள்ளம்! இனிது முடிந்தது!

**அரசர் :** பெண்ணே, இதோ இம்மணியாரம் உனக்குப் பரிசு! சென்று வா! யாரங்கே,...காவல!

*[காவலன் வருதல்.]*

காவல, நீ விரைந்து சென்று நமது அமைச்சரை அழைத்து வா!

*[காவலன் போதல்.]*

**பரணர் :** முனிபுங்கவ, தாங்கள் கூறியருளியவாறு மூன்று நாழிகைப் பொழுது கழிந்தபின்பே, மகவு பிறந்திருக்கின்றது. ஆகவே தாங்கள் கருதியவாறு உலக நன்மைக்கு இடமுண்டென்றே கருதுகின்றேன். இது பற்றித் தாங்கள் ஏதேனும் தெரிவித்தல் இயலுமாயின் தெரிவிக்குமாறு வேண்டுகின்றேன்.

**முனிவர் :** எல்லாம் இறைவன் திருவுள்ளம். யாம் எதிர்நோக்கிய பொழுதிலேயே பிறந்திருக்கின்றது. ஆயினும் இதற்காக நாம் சிறிது முயல வேண்டிய நிலை ஏற்பட்டதன்றோ? அதனால் இம் மகவு அரசு பெறுவதற்கும் சிறிது முயற்சி வேண்டியிருக்கும் என்று தோன்றுகின்றது. நமது முயற்சியால் கருதியது முடிந்ததுபோல், இம்மகவு அரசு பெறுதற்குச் செய்யும் முயற்சியும் கைகூடுமெனவே தோன்றுகின்றது. கோள்கள் இருக்கும் நிலையை நோக்கின், இக்குழந்தை பிற்காலத்தில் உலக முழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆளும் என்பதில் ஐயமில்லை. இச்செய்கை எளிதாய் முடியாமல் சிறிது துன்பத்தின் பேரில் முடிவுபெற்றதற்கு யாது காரணமோ? சென்று வருகின்றேம். அரசே, நினது கொற்றம் சிறக்க!

**அரசர் :** முனிக்கரசே, வணக்கம் பல் கோடி! தங்கள் பேருதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகின் றேன்! ஒன்றுக்கும் பற்ருத அடியேனது குலத்தை 'மலைமீது வைத்த விளக்குப்போல' ஆக்கி யருளினீர்! (பாதங்களில் விழுந்து வணங்குதல்.)

**முனிவர் :** சென்னி, நினது சென்னி பெரியாரை யன்றிப் பிறரை வணங்காதாகுக! இனி நாம் காலந் தாழ்த்தற் கில்லை. சென்று வருகின்ருேம். எல்லாம் இனிது முடிக! (போய்விடுதல்.)

*[அமைச்சர் வருதல்.]*

**அமைச்சர் :** வாழ்க அரசே! என்னை அழைத்ததாகக் காவலன் வந்து அறிவித்தான். வழியில் திருக் குமரன் பிறந்த பெருமகிழ்ச்சிச் செய்தியையும் அறிந்தேன். முனிவர் பெருமான் கூறியருளியதை யும், அதற்கேற்பவே செயல் நிகழ்ந்ததையும் அறிந்தேன். வாழ்க நும் கொற்றம்! பெருக நும் பெருமை!

**அரசர் :** அமைச்சரே, எல்லாம் இனிது நிறை வேறியது! இன்று முதல் ஒரு திங்கள்வரை நமது நாட்டவர் யாவரும் விழாக் கொண்டாடுக! சிறைச் சாலைக் குள்ளிருப்போர் யாவரையும் அவர்கள் எக் குற்றஞ் செய்தவராயினும் சிறைவீடு செய்க! எல் லாக் கோயில்களிலும் ஒரு திங்கள்வரையில் விழா நிகழ்வதாக! ஏழை எளியவர்க்கு ஒரு திங்கள் நல்ல உணவளிக்க! அவர்கட்குப் புத்தாடைகள் வழங்குக! நமது பேராயத்தார்க்கு அவரவர்க்கேற்ற பரிசு, நன் கொடைகள் வழங்குக! சென்று நமது கட்டளைகளை நிறைவேற்றுவீராக!

**அமைச்சர் :** சித்தம் அரசே! (போதல்.)

**பரணர் :** அரசே, சென்று வருகின்றேன்.

**அரசர் :** இதோ, இம்மணியாரம் நுமக்கு! தங்கள் வேண்டுகோளால் அன்ருே முனிவர் அருள்

கூறவும், எல்லாம் இனிது முடியவும் நேர்ந்தது? தங்களுக்கு யாது கைம்மாறு செய்ய வல்லேன்? இதோ இவ்வணக்கமே கைம்மாறு!

**பரணர்:** எம் போன்றோர்க்கு அவ்வப்போது பொன்னும் மணியும் முத்தும் அள்ளியள்ளிக் கொடுக்கும் உமது கொடையும் அன்பும் நீங்கள் எங்களுக்கு அளித்த தற்குரிய கைம்மாற்றின் அளவுக்குப் பன்மடங்கு அதிகமாகுமே! அன்றியும் கைம்மாறு கருதியோ ஒருவருக் கொருவர் உதவி புரிவது? அன்றியும் தங்களது இவ்வணக்கம் இதற்குமுன் எங்களைப் போன்றோர் செய்தவற்றிற்கும், செய்கின்றவற்றிற்கும், செய்யப் போவனவற்றிற்கும் தக்கதும் அதற்கும் பன்மடங்கு மேலானதும் ஆகிய கைம்மாறு ஆகுமே! அது நிற்க, எனக்கு விடையளிப்பீர்!

**அரசர்:** நன்று மொழிந்தீர்! புலவரே, கைம்மாறு கிடக்க. சென்று வருவீர்!

> *'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
> *அனைத்தே புலவர் தொழில்'*

என்றதன் உண்மையை இன்றே அறிந்தேன். இனி அடிக்கடி வந்து செல்வீர்!

**பரணர்:** நன்று, அங்ஙனமே! (போதல்.)

அங்கம் : ஒன்று
களம் : இரண்டு

## தாயமாக்கள் தீய செயல்

இடம் : *கரிகாலன் அரண்மனையில் மந்திராலோசனை மண்டபம்.*

காலம் : *நள்ளிரவு.*

உறுப்பினர் : *தாயமாக்கள் நால்வர், இரும்பிடர்த் தலையார்.*

*[தாயமாக்கள் தீய ஆலோசனை புரிகின்றனர். இரும்பிடர்த்தலையார் ஒட்டுக் கேட்கின்றார்.]*

**தாயத்தாருள் ஒருவர் :** பேரும் புகழும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்ந்த நமது மாற்றான் இளஞ்சேட் சென்னி மாண்டொழிந்தான். அவனிருந்த காலம் வரை நாம் தலைதூக்க இயலவில்லை. அவன் மகன் சிறுவனாயிருந்ததால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவனையும் அவன் தாயையும் சிறைப்படுத்தி விட்டோம். இரும்பிடர்த்தலையான் இல்லாதிருந்ததும் நமக்குச் சாதகமாய் இருந்தது. வெளிநாடு சென்ற அவன் திரும்பி வந்ததும் அவனையும் சிறையிலிடத் திட்டமிட்டிருந்தோம். அத் திட்டம் இப்போது பலிக்காதெனத் தோன்றுகிறது. ஏனெனில், வெளிநாட்டிலிருந்து திரும்பிய அவன் நமது செய்தியை எங்ஙனமோ அறிந்துகொண்டு எச்சரிக்கையாகி விட்டான். அவன் நாட்டில் கலகமூட்டி வருவதாகத் தெரியவருகிறது. அவர்களைச் சிறை மீட்கவும் வகை செய்கின்றானாம். அவன் அரசனது மைத்துனனாகையால் சில பிரபுக்களும், குடிமக்களும் அவனுக்கு உதவி செய்யப் போந்துள்ளனராம். இனிச் சும்மா யிருந்தால்

தொல்லைதான். அவன் மாற்றுருவில் செயலாற்றுவதாகத் தெரிகிறது. அவனை எவ்வகையிலும் கண்டு பிடித்து ஒழித்துவிட வேண்டும். பிறகு சிறையிலிட்டுள்ளவர்களையும் ஒழித்துவிடல் வேண்டும். அவர்கள் உயிரோடிருக்கும்வரை நிம்மதியில்லை. என்ன சொல்லுகிறீர்கள் ?

**தாயத்தாருள் மற்ருெருவர் :** அவர்களை ஒழிப்பது நல்லதென்று தோன்றவில்லை. அதனுல் நாட்டில் குழப்பம் மிகுந்து நமது செல்வாக்குக் குறையக்கூடும். இன்னும் சிறிது காலத்திற்கு விட்டுவைத்து அவர்கள் பேரில் ஏதாவது குற்றம் சுமத்தி அவர்களைக் கொல்லுதல் நலம் என்று எண்ணுகிறேன்.

**தாயத்தாருள் இன்னொருவர் :** இவர் எப்போதும் பயந்தாங்கொள்ளி ! படைவலிமை நமக்கிருக்கும் போது யாவர் குழப்பம் செய்து நம்மை என்ன செய்துவிட இயலும் ? ஆனால், இரும்பிடர்த்தலையானைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். அவன் கிடைத்துவிட்டால், பிறகு அஞ்சாமல் எல்லாரையும் ஒழித்துவிடலாம்.

**தாயத்தாருள் வேறொருவர் :** இரும்பிடர்த்தலையான் செய்வதைச் செய்துகொள்ளட்டும். சிறையிட்டுள்ளவர்களை இதுவரை கொல்லாமல் வைத்திருந்ததே தவறு. இப்போது உடனே கொன்றுவிட வேண்டும். இரும்பிடர்த் தலையான் நம்மிடம் சிக்காமலா போகின்ருன் ! உடனே அவனையும் ஒழித்துவிடுவோம்.

**முதல்வர் :** கொன்ருெழிப்பதைப் பற்றிக் கருத்து வேற்றுமை இல்லை. எப்பொழுது என்பதில்தான் கருத்து வேற்றுமை உள்ளது. இரும்பிடர்த்தலையானைப் பிடிக்காமல் இவர்களைக் கொன்ருெழித்தால் நமக்கு ஆபத்தே. ஆகவே, அவனைப் பிடிப்பதில் முனைய வேண்டும்.

**இரண்டாமவர் :** இப்படிப் பயந்தால் நடவாது. இரும்பிடர்த்தலையானைப் பிடிக்க இயலாவிட்டால்...? இதெல்லாம் வீண் காலதாமதம் !

**மூன்றுவர் :** ஆம் ! பிடிக்க இயலாவிட்டால் என்ன செய்வதென்பதையும் ஆலோசிக்க வேண்டும்.

**நான்காமவர் :** நம்மால் அவனைப் பிடிக்க இயலாமல் போய் அவன் தன்னோடு சிலரைச் சேர்த்துக்கொண்டு நம்மோடு போரிட்டால் என்ன செய்வதென்றுதானே தயங்குகிறீர்கள் ? இவர்களைக் கொன்றொழித்தால் பிறரும் அவனுடன் சேர்ந்து நம்மைக் கவிழ்க்கக் கூடும் என்பதுதானே உங்கள் நோக்கம் ? அப்படியே நடப்பதாக வைத்துக் கொள்வோம். அவர்கள் யாரை அரசனாக்குவார்கள் ? அரசகுடியிற் பிறந்தவர்களாகிய நம்மைவிட்டு அவர்கள் வேறொருவரை அரசராக்குவார்களா ? இரும்பிடர்த்தலையான் எப்படியும் நமது வழிக்கு வந்தே ஆகவேண்டும் ! ஆதலால், அவனை எதிர்பாராமல் இப்போதே இவர்களைக் கொல்லுவது நல்லது.

**முதல்வர் :** ஆம். நமது நண்பர் கூறுவது பொருத்தமாகவே காண்கிறது. ஆனால், எப்படிக் கொல்வது ?

**இரண்டாமவர் :** சிறையிலேயே கொன்றுவிட்டு நோயால் இறந்துவிட்டதாகக் கூறிவிடுவோமே !

**முதல்வர் :** அது தக்கதெனத் தோன்றவில்லை. விரைவில் உண்மைச் செய்தி காவலரால் வெளிப்படக் கூடும். இன்னும் நாம் மக்களது நல்லெண்ணத்தைப் பெறவில்லை. வேறு ஏதேனும் ஒரு சூழ்ச்சியால் கொல்லுதலே தக்கது.

**மூன்றுமவர் :** காவலரையும் ஒழித்துவிட்டால்...?

**நான்காமவர் :** அச் செய்தி எப்படியாவது மற்றக் காவலர்க்குள் பரவி, காவலர் யாவரும் நம்மை நம்பாத வகையில் தீங்கு ஏற்படக் கூடும். வேறு தக்க சூழ்ச்சி செய்வது அவசியம்.

**இரண்டாமவர் :** அவர்களைச் சிறை மாற்றம் செய்வது போல் செய்து வழியிற் கொன்றுவிடலாம்.

**முதல்வர் :** அது அவ்வளவு சுலபமாகத் தோன்றவில்லை. வேறு வழிதான் காண வேண்டும்.

**நான்காமவர் :** எனக்கொரு யுக்தி தோன்றுகிறது. சிறைக் கூடத்திற்கு நாமே தீ வைத்துவிட்டு, அது எவ்வாறோ தீப்பற்றியது என்று கூறிவிடலாம்.

**முதல்வர் :** இது ஒருவாறு தக்கதெனத் தோன்றுகிறது. காவலாளிகளில் ஒருவன் நம்மால் நம்பத் தக்கவன். அவனது காவல் நேரத்தில் தீ வைக்குமாறு செய்துவிடலாம்.

**மற்றவர்கள் :** அதுவே சரி! அதுவே சரி!

*[யாவரும் எழுந்து செல்கின்றனர். அவர்கள் போனபின் இரும்பிடர்த்தலையார் மறைவிடத்தினின்று வெளிவந்து-]*

**இரும்பிடத்தலையார் :** (தனக்குள்) அடபாவிகளே! சிறையிட்டது போதாதென்று கொல்லவுமா துணிகின்றீர்கள்? அதுவும் நெருப்பிட்டா? படுபாவிகள்! படுபாவிகள்! ஆ! கரிகாலா, உனக்கு வந்த தீவினைதான் என்ன? கொல்லப் போகின்றீர்களா? பார்க்கிறேன் ஒருகை! யான் ஊரிலிருந்தால் இது நடந்திருக்குமா? வஞ்சகர்கள்! என்னையும் வஞ்சகத்தால் ஒருவேளை சிறையிட்டிருந்தாலும் இட்டிருப்பார். அப்படி நேர்ந்திருந்தால் எங்களை யார் விடுவிப்பார்கள்? நல்ல வேளை! இந்த மட்டும் யான் வெளியில் இருக்க நேர்ந்துள்ளது. எங்ஙனமாவது முயன்று இவர்களை விடுவித்துவிட வேண்டும். பாவிகள்! எப்போது கொல்லப் போகின்றூர்களோ? 'வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி யுடைவது போல' நாம் விடுவிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு, விடுவிக்க வரும்போது அவர்கள் கொல்லப்பட்டிருந்தால் என்ன செய்வது?

காவலருள் ஒருவன் அவர்களுக்கு நம்பிக்கையான வன் என்ருல், மற்றையோர் நல்லவர்கள் என்று ஏற்படுகிறது. அவர்களுள் ஒருவனை விரைவில் நம் வசப்படுத்த வேண்டும். அவனைக்கொண்டு சிறைச் சாலைச் செய்திகளை அவ்வப்போது அறிய வேண்டும். அவர்களுக்கு நம்பிக்கையான ஆள் யார் என அறிய வேண்டும். அவன் செயலையும் அவர்கள் செயலையும் அந்த நமது ஆள் மூலமாக ஆராய வேண்டும். அவர்கள் ஏமாந்து போகும்படி தக்க சமயத்தில் நம் மவர்களைக் காப்பாற்றிவிட வேண்டும். அப்பால் வேற்றரசர் துணைகொண்டு கரிகாலனை அரியணை யேற்றிவிடலாம். ஆம்! அப்படித்தான் செய்ய வேண்டும்! (போகிருர்.)

## அங்கம் : ஒன்று
## களம் : மூன்று

# கரிகாலன் சிறைவீடு

**இடம்** : *சிறைக் கோட்டம்.*

**காலம்** : *இரவு.*

**உறுப்பினர்** : *கரிகாலன், அவனது தாயார், இரும்பிடர்த்தலையார், சிறைக் காவலர், இரும்பிடர்த்தலையாரது ஆட்கள்.*

*[சிறைக் கூடத்திற்குள் ஓரறையில் கரிகாலன். அடுத்த அறையில் அவனது தாயார். இருவரும் இடையிலுள்ள ஒரு பலகணி மூலம் பேசுகின்றனர்.]*

**கரிகாலன் :** அம்மா, நாம் சிறைப்பட்டு எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டனவே! நாம் இதினின்றும் தப்பிப் போக வழி ஒன்றும் இல்லையா? என்னால் வாளா இருக்க இயலவில்லையே! கதவைத் திறக்கவே மாட்டேன் என்கிறார்களே! உணவு முதலியவற்றைச் சாளரத்தின் வழியாக அன்றோ உள்ளே போடுகிறார்கள்? எக்காரணத்தாலாவது ஒருவன் உள்ளே வந்தால், அவனை எப்படியாவது கொன்று என் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வேனே!

**தாயார் :** குழந்தாய்! உன் வயதையும் வல்லமையையும் அறியாமல் ஏதேதோ பேசுகின்றாயே! சிறைப்பட்டபோது உனக்கு வயது ஏழு. அதன் பின் இப்போது மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆதலால் இப்போது உனக்கு வயது பத்து. யாராவது ஒருவன் கதவைத் திறந்துகொண்டு வந்தால் நீ அவனை என்ன செய்துவிடுவாய்? ஆதலால் குழந்தாய், பொறு! உன் மாமன் எப்படியும் வந்து நம்மை விடுவித்துவிடுவார்! நம்மைச் சிறைப்படுத்திய போது புலவராகிய அவர் தமது புலமையைக் காட்டிப்

பரிசு பெறுதல் வேண்டி வேற்றரசர்பால் சென்றிருந்த னர். அவர் இன்னும் திரும்பவில்லை போலும்! ஒரு கால் திரும்பி வந்து நம்மை விடுவிக்க முயற்சி செய்து கொண்டிருந்தாலும் இருக்கலாம். ஆதலால் சற்றுப் பொறுத்திருந்தால் நன்மை ஏற்படும்.

**கரிகாலன் :** என்றால் அதுவரை காத்திருக்க இய லாது. இப்படியே சொல்லிச் சொல்லிக் காலத்தைக் கடத்திவிட்டீர்கள். இனி நான் பொறுக்க இயலாது. இந்தச் சிறையிலிருந்து தப்பிச் செல்ல வழியே கிடை யாதா ?

**தாயார் :** உன் மாமன் வந்து விடுவிக்கிறவரையில் வழி ஒன்றும் இருப்பதாகக் காணப்படவில்லை.

**கரிகாலன் :** சரி, இருக்கட்டும். ஆ! இதென்ன சத்தம்? சிறைக்கு வெளியில் 'தொப் தொப்' என்று ஏதோ விழுகின்றனவே !

**தாயார் :** ஆம். விழுகின்றன ! என்னவென்று பார்க் கிறேன். சிறைச்சாலையின் பக்கமாக விறகுகளைக் கொணர்ந்து போடுகிறார்கள். இது எதற்கு? சிறைச்சாலைக்குத் தீ வைத்து விடுவார்களோ ? அப்படியானால் நம்மை என்ன செய்வார்கள்? நம்மை யும் சேர்த்து எரித்துவிடுவார்களோ?

**கரிகாலன் :** என்ன? தீயிட்டு எரிக்கப் போகின்றார் களா? இவ்விலங்கை இப்பலகணியின்மீது வீசி இதை இப்போதே உடைத்து வெளிப்படுகிறேன், பாருங்கள் ! (விலங்கால் பலகணியை வீசி அடிக் கிறான்.)

**காவலன் :** புலிக்குட்டீ, சீறுகிறாயா ? சீறு! சாளரக் கம்பிகளைப் பெயர்க்கப் பார்க்கின்றாயா? பார்! நன் றாகப் பார்! தினமும் நீ இப்படித்தான் செய்கிறாய். என்ன பயன் கண்டாய்? இன்றோடு உன் ஆயுள் முடிந்தது. அதுவரை துள்ளுவதெல்லாம் துள்ளு! ஒரு சிறுவனுக்கு இவ்வளவு ஆண்மையா ?

**கரிகாலன் :** ஏ, காவலாளி நாயே, உள்ளே வந்து குரை! நான் புலிக்குட்டியா அல்லவா என்பதைக் காட்டுகிறேன்! இந்தப் பலகணியை உடைத்து வெளியேறுகிறேனு, இல்லையா, பார்ப்போம்!

**காவலன் :** என் வேலை முடிந்துவிட்டது! தீ வைத்தாகிவிட்டது! இனி நீங்கள் எப்படியாவது தொலையுங்கள்! (போகிருன்.)

*[கரிகாலனது அன்னையிருக்கும் அறையிலுள்ள கள்ளக் கதவு ஒன்று திறக்கப்படுகிறது. அதன் வழியாக இரும்பிடர்த்தலையார் அறைக்குள் வருகின்ருர். தாயாரும் அவரும் பலகணிவழியாகக் கரிகாலனைப் பார்க்கின்றனர்.]*

**இரும்பிடர்த்தலையார் :** மருக, நீ அங்கா இருக்கின்றனை? விலங்கால் சாளரத்தை உடைக்கப் பார்க்கின்ருயா? அது முடியாது! அதைவிட்டு அந்தப் பலகணிக்குச் சற்று மேலே முளை ஒன்று இருக்கிறதல்லவா? அதை வலப் பக்கமாகத் திருகிஞல் அங்கே வழி உண்டாகும். ஆ! அது உயரத்தில் இருக்கிறதே! நீ எப்படி எட்டுவாய்? பாவிகள் வெளியில் தீ வைத்து விட்டார்களே! அது மூண்டு வருவதற்குள் நீ தப்பி வெளிவரவேண்டுமே! ஆ! கடவுளே!

**கரிகாலன் :** அந்த முளையா? அந்தப் பலகணியின் மேல் ஏறிஞல் அது சுலபமாக எட்டும். இதோ, கீழே சுவரில் ஒரு சிறு பள்ளம் இருக்கிறது. அதில் காலை வைத்து எப்படியாவது பலகணியின்மேல் ஏறி அந்த முளையைத் திருகுகிறேன். வழி உண்டான பிறகு என்ன செய்ய வேண்டும்?

**இரும்பிடர்த்தலையார் :** அந்த வழி சுரங்க வழி. இருட்டாயிருக்கும். அதன் வழியாகக் கொஞ்சதூரம் சென்ருல் அது ஒரு முற்றத்தில் கொண்டுபோய்

விடும். அந்த முற்றத்தில் ஒரு மூலையில் ஒரு கதவு காணப்படும். அதன் கதவு தாளிடப்பட்டிருக்கும். அதைத் திறந்து வெளியிற் சென்றால் அங்கே வெளியிடம் உள்ளது. அங்கே நான் உனக்காகக் காத்திருப்பேன். நான் உன் தாயாரை அழைத்துச் செல்கிறேன். நீ விரைந்து அங்கே வா! அந்தச் சாளரத்தின்மேல் உன்னால் ஏறமுடியுமா?

**கரிகாலன் :** முடியும். இதோ ஏறுகிறேன்!

*[கரிகாலன் மிக்க துன்பத்துடன் சாளரத்தின் மீது ஏறுதல். அவன் ஏறியதும்—]*

**இரும்பிடர்த்தலையார் :** நல்லது! நீ ஏறிவிட்டாய்! இனி விரைந்து வா! ஆ! அறைக்குள் புகை! விரைந்து திருகு! ஆ! புகை சூழ்ந்துகொண்டு விட்டதே!

**கரிகாலன் :** திருகிவிட்டேன்! வழி யுண்டாகிவிட்டது!

**இரும்பிடர்த்தலையார் :** சரி, விரைந்து வா, செல்கிறேன்.

*[இருவரும் தங்கள் காரியத்தில் விரைதல்.]*

**கரிகாலன் :** ஆ! எவ்வளவு இருட்டு! இதோ முற்றம்! அதோ அம்மூலையில் கதவு! அந்தப் பக்கமாகவும் புகை வருகிறதே! அங்கும் நெருப்பு வைத்திருக்கிறார்கள்! எப்படிப் போவது? கதவைத் திறந்து பார்க்கிறேன். (கதவைத் திறத்தல்.)

ஆ! வழியில் நெருப்பு! எப்படிப்போவது? எப்படியாவது போயாகவேண்டும். இதோ ஒரு மரக்கட்டை. பாதி எரிந்தும் பாதி எரியாமலும் இருக்கிறது. அப்படியே அங்கே ஒரு கட்டை. இதில் ஏறி அதன் மேல் குதித்து அப்பால் உள்ள தரையில் குதிக்க வேண்டும். வேறு வழியில்லை. அப்படியே செய்கிறேன்.

*[கட்டைகளின்மேல் குதித்துச் செல்லுதல். கடைசியாகக் குதித்தவிடத்தில் திடீரென ஒரு கரித்துண்டு தெறித்து விழுதல்.*

*அதன்மேல் கரிகாலன் கால் வைத்துவிடுதல். கால் பொசுங்கவே கீழே விழுதல். இச்சமயத்தில் தாயாருடன் இரும்பிடர்த்தலையார் அங்கே வருதல்.]*

**இரும்பிடர்த்தலையார் :** ஆ! குழந்தாய்! வந்தாயா? வா!

**கரிகாலன் :** ஆ! நெருப்பின்மேல் காலை வைத்து விட்டேன்! (கீழே விழுதல்)

**இரும்பிடர்த்தலையார் :** ஆ! நெருப்பில் வைத்து விட்டாயா! விரைந்து போக வேண்டுமே! வா உன்னைத் தூக்கிச் செல்கிறேன்.

*[தூக்கிச் செல்லுதல். வழியில் காவலர் நால்வர் மறித்தல். இரும்பிடர்த்தலையார் அந் நால்வரோடு வாட்போரிடுதல். விரைவில் ஒருவன் குத்துண்டு விழுதல். அவன் வாளை எடுத்துக் கரிகாலன் மற்றொருவன் காலை வெட்டி வீழ்த்துதல். அவன் வாளைக்கொண்டு அரசியும் போரில் இறங்குதல். விரைவில் மிகுந்துள்ள இரு காவலரும் வீழ்தல். மூவரும் அப்பாற் செல்லுதல்.]*

**இரும்பிடர்த்தலையார் :** பெரும்பாலும் தப்பிவிட்டோம். அதோ அந்த மூலைக்குச் செல்லவேண்டும். அங்குள்ள மதில்மேல் ஏறி அப்பால் குதித்துச் சென்று விட்டால் தப்பியாகிவிட்டது வாருங்கள் விரைந்து செல்லுவோம்! (செல்லுதல்.)............தப்பி வெளி வந்துவிட்டோம்! கருவூரில் எனது நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவருடைய வீட்டில் நீங்கள் தங்கியிருக்கலாம். இனி நீ அரசு எய்துவதற்கு ஆவனவற்றைச் செய்யவேண்டும். மருக, நீ அங்கு ஒருவரும் உன்னை இன்னார் என்று அறிந்துகொள்ளாமல் எச்சரிக்கையாக நடந்து கொள்ளவேண்டும். ஏதாவது தாறுமாறாக நடந்து காரியத்தைக் கெடுத்து விடாதே! பகைவரது ஒற்றர் அங்கு இருக்கக்கூடும்! சாக்கிரதையாய் இரு.

**கரிகாலன் :** நல்லது மாமா! தாங்கள் கூறியவாறே நடக்கின்றேன். (யாவரும் போதல்.)

## அங்கம் : ஒன்று
## களம் : நான்கு

# கழுமலத்து விழுமியோர்

**இடம்** : *கழுமலத்து (சீர்காழி)ப் பொதுமன்றம்*

**காலம்** : *காலை*

**உறுப்பினர்** : *கழுமலத்து விழுமியோர், கரிகாலனது தாயத்தார், யானை, பாகன், இரும்பிடர்த் தலையார் முதலியோர்.*

*[ மன்றத்தில் விழுமியோர், கரிகாலன் தாயத்தார், பொதுமக்கள் ஆகியோர் கூடியுள்ளனர். இரும்பிடர்த்தலையார் மாறுவேடத்தில் கூட்டத்துள் கலந்து நடப்பதைக் கவனித்தல். ]*

**தாயத்தாருள் முதல்வர் :** பெரியோர்களே, நமதரசர் சென்னி யிறந்து ஆறுண்டுகள் ஆகின்றன. அவரது மகனும் மனைவியும் எங்கோ மறைந்துவிட்டனர். அவர்கள் செய்தி ஒன்றும் தெரிந்திலது. இத்துணைக் காலமும் நாங்கள் முடிசூடாமலே ஆட்சி புரிந்து வந்தோம். சென்னியினது மகன் வரவை எதிர் பார்த்தே அவ்வாறு செய்தோம்! இனி அவன் வருவான் எனத் தோன்றவில்லை. ஆதலின், எங்களில் யாராவது ஒருவருக்கு நீங்கள் முடிசூட்டுவீர்களாக.

**கழுமலத்துப் பெரியோருள் ஒருவர் :** அரசகுலத்தவரே, அரசரிறந்தபின், நீங்கள் அவரது மனைவி மக்களைச் சிறைப்படுத்தி அரசைக் கவர்ந்தீர்கள் என்றல்லவா கேள்வியுற்றோம் ? அதன் உண்மை யாதோ ?

**தாயத்தாருள் இரண்டாமவர் :** சிவ சிவ! இது யார் கட்டிவிட்ட கதை ? அப்படிக் குற்றம் சுமத்துகிறவன் இங்கே முன்வந்து பேசட்டும். ஒளிவு மறைவு ஏன் ? பகையரசர் யாவரோ அவர்களை ஒளித்து வைத்து இவ்வாறு கதைகட்டி யிருக்கின்றார்கள். இதன் மூலமாக எங்களையும் ஒழித்துவிடப் பார்க்கின்றார்கள்.

விழுமியோராகிய நீங்கள் இருக்கும்வரை அரசு சோழ குலத்தைவிட்டு அன்னியர்பால் செல்லாதென்பதை அவர்கள் அறிந்திலர்போலும்!

**விழுமியோருள் தலைவர்:** அது கிடக்க. இப்போது எங்களை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?

**தாயத்தாருள் மூன்றுமவர்:** சீரியோராகிய நீங்கள் எங்கள் தலைநகரில் வந்திருந்து எங்களில் ஒருவருக்கு முடிசூட்டுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**விழுமியோருள் ஒருவர்:** உங்களில் ஒருவருக்கா...? அது இன்னார் எனத் தீர்மானிக்கப்பட வேண்டாமா?

**தாயத்தாருள் நான்காமவர்:** எங்களில் ஒருவர் நாடு முழுவதும் ஆளுவது எப்படி நியாயமாகும்? நாட்டை நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பிரிவை ஒப்படையுங்கள்.

**விழுமியோருள் ஒருவர்:** நாட்டைப் பிரிப்பது நல்லதல்ல. உங்களுள் யாராவது ஒருவர் தலைமை தாங்கி நிற்க, மற்றையோர் அவருக்குட்பட்டு நாட்டின் பகுதிகளை ஆளுவதே தகுதியாகும்.

**தாயத்தாருள் முதல்வர்:** ஆம். அதுவே சரி. நீங்களே எங்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் நாட்டை ஒப்படையுங்கள்.

**விழுமியோருள் முதல்வர்:** அரசரை எடுக்கவும் வைக்கவும் எங்கட்கு அதிகாரமேது? வேண்டுமானல் நமது தொன்றுதொட்ட முறையைக் கையாளலாம்.

**தாயத்தாருள் இரண்டாமவர்:** அம்முறைதான் யாதோ?

**விழுமியோருள் முதல்வர்:** நமது பட்டத்து யானையின் கையில் பூமாலையைக் கொடுத்து அது யாருக்கு மாலையிட்டுத் தேர்ந்தெடுக்கிறதோ, அவருக்கே நாட்டையளிப்பதுதான் அம்முறை.

**தாயத்தாருள் மூன்ருமவர் :** ஓ, அதுவா ! அது பெரும் பாலும் அரசகுலத்தாரையே தேர்ந்தெடுக்கு மாகையால் அது தக்கதே.

**தாயத்தாருள் நான்காமவர் :** (தமக்குள்) யானை தங்களை நன்கறியுமாதலால் தங்களுள் ஒருவரையே தேர்ந்தெடுக்குமென நமது நண்பர்கள் நம்புகின்றனர். அவ்வகையில் அது ஏன் என்னைத் தேர்ந்தெடுக்கலாகாது ? சிறந்த அரசவுடைகளை அணிந்து அதன்முன் போய்நின்ருல் காரியம் எளிதில் முடிந்துவிடுகிறது. இவ்வாறே மற்றவர்களும் செய்யக் கூடும். ஆனல் என்ன ? நமக்கும் ஒரு வாய்ப்பு உள்ளதன்ரே ? (வெளிப்படையாக) பெரியீர், இந்த நுமது ஏற்பாட்டை எவரும் மறுக்க இயலாதுதான்.

**விழுமியோருள் தலைவர் :** நன்று ! நாளையே நன்னாளாயுள்ளது. யானையை அப்பணியில் ஏவுவோம். இனி மன்றங் கலையலாமன்ரே ?

**தாயத்தார் :** நன்று. அங்ஙனமே !

*[கூட்டங் கலைகின்றது. இரும்பிடர்த் தலையார் பின்வருமாறு எண்ணிக்கொண்டு அவ்விடம் விட்டுச் செல்லலானுர்.]*

**இரும்பிடர்த்தலையார் :** (தமக்குள்) நாட்டுக் குடிகளும் பிரபுக்களும் தங்கள்மீது நல்லெண்ணமில்லாமல் இருப்பது கண்டு, இவர்கள் இக்கழுமலத்திற்கு வந்து, இப் பெரியோர்களது சம்மதத்தைப் பெற்று அரசராக முயற்சிக்கின்றனர். இது ஒரு நல்ல சூழ்ச்சியே. தாம் அரசகுடியினராதலால் தம்மில் ஒருவரையே யானை தேர்ந்தெடுக்குமென இவர்கள் மனப்பால் குடிக்கின்றனர். அதனலேயே விழுமியோர் கூறியதும் அவ்வேற்பாட்டிற்கு ஒத்துக் கொண்டனர். யானை ஒருகால் இவர்கள் கருதுமாறு செய்தலும் கூடும். ஆனல், இச்சமயத்தில் கரிகாலன் அதன் முன் நின்ருல் அது நிச்சயம்

அவனையே தேர்ந்தெடுக்கும். ஏனெனில் அது அவனிடம் நிரம்பப் பழகியுள்ளது. நாளைக்குள் கருவூரினின்று அரசகுமாரனை இங்குக் கொணர்வது இயலாத காரியம். என்ன செய்வது ?...யானைப் பாகனைக் கொண்டு யானையைக் கருவூருக்குச் செலுத்துமாறு செய்தால்........? ஆம். அப்படித் தான் செய்யவேண்டும். அவன் பழைய அரச குடும்பத்தாரிடம் பற்றுடையவன். நான் சொன் னால் தட்டமாட்டான்.

*[தூரத்தில் பாகன் வருதல்.]*

அதோ, அவனும் வருகிருன். தாயத்தார்கள் அவனைக் கண்டு அவனைத் தங்கள் வசப்படுத்து முன் நாம் முந்திக்கொண்டு விடவேண்டும். அவனும் அருகில் வந்துவிட்டான். அவனைக்கண்டு பேசு கின்றேன்.

*[பாகனுடன் பேசுகின்ருர்.]*

(பாகனை நோக்கி) பாகனே, சுகமா ?

**பாகன் :** யார் அது ? அடையாளந் தெரியவில்லையே?

**இரும்பிடர்த்தலையார் :** (வேடத்தைச் *சிறிது கலைத்து*) இப்போது தெரிகின்றதா யார் என்று ?

**பாகன் :** ஆ ! புலவரா...? ஏன் இந்த வேடம் ?

**இரும்பிடர்த்தலையார் :** (வேடத்தை முன்போல் *சரிப்* படுத்திக்கொண்டு) உரக்கப் பேசவேண்டாம். ஒரு காரணமாகவே இவ்வேடம் புனைந்துள்ளேன். நமது சென்னியின் மனைவி மக்களைப்பற்றிய செய்தி ஏதேனும் அறிவையோ ?

**பாகன் :** யான் ஒன்றும் அறியேன். அரசர் இறந்த பின் அமைச்சர் என்னை யழைத்து யானையுடன் இங்கிருக்குமாறு கட்டளையிட்டார். அங்ஙனமே இருந்து வருகிறேன். அரசியும் குமரரும் காணமற் போய்விட்டதாகச் சொன்னார்கள். தாயத்தார் நால் வர் இங்கு வந்துள்ளனர். அவர்கள் அரசருக்குப்

பிரதிநிதியாய் இருந்து ஆட்சி நடத்தி வருகின்றார் களாம். அவர்கள் அரசியையும் குமரரையும் சிறைப் படுத்தியிருப்பதாக இரகசிய வதந்தி உலவுகிறது. என்ன நடந்ததோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

**இரும்பிடர்த்தலையார்:** அந்த வதந்தி உண்மையே. அவர்களைச் சிறைப்படுத்திவிட்டு இவர்கள் அரசைக் கவரத் திட்டமிடுகின்றனர்.

**பாகன்:** ஆ! அப்படியா...? பாவிகள்!

**இரும்பிடர்த்தலையார்:** அவர்களைச் சிறையிட்டது மட்டுமல்ல! சிறைக்குத் தீ வைத்து அவர்களைக் கொல்லவும் முயன்றனர். உறையூரில் சிறை தீப் பட்டதை நீ அறிவாயோ?

**பாகன்:** ஆம்! அறிவேன். அச்சிறையில்தான் இருவரையும் சிறை வைத்திருந்தார்களோ?

**இரும்பிடர்த்தலையார்:** ஆம்!

**பாகன்:** கொடுமை! கொடுமை! கொடும்பாவிகள்! இவர்கள் எக்கதி அடைவார்களோ?

**இரும்பிடர்த்தலையார்:** நல்ல வேளையாகச் சமயத்தில் அவர்கள் செய்தியறிந்து நான் காப்பாற்றி விட்டேன்!

**பாகன்:** ஆ! காப்பாற்றினீர்களா? அவர்கள் இப் போது எங்கு இருக்கின்றனர்?

**இரும்பிடர்த்தலையார்:** இந்தத் தாயத்தார்க்கு எட்டாத விடத்தில் பத்திரமாயிருக்கின்றனர். நீ மனது வைத்தால் அரசகுமாரனுக்கு அரசு கிடைக்குமாறு செய்யக் கூடும்.

**பாகன்:** நான் மனது வைத்தால் அரசைக் கிடைக்கு மாறு செய்யக் கூடுமா? அது எப்படி?

**இரும்பிடர்த்தலையார்:** ஆம்! நிச்சயமாக நீ அப்படிச் செய்யக் கூடும்? நான் எப்படி என்று சொன்னால் நீ செய்வாயா?

**பாகன் :** அதென்ன, அப்படிச் சொல்கிறீர்கள்? என் அருமை எசமானரது மகனுக்காக என் உயிரையும் கொடுப்பேனே! யான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்! உடனே செய்கிறேன்!

**இரும்பிடர்த்தலையார் :** முதலாவதாக நீ அரசகுமாரர் உயிரோடிருப்பதையும், நான் அவர்களைக் காப்பாற்றியதையும் பற்றி வெளியில் சொல்லக்கூடாது. இரண்டாவதாக, நீ தாயத்தார் வலையில் விழக் கூடாது. இவை யிரண்டையும் செய்வதாக நீ வாக்களிப்பாயா?

**பாகன் :** என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? என்பேரில் அவநம்பிக்கையா? வாக்களிப்பதென்ன? சத்தியமும் செய்து தருகிறேன்!

**இரும்பிடர்த்தலையார் :** வேண்டாம்! உன் வாக்கில் எனக்கு நம்பிக்கையுண்டு. இனி நீ என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறேன், கேள் : இங்குள்ள பெரியோர்கள் நாளை நமது தொன்று தொட்ட வழக்கப்படி யானையை ஏவி அரசுக்குரியாரைத் தேர்ந்தெடுத்து வர அனுப்பப் போவது உனக்குத் தெரியுமல்லவா?

**பாகன் :** ஆம். இப்போது அவர்கள் பேசக் கேட்டேன்.

**இரும்பிடர்த்தலையார் :** அவர்கள் அதனை அப்படி விடும்போது தாயத்தார் நால்வரும் அது தங்களுக்கே மாலை போட வேண்டுமென்று ஏதாவது சூழ்ச்சி செய்யக் கூடும். அதற்கெல்லாம் நீ இணங்காமல் யானையைக் கருவூருக்குச் செலுத்தி வரவேண்டும். அப்புறம் அரசகுமாரனுக்கு அரசைக் கொடுத்த பெருமை உன்னைச் சாரும்!

**பாகன் :** ஆகா! அப்படியே செய்கிறேன். அவர்கள் எங்கே யிருக்கிருர்கள் என்பதைச் சொல்ல மாட் டீர்களா?

**இரும்பிடர்த்தலையார் :** நான் கருவூருக்கு என்று சொன்னது காதில் விழவில்லையா? அங்கு வந்தால் நீ நேரில் அரசகுமாரனைக் காண்பாய்.

**பாகன் :** நல்லது. அப்படியே செய்கிறேன்!

**இரும்பிடர்த்தலையார் :** தாயத்தார் வலையில் விழ மாட்டாயே?

**பாகன் :** அவர்கள் இலட்சம் கொடுத்தாலும் அவர்கள் பேச்சுக்கு இடங் கொடேன்! இது சத்தியம்!

**இரும்பிடர்த்தலையார் :** பார்த்தாயா? நான் உன்னைச் சத்தியமா செய்யச் சொன்னேன்? உன் வாக்கில் எனக்கு நம்பிக்கை யுண்டென்று சொன்னேனே, மறந்தாயா?

**பாகன் :** ஏதோ செய்து விட்டேன்! அதனாலென்ன?

**இரும்பிடர்த்தலையார் :** நல்லது. இன்னொரு செய்தி: தாயத்தார் தனித்தனியாக உன்னிடம் வந்து யானை தமக்கு மாலை போடுமாறு செய்ய வேண்டுமெனக் கேட்பார்கள். அதற்காகப் பொருளும் கொடுப்பார்கள். நீ செய்தியொன்றையும் அறியாதவன் போலவும் நடிக்க வேண்டும்! அதற்காக அவர்களது பொருளைப் பெற்றுக்கொள்! பிறகு யானை செல்லும் போது ஏதாவது தந்திரம் செய்து அதைக் கருவூருக்குச் செல்லுமாறு செய்ய வேண்டும். என்ன நான் சொல்வது தெரிகிறதா?

**பாகன் :** தெரிகிறது! நன்றாய்த் தெரிகிறது! அப்படியே செய்கிறேன். யானைக்குச் செய்திகளைக் கூறும் இரகசியக் குறிப்புகள் உள்ளன. அவற்றின் மூலம் அப்படியே செய்கிறேன்!

**இரும்பிடர்த்தலையார் :** நல்லது. நான் சென்று வரட்டுமா?

**பாகன் :** நல்லது. சென்று வாருங்கள். வணக்கம்!

## அங்கம் : ஒன்று
## களம் : ஐந்து

# கருவூர்த் தெருவில் களிறு

**இடம்** : *கருவூர்த் தெரு.*

**காலம்** : *காலை.*

**உறுப்பினர் :** *களிறு, களிற்றினைப் பின்பற்றிச் செல்லுவோராகிய காவலர், பாகன், இரும்பிடர்த்தலையார், கரிகாலன், கரிகாலன் தாய், தெரு மக்கள்.*

*[ யானை தெருவில் வருகின்றது. காவலர், பாகன் ஆகியோர் அதனைப் பின்பற்றி வருகின்றனர். ]*

**தெரு மக்களுள் ஒருவர் :** ஏது, புதியதொரு யானை இங்கு வருகின்றது? ஆ! எவ்வளவு பெரிய யானை! மிக நன்றாக அலங்கரிக்கப்பட் டிருக்கிறதே! அதனைத் தொடர்ந்து பின்னால் பலர் வருகின்றார்கள். அவர்களது உடைகளை நோக்கின் அவர்கள் அரச காவலர்கள் போலக் காணப்படுகிறார்கள். இது அரசனது பட்டத்து யானை போலும்! இதன் கையில் அழகிய பூமாலை ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். இது ஏன் இங்கு வருகின்றது?

**தெரு மக்களுள் மற்றொருவர் :** இப்போது நமது சோணாடு அரசரால் அல்லாமல் அரசர் பெயரால் அவரது தாயத்தாரால் ஆளப்படுகிறது அல்லவா? அவ்விதம் அரசர் இல்லாமல் இருத்தல் ஆகாதென்று கருதித் தொன்று தொட்ட வழக்கப்படி பட்டத்து யானையைக் கொண்டு அரசராவதற்கு உரியவரைத் தேர்ந்தெடுக்குமாறு செய்திருக்கிறார்கள். அதுவே இந்த யானை இங்கு வருவதற்குக் காரணம்.

**முதல்வர் :** இந்த யானை இங்கே யாரையாவது தேர்ந்தெடுத்தால் அவர்களை அரசராக்கி விடுவார்களா?

**இரண்டாமவர் :** ஆம் !

**முதல்வர் :** அது யாராவது ஒரு கீழ்மகனைத் தேர்ந்தெடுத்து விட்டால்... ?

**இரண்டாமவர் :** அது ஒருபோதும் அப்படிச் செய்யாது ! தெய்விக சக்தி அதனிடம் பொருந்தி யிருக்கின்றது. அது தக்காரையே தேர்ந்தெடுக்கும். அன்றியும் அரசனாவதற்கு அதிர்ஷ்டமுள்ளவனுக்கன்றோ அப்பதவி கிட்டும் ? கீழ் மக்கட்கு அது கிட்டி விடுமா ? 'நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து அஞ்சுவதே மாந்தர் தொழில்.' இரு நிதியமோ புண்ணியம் உடையவர்களுக்கே கிடைக்கும். பண்டைப் பிறவிகளில் அறம் பல புரிந்தாலன்றி அரச பதவி கிட்டாது.

**முதல்வர் :** நன்று. இதன் பின் சென்று இது யாரையாவது இங்குத் தேர்ந்தெடுக்கின்றதா என்று பார்ப்போம்.

*[ இருவரும் யானையைப் பின் தொடர்தல். யானை கரிகாலன் வசிக்கும் தெரு வழியே செல்கிறது. கரிகாலன் தெருவில் பல சிறுவருடன் விளையாடிக்கொண்டிருத்தல். ]*

**விளையாடும் சிறுவருள் ஒருவன் :** ஏ, கரிகாலா, அதோ பார், ஒரு பெரிய யானை வருகின்றது. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே !' எவ்வளவு பெரிய யானை ! ஆ ! என்ன அலங்காரம் ! அதன் முகத்தில் உள்ள பட்டினைப் பார் ! அதில் பொன் சரிகை எவ்வளவு அழகாகப் பளபளவென்று மின்னுகிறது ! அதன் கையிலுள்ள மாலையைப் பார் ! அதைப் பின்பற்றி எவ்வளவு காவலர்கள் ! அவர்களுடைய கத்திகள் எப்படிப் பளபளவென்று மின்னுகின்றன பார் ! பார்க்கப் பயமாய் இருக்கிறது. இந்த யானையை அவர்கள் இங்கே ஏன் ஓட்டி வருகின்றார்கள் ?

**கரிகாலன் :** ஆ! இது நமது பட்டத்து யானையல்லவா? அதனருகிற் சென்று அதனை அழைக்கின்றேன். அதனருகில் அதோ, நமது பாகனும் வருகின்றனே! நமது மாமன் எங்கேயோ காணுமே! அவர் இருந்தால் இப்போது எவ்வளவு நன்ருய் இருக்கும்! இதோ யானை நெருங்கி விட்டது! அதனருகில் செல்கின்றேன்.

*[எதிரே போய் நிற்றல்.]*

ஏ, களிறே, யான் யாரென்று தெரிகின்றதா உனக்கு?

*[களிறு நின்று பார்க்கின்றது. பிறகு மாலையிட்டுக் கரிகாலனைப் பிடரிமீது ஏற்றி வைத்துக்கொண்டு செல்கிறது.]*

**தெரு மக்கள் :** ஆ! யானை அரசனைத் தேர்ந்தெடுத்து விட்டது. இச்சிறுவன் யாவனே? இவனுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பாருங்கள்!

**மக்களுள் ஒருவன் :** எங்கேயோ கிடந்த ஏழைக்கு வந்த ஏற்றத்தைப் பார்!

**மற்ருெருவன் :** அப்படிச் சொல்லாதே! குப்பையைக் கிளறி மாணிக்கத்தைக் கண்டெடுத்ததுபோல, யானை இவனைத் தேர்ந்தெடுத்திருக்கின்றது! யானையினிடத்தில் பூமாலையைக் கொடுத்து அரசனைத் தேர்ந்தெடுக்கும் வழக்கத்தைத் தெரியாமலா ஏற்படுத்தியிருக்கிருர்கள்? இவ்விதத் தெய்விக சக்தி இருப்பதைக் கண்டுதான் ஏற்படுத்தியிருக்கிருர்கள்! இச் சிறுவன் இவ்வூரை யடைந்து உத்தேசமாக நான்காண்டுகள் ஆகின்றன. இச்சிறுவனது வனப்பைப் பார்த்தனையா? இவனது விளையாட்டுச் செயல்களை நான் கவனித்திருக்கிறேன். எந்த விளையாட்டிலும் இவனே முதன்மையாய் நிற்கின்ருன். கல்வியிலும் இவன் மிகச் சிறந்து விளங்குகின்ருன். தன் வயதுச் சிறுவர் எல்லாரையும், ஏன்

சிறிது வயது அதிகமாயுள்ளவர்களையும் கூட இவன் ஓட்டம், மற்போர், வாட்போர் முதலியவற்றில் தோற்கடித்து விடுகின்றான். சிறுவர் கூட்டங்களில் எப்போதும் தலைமை தாங்கி நிற்பவன் இவனே! அவர்களுக்குள் ஏற்படும் வழக்குக்களைத் தீர்த்து வைப்பவனும் இவனே! நீதி மன்றத்திலேனும் நீதி தவறும்! இவனது தீர்ப்புக்களில் நீதி தவறாது! அப்போதே யான் சிந்தித்ததுண்டு, இவன் யாரோ அரச குமாரனாய் இருக்க வேண்டுமென்று!

**யானையைப் பின்பற்றிய காவலர்:** யானை தேர்ந் தெடுத்த அரசருக்கு — ஜே! சோழவரசை மேற் கொள்ள வந்த செம்மலுக்கு — ஜே! தாரணியைக் காக்க வந்த தீரருக்கு — ஜே! அரசகுலத்தை விளக்க வந்த அண்ணலுக்கு — ஜே! மன்னர் மரபை விளக்க வந்த வீரருக்கு — ஜே!

*[இரும்பிடர்த்தலையார் எங்கிருந்தோ வந்து கூட்டத்தில் சேர்ந்துகொள்ளுகிறார். யாவரும் உறையூர் நோக்கிச் செல்கின்றனர்.]*

## அங்கம் : இரண்டு
## களம் : ஒன்று

# கரிகாலன் அரசெய்தல்

**இடம்** : *உறையூர் அரண்மனையில் அத்தாணி மண்டபம்.*

**காலம்** : *காலை.*

**உறுப்பினர்** : *கரிகாலன்; ஐம்பெருங்குழுவினர், எண்பேராயத்தார், கருங்குழலாதனார், முடத்தாமக்கண்ணியார், கடியலூர் உருத்திரங் கண்ணனார், நகர மாந்தர் முதலியோர்.*

*[அவையில் யாவரும் கூடியுள்ளனர். கரிகாலன் வரவு எதிர்பார்க்கப்படுகின்றது.]*

**நகர மக்களுள் ஒருவர் :** என்றுங் கண்டிராதவாறு இன்று நமது உறையூர் எழில் பெற்று இலங்குகின்றது. வீதிகளிலெல்லாம் பந்தரிட்டுப் பழமணல் மாற்றிப் புது மணல்பரப்பி, பூரண கும்பம், பொலம் பாலிகை, பாவை விளக்கு முதலியவற்றை வைத்தற்குரிய இடங்களில் முறைப்படி வைத்து அழகு செய்திருக்கின்றார்கள். பந்தர்களில் காய்க் குலைக் கமுகும், பூங்கொடி வல்லியும், வாழையும், கமுகும் கட்டுதற்குரிய முறைப்படி கட்டப்பட்டுள்ளன. சிவபெருமான் முதலாக நாற்சந்திப்பூதம் ஈறாக எல்லாத் தெய்வங்களின் கோயில்களிலும் விழாக்கள் நடைபெறுகின்றன.

அரச வமிசத்தினரும், ஐம்பெருங் குழுவினரும், எண் பேராயத்தாரும் எட்டிக் குமரரும் தெருக்களில் அணி யணியாய்ப் பவனிவருங் காட்சியின் மாட்சி கண்களுக்கு விருந்தளிக்கின்றது. கலைகளில் வல்ல புலவர் பட்டி மண்டபங்களிற் கூடியிருந்து வாது

புரியும் வன்மை அளவிடற் கரிய தொன்று. மன்னன் கரிகாலனுக்குத் தன் பெருவளங்காட்டுதற்கெனத் திருமகள் வந்து புகுந்து நிற்பது போல இந்நகர் திகழ்கின்றது.

**நகர மக்களில் மற்றொருவர் :** இதோ இவ்வத்தாணி மண்டபத்தை நோக்கினையா? இங்குள்ள தூண்கள் யாவும் பவளக்கால்கள் போலும், மேனிலை எல்லாம் நவமணி மண்டபங்கள் போலும், இங்குள்ள சுவர்கள் எல்லாம் பொற்சுவர் போலும் காணப்படுகின்றதன்றோ? இங்குள்ள வாயில்கள் மகர மீன்களின் பிளந்தவாயைப்போலத் தோன்ற, அவற்றில் கொம்பு, முத்தின் ஒழுங்கு, இவை விளங்கும் திறந்தான் என்னே! மேலும் அங்கு இணை மீன், முரசு, பதாகை, கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, விளக்கு என்னும் அட்ட மங்கலங்களும் அமைக்கப்பட்டிருப்பதன் அழகு கூறும் தரத்ததோ? இதோ கொற்றவன் கொற்றம் வாழ்க என வாழ்த்தியவாறு, ஞாலங் காவலர் தலையிற் சுமந்த பொற்குடங்களில், பூந்தாது நிறைந்த காவிரித் துறையிலுள்ள புண்ணிய நீரைக் கொணர்கின்றனர். அலங்கரிக்கப்பட்டுள்ள இவ்வத்தாணி மண்டபம் மண்ணகம் மருளவும், வானகம் திகைக்கவும் மேலோங்கிக் காணப்படுகின்றதன்றோ?

**முதல்வர் :** அதோ நமதரசர் வரும் அரவம் கேட்கின்றது. நமது பேச்சு நிற்க! அவரது வருகையைக் கவனிப்போம்.

*[பேராரவாரத்துடன் கரிகாலன் வருதல்.]*

**கட்டியக்காரர் :** கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே முற்றோன்றி மூத்த குடிப்பெருமையுற்ற குலக்கொழுந்து வாழ்க! வானவர்க்கு உறுதுணையாய்த் தானவர் வலி தொலைத்த சீரியோன் வழித்தோன்றல் வாழ்க! புள்ளுறு புன்கண் தீர்த்தற்காகத் துலை

புக்க பெரியோன் வழிவந்த உரவோன் வாழ்க! சோழர் குல திலகன் கரிகாலன் வாழ்க!

**அவையினருள் ஒருவர் :** அதோ, வேதியர் வேதம் ஓத, அரம்பையர் போலும் மடந்தையர் மங்கல வாழ்த்துப்பாடல் பாட, பல்லியங்களின் ஒலி இன்னிசை இசைக்க, அரசன் சென்னிமிசை புண்ணிய தீர்த்தம் பெய்து நீராட்டுஞ் சிறப்பு, இந்திர விழாக் காலத்தில் இந்திரனுக்குச் செய்யும் நீராட்டுப்போலக் காணப்படுகின்ற தன்றோ?

**இரண்டாமவர் :** அதோ, பழங்குடி மக்களுள் ஒருவராகிய **உறையூர் கிழார்** முடியெடுத்துக் கொடுக்க, வழி வழியாய்ச் சோழர் குடிக்குக் குருவாய் விளங்கும் முனிவர், அரசர் முடிமேல் மணிமுடி புனேயும் காட்சியைக் காண்!

**அவையினர் யாவரும் :** வாழ்க மன்னன் கரிகாலன்! வாழ்க கொற்றவன் கொற்றம்! உலக முழுதும் ஒரு குடைக்கீழ் ஆளும் உத்தமனுக்கு-ஜே! மன்னர் மன்னன் கரிகால் வளவனுக்கு-ஜே! சோழர் குலச் செம்மலுக்கு-ஜே!

**இரும்பிடர்த்தலையார் :** பெரியோர்களே, குடிமக்களே, நமது பட்டத்து யானை அரிய தெய்விக சக்தி வாய்ந்தது என்பதை இச்சமயத்தில் கூறுதிருக்க இயலவில்லை. தாயத்தார் கொடுமைக்குட்பட்டு எங்கோ மறைந்து வாழ்ந்திருந்த நமது அரச குமரன் கரிகாலனை அது கண்டுபிடித்து மாலையிட்டுச் சென்னிமிசை தூக்கிவைத்துக் கொணர்ந்து உங்கட்கெல்லாம் அரசராக்கி வைத்துள்ளது. நமது முன்னையரசர் சென்னியின் குமரரே நமக்கு மன்னராகவேண்டும் என்பது தெய்வத்தின் திருச் சித்தமாயிற்று. ஆதலின் பகைவராயுள்ளோர் இனி எது செய்யினும் அது பலியாதென்பதைக் கூறவும் வேண்டுமோ?

நமது மன்னர் மரபினர் முன்னம் தாம் நாடாண்ட காலத்தில் பசியும் பிணியும் கெடவும், வசியும் வளனும் சுரக்கவும் எவ்வாறு நன்கு ஆண்டு வந்தனரோ, அவ்வாறு இப்போது நமதரசர் கரிகாலரும் செங்கோலோச்சி வருவர். மன்னர் கரிகாலர் வாழ்க!

**கரிகாலன் :** அன்புள்ள குடிமக்களே, பகைவர் எமக்கு இயற்றிய தீங்குகள் எல்லாம் கதிரவன் முன் பனிபோல நீங்கிவிட்டன. இறைவன் திருவுள்ளம் எமக்கு இவ்வரசை இனிதுவந்து அளித்துள்ளது. அதுவே இனி எம்மை எந்நாளும் காக்கும். ஆகவே யாமும் எமது முன்னோர்போல இந்நிலவுலகிற்கு எம்மால், எமது பரிசனத்தால், பகையரசரால், நோயால், கள்வரால் யாதொரு துன்பமும் நேராவண்ணம் இதனைப் பாதுகாத்து வருவோம். ஆயினும் குடிமக்களாகிய நீங்கள் அனைவரும் ஒத்துழைத்தால் அன்றி அரசாட்சி சிறக்காது. ஆதலின் உங்கள் யாவர் ஒத்துழைப்பையும் வேண்டுகின்றோம். குருவியின் தலையில் பனங்காயை வைத்ததுபோன்று எம் தலையில் சுமத்தப்பட்டுள்ள ஆட்சிப் பொறுப்பாகிய இந்தச் சுமையை உங்கள் உதவியின்றி எம்மால் சுமந்து செல்லுதல் இயலாதென்பதை மீட்டும் உங்களுக்கு அறிவிக்கின்றோம். யாவருக்கும் வணக்கம்!

*[அமைச்சரை நோக்குதல்.]*

**அமைச்சர் :** இனிப் பாடல் ஆடல் நிகழ்க! மக்கள் கொண்டாட்டங்களைக் கண்டு களித்து விழாவினைச் சிறப்பிக்க!

## பாணர் பாடல் ஆடல் நிகழ்ச்சி

(பாணன் பாட, விறலி ஆடுகின்ருள்.)

### பாடல்

1. *புலவுற் றிரங்கி யதுநீங்கிப்*
*பொழிற்றண் டலையிற் புகுந்து திரிந்த*
*கலவைச் செம்மல் மணங்கமழத்*
*திரையுலாவு கடற்சேர்ப்ப!*
*பலவுற் ருெருநோய் துணியாத*
*படர்நோய் மடவாள் தனியுழப்ப*
*அலவுற் றிரங்கி யரியநோய்*
*அன்னை அறியின் என்செய்கோ!*

2. *கதிரவன் மறைந்தனனே! காரிருள் பரந்ததுவே!*
*எதிர்மலர் புரையுண்கண் எவ்வநீ ருகுத்தனவே!*
*புதுமதி புரைமுகத்தாய் போனுர் நாட்டுளதாங்* [கொல்
*மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தஇம் மருள்மாலை?*

3. *கானல் வேலிக் கழிவாய் வந்து*
*நீநல் கென்றே நின்ருர் ஒருவர்!*
*நீநல் கென்றே நின்ருர் அவர்நம்*
*மானேர் நோக்க மறப்பா ரல்லர்!*

**இசைவல்லார் பலர்:** ஆ! ஆ! இவ் யாழோன் **வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை** என்னும் எட்டு வகையான யாழின் செய்கைகளை எல்லாம் செய்து **பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு** என்னும் எட்டுவகையில் இசை எழுப்பி வரிப்பாடல் களைப் பாடுந்திறந்தான் என்னே!

**ஆடல் நுணுக்கம் அறிந்தோருள் ஒருவர்:** இசை முடி வுற்றது. ஆடலுக்காக விறலியும் கூத்தரும் ஆட ரங்கில் கூடுகின்றனர். அரங்கின் அழகினை நோக் கினையா? அதன் நீளம், அகலம், உயரம், மேடை யின் அமைப்பு முதலியன நூல்களில் கூறப்பட்ட

இலக்கண முறை வழுவாமல் அமைந்திருப்பதைப் பார்! அரங்கினுள் புகவும், அதினின்று வெளிவரவும் அமைந்துள்ள வாயில்களின் அழகினைப் பார்! அவற்றின் அலங்காரத் தோற்றம் கண்ணைப் பறிக்கின்றதன்றோ?

**அத்தகையார் மற்றொருவர்:** இவ்வரங்கில் இடது தூணுடன் இணைக்கப்பட்ட ஒருமுக வெழினி, வலது தூணுடன் இணைக்கப்பட்ட பொருமுக வெழினி, மேற்கட்டில் அமைக்கபட்ட கரந்துவரல் எழினி என்னும் திரைச் சீலைகள் பாங்கு பெற அமைத்திருக்கும் சிறப்பை நோக்கு! அவற்றின்மேல் முத்துமாலை, பூமாலை அமைந்து கிடக்கும் அழகையும் பார்! இப்படி ஓர் அரங்கினை இதற்கு முன் நாம் கண்டதுண்டா?

**முதல்வர்:** இதோ, தலைக்கோல் பெற்ற நாடகக் கணிகை அரங்கிற்கு வருகின்றாள். பகைவரைப் புறங்கண்டு அதனால் கைப்பற்றப்பட்ட வெண் கொற்றக் குடையின் காம்பால் ஆனது இத்தலைக் கோல். தலைக்கோலுக்குரிய இலக்கணப்படி இது ஏழுசாண் நீளம் இருப்பதைப் பார். இதன் இடைப் பகுதி, சாம்பூநதம் என்னும் பொன் தகட்டால் மூடப் பட்டது.

**இரண்டாமவர்:** இவ்விறலியின் நாட்டியத்தில் கை வழிக் கண்ணும், கண்ணின்வழி மனமும், மனத்தின் வழிப் பாவனையும், பாவனையின் வழி ரசமும் நிற்கும் பாவனையைப் பார்.

**முதல்வர்:** பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை என்னும் கையிலக்கணங்கள் பிழையாது, இவள் இயற்றும் கைத்தொழில் திறனைப் பார்த்தனையா? பதாகம், திரிபதாகம், முஷ்டி, கபித்தம், ஸூசி, மிருகசீர்ஷம், ஸிம்ஹமுகம், முகுளம் முதலிய

ஒற்றைக் கைக்குறிகளும், அஞ்சலி, கபோதம், கர்க் கடகம், ஸ்வஸ்திகம், சகடம், மத்ஸ்யம், கூர்மம் முதலிய இரட்டைக் கைக்குறிகளும் அவ்வவ்விலக் கணங்களிற் சிறிதும் பிழையாது அமையும் அழகு தான் என்னே! என்னே!

இரண்டாமவர்: இவள் கால்வரிசைகளின் பாங்கினைப் பார். ஸ்தானகம், ஆலீடம், ஏகபாதம், நாகபந்தம், சக்ரம், குஞ்சிதம் முதலிய செய்கைகளையும் நோக்கு! மயில், மான், யானை, குதிரை, சிங்கம், பாம்பு முதலியவைகளைப் போன்ற கதிகளைக் காட்டி ஆடும் அழகினை என்னவென்று சொல்வது!

முதல்வர்: இவள் கொடுகொட்டியாடல், பாண்டுரங்கக் கூத்து, அல்லியத் தொகுதி, மல்லாடல், துடிக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, பேடியாடல், மரக்கால் ஆடல், பாவைக்கூத்து, கடையம் என்னும் பதினோ ராடல்களையும் அந்தந்தத் தேவருக்குரிய அணி, கொள்கை, நிலை, அவிநயம் முதலிய மரபு தவறாது ஆடும் சிறப்பு எவ்வளவு இன்பந்தருகின்றது!

அரசர்: பாணர்களே, கூத்தர்களே, விறலியர்களே, இன்று நுமது உயரிய ஆடல் பாடல்களால் எம்மை யும், மற்றும் இங்குள்ளார் யாவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டீர்கள். உங்கள் வல்லமைக் கேற்றவாறு சிறப்புச் செய்தல் இயலாத தொன்றும். ஆயினும் எமது மகிழ்ச்சியைப் புலப் படுத்தும் வகையில் இயன்ற அளவில் பரிசில் வழங்கு வோம். அமைச்சரே, இவர்கட்குக் கடமாவும், வயப்பரியும், அணிதேரும் அளிக்க! மற்றும் நுண் பூங்கலிங்கமும், பொற்பூவும் பொன்னரிமாலையும் வழங்குக! இனி யாம் சிறப்புச் செய்தற்குரிய ஏனை யோரையும் ஈண்டுக் கொணர்க. முதற்கண் 'வில்லேக் கவைஇக் கணைதாங்கும் மார்பின், மாதாங்கு எறுழ்த்தோள் மறவர்த் தம்மின்!''

அமைச்சர்: இதோ, அவ்வில் வீரரும் குதிரை வீரரும் வந்தனர்.

அரசர்: இவர்க்கு ஆளுக்கோராயிரம் பொன்னும், துகிலும் கொடுக்க. இனிக் 'கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கின் நல்லெயில் உழந்த செல்வர்த் தம்மின்!'

அமைச்சர்: இதோ, மதிற்போரிட்டு வருந்திய வீரச் செல்வத்தை யுடையவர் வந்தனர்.

அரசர்: இவர்க்கும் ஆளுக்கோராயிரம் பொன்னும் துகிலும் வழங்குக. இப்போது, 'எரி நிமிர்ந் தன்ன நாப்பண், பெருங்கை யானை போர்க்களத் தொழிய விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்!"

அமைச்சர்: இதோ, போர்க்களத்தே யானைகளை வெட்டி வீழ்த்திப் புண்பட்ட படைத் தலைவர் வந்துள்ளனர்.

அரசர்: இவர்க்கெல்லாம் பதினாயிரம் பொன்னும், துகிலும், வீரக்கழலும் வழங்குக. இனி பாணர், பாட்டியர், புலவர், வயிரியர் முதலிய பரிசிலர் யாவரும் வருக.

அமைச்சர்: இதோ, பரிசிலர் யாவரும் வந்தனர்.

அரசர்: இவர்க்கு ஆளுக்கோராயிரம் பொன்னும் துகிலும் வழங்குக.

கருங்குழலாதனார்: (எழுந்து நின்று—).

"அரியதந்து குடியகற்றி
பெரியகற்று இசை விளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீன் நடுவண் திங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்"
பெரும, நீ நீடு வாழ்க!

**கடியலூர் உருத்திரங் கண்ணனார் :** (எழுந்து நின்று—).

"கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு
பிறர்பிணி யகத்திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கனியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதின் உணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்து
உருகெழு தாயம் ஊழின் எய்தி"ய
உரவோய்! நீ பல்லூழி வாழி!

**முடத்தாமக் கண்ணியார் :** (எழுந்து நின்று—).

"பெருவற னாகிய பண்பில் காலையும்
... ... ... ... ... ... ...
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடு கோடாகப் பிறங்கி நாடொறும்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாக
காவிரி புரக்கும் நாடு கிழவோயே!"
வாழி நீ பல்லூழி!

அங்கம் : இரண்டு
களம் : இரண்டு

## நரைமுடித்து உரைமுடிவு காணல்

இடம் : *கரிகாலன் அத்தாணி மண்டபம்*

காலம் : *காலை*

உறுப்பினர் : *அரசர், அமைச்சர், அவையோர், முதியோராகிய இரு வழக்காளிகள்*

*[அவை கூடியுள்ளது. காவலன் வந்து வயது முதிர்ந்த இரு வழக்காளிகளது வரவை அறிவிக்கின்றான்.]*

**காவலன் :** அரசே, வாழ்க! வாயிற்கண் இரு முதியவர் வந்துள்ளனர். வழக்குத் தீர்த்துக்கொள்ளத் தாம் வந்திருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

**அமைச்சர் :** (அரசர் குறிப்பறிந்து) காவல, வர விடுக அவரை ஈங்கு.

**முதியவர் :** அரசே, வாழ்க! நும் கொற்றம் செழிக்க!

**அரசர் :** பெரியோர்களே! நீங்கள் வழக்குத் தீர்த்துக் கொள்ளுதல் கருதி இங்கு வந்ததாக அறிந்தோம். உங்கள் வழக்கு யாதோ ?

**முதியவர்கள் :** (தமக்குள்—ஆனால் அரசன் காதிற்படும் படியாகவே) இவ்வரசர் நமது வழக்கினைத் தீர்க்க மாட்டுவாரோ ? மிகுந்த இளவயதினராகக் காணப் படுகின்றாரே!

**அரசர் :** பெரியோர்களே, நீங்கள் இவ்விதம் கருதுவது இயற்கையே. யாம் அரண்மனைக்குட் சென்று உங்கள் வழக்கைத் தீர்க்கத் தக்காராகிய முதியவர் ஒருவரை ஈண்டு வரச்செய்வோம். சிறிது காலந் தாழ்த்துமின்.

*[கரிகாலன் சென்று நரைத்த முடி, மீசை, தாடி முதலியன புனைந்து ஒரு நீதிபதி போல வேடமணிந்து வந்து, அரியணையருகில் ஓர் உயர்ந்த இருக்கையில் அமர்கின்றான்.]*

**நீதிபதி வேடமணிந்த கரிகாலன் :** பெரியோரே, உங்கள் வழக்கைத் தீர்த்தற்கென அரசர் என்னை ஈங்கு அனுப்பியுள்ளார். என்பால் நம்பிக்கை யுண்டாயின், உங்கள் வழக்கைக் கூறுங்கள். என் அறிவாற்றல்களுக்கு எட்டியவரையில் ஓர்ந்து உண்மை கண்டு அதனைத் தீர்க்க முயல்கின்றேன்.

**முதியவர் :** (தமக்குள்) இவர் கற்றுவல்ல பெரியராகக் காணப்படுகின்றார். இவரிடம் நமது வழக்கைக் கூறுவோம். (நீதிபதியை நோக்கி). நீதிபதியவர்களே, இதோ எமது வழக்கு.

நாங்கள் இருவரும் நண்பர்கள். சிறிது காலத்திற்கு முன் இந்த எனது நண்பர் தமக்குச் சொந்தமானதொரு நிலத்தை எனக்கு விற்றார். அதில் சில நாட்களுக்குமுன் ஒரு புதையலைக் கண்டெடுத்தேன். அதனை ஊரவையத்தார் முன் கொண்டு சென்று வைத்தேன். அவர்கள் அதனைத் திறந்து பார்க்க, அதனுள் நிறையப் பொற்காசுகளும் நவமணிகளும் இருந்தன. மிகச் சிறியதொரு தொகைக்கு அந் நிலத்தை வாங்கிய யான் அப்புதையலை எடுத்துக் கொள்ளுதல் நியாயமென எனக்குப் படவில்லை. அந்நிலம் வழிவழியாக இவர் மரபினருக்குச் சொந்தமானது. ஆதலால் இவரது முன்னோர் ஒருவருக்குச் சொந்தமாயிருத்தல் வேண்டும். அதனால் யான் இவருக்கு அதைக் கொடுக்கப் போனேன். இவர் அதனைப் பெற மறுத்தனர். பிறகு நீதிமன்றத்துக்குச் சென்றேன். மன்றத்தாரும் யானும் எவ்வளவோ கூறியும் அதிற் பாதியளவுகூட எடுத்துக் கொள்ள மறுக்கின்றார். புதையல் எனக்குரியதல்லவாகையால் இவர் அதனைப் பெறுமாறு செய்ய வேண்டுகின்றேன்.

**நீதிபதி :** (மற்ற முதியவரைப் பார்த்து) நீர் ஏன் அப்புதையலை வேண்டாமென மறுக்கிறீர் ?

**மற்ற முதியவர் :** நான் விற்றுப் பணம் பெற்றுக் கொண்டபோது அந்நிலத்திலுள்ள மாவடை மர வடைகளுடன் எல்லாம் அவருக்குச் சொந்தம் என்று எழுதிக்கொடுத்து விட்டேன். ஆதலால், அதனுள் இருக்கும் எப்பொருளும் எனக்குச் சொந்தமாகாது. எனக்குச் சொந்தமல்லாததை நான் எப்படி எடுத்துக் கொள்வது ?

**நீதிபதி :** நீதி மன்றத்தார் யாது கூறினர் ?

**முதல்வர் :** புதையல் இருவருக்கும் சொந்தமாகு மென்றும், இருவரும் அதைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

**நீதிபதி :** அவ்விதம் செய்யத் தடை என்ன ?

**முதல்வர் :** நான் கண்டெடுத்த மாத்திரத்தால் அது, எனக்கு உரியது ஆகிவிடாது. கண்டெடுத்த பொருள் இன்னுருடையதெனத் தெரிந்தால் அதை அவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டும். இல்லா விட்டால் அதை அரசாங்கத்தாரிடம் ஒப்படைத்து விட வேண்டும். இப்புதையல் இவரது முன்னோ ரால் இவரது நிலத்தில் புதைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று நான் நம்புவதால் அதை இவ ரிடம் கொடுக்க முன் வருகிறேன். இல்லாவிட்டால் அரசர் அதனை எடுத்துக் கொள்ளட்டும்.

**நீதிபதி :** (இரண்டாமவரை நோக்கி) நீர் என்ன கூறுகிறீர் ?

**இரண்டாமவர் :** என்னுடையதென்று திட்டமாகச் சொல் வதற்கு அத்தாட்சி ஒன்றுமில்லை. புதையல் அகப் பட்டால் அதில் ஒரு பாதி கண்டெடுத்தவருக்கும், மற்றப் பாதி அரசருக்கும் சேரவேண்டும் என்று சொல்வார்கள். அவ்விதம் பயன்பட வேண்டுமே யன்றி, யான் அதில் எப்பகுதியும் எடுத்துக் கொள் வது சரியல்ல.

**நீதிபதி :** நீங்கள் இருவரும் அதனை எடுத்துக்கொள்ள இஷ்டப்படாததால் அதை அறநிலையத்திற்கு அளித்து விடுவதுதானே.

**இரண்டாமவர் :** அப்படிக் கொடுக்க எண்ணி நாங்கள் இரண்டொரு அறநிலையங்களை அடைந்தோம். அவர்கள் நாங்கள் அதைத் தருமத்திற்குக் கொடுத்ததாக எழுத்துமூலம் எழுதிக் கொடுக்கச் சொன்னார்கள். அப்படிச் செய்வதற்கு அது என் சொத்து அல்லாததால் நான் அதற்குச் சம்மதிக்கவில்லை.

**நீதிபதி :** (முதல்வரை நோக்கி) நீர்தான் அதைக் கண்டெடுத்தவராயிற்றே. நீர் ஏன் எழுதித் தரலாகாது?

**முதல்வர் :** கண்டெடுத்தனால் அதை என்னுடையதென்று பாவிக்க என்னால் இயலாதென்று நான் முன்னமே தெரிவித்துள்ளேனே. அப்படிச் செய்தால் அது 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்குக் கொடுத்ததுபோல்' அல்லவா ஆகும்?

**நீதிபதி :** எவரும் தம்முடையதென்று ஏற்றுக்கொள்ளாத பொருள்கள் அரசனைச் சாரும் என்னும் சட்டமிருப்பது உங்களுக்குத் தெரியுமன்றோ? அப்புதையலை அரசருக்கு அளித்துவிடுங்களேன்.

**முதல்வர் :** யான் அதற்கு ஆயத்தமாய்த்தான் இருக்கின்றேன். ஆயினும் அந்நிலம் வழிவழியாக இவரது முன்னோருடையதாதலால் அப்பணம் இவரையே சாரவேண்டும் என என் மனச்சாட்சி கூறுகின்றது! பொருள் எங்குப் போயினும் அது நியாயமாக அங்குப் போய்ச் சேரவேண்டும் என்பது என் கருத்து.

**நீதிபதி :** (இரண்டாமவரைப் பார்த்து) நீர் என்ன சொல்கின்றீர்?

**இரண்டாமவர் :** எனக்குச் சொந்தமென்பது என் மனச்சாட்சிக்கு ஒப்புமாறு தெளிவாக்கப்பட்டால் நான் எடுத்துக்கொள்ளத் தடையில்லை. இவர் கூறுவது என் மனச்சான்றுக்குப் பொருந்தவில்லை. என் முன்னோர் பல தலைமுறைகளாக அந்த நிலத்தை வைத்

துக் கொண்டிருந்தது உண்மையே. ஆயினும் அது வேறு ஒருவரிடமிருந்து என் முன்னோருள் ஒருவர் பெற்றிருக்கலாம். அவர் மரபினர் யாரேனும் அச் செல்வத்தைப் புதைத்திருக்கலாம். ஆகவே அது அரசனையோ அறநிலையத்தையோ சார வேண்டும் என்று நினைக்கிறேன். யாரை வேண்டுமானாலும் சேரட்டும்.

**நீதிபதி:** நீங்கள் இருவரும் அதில் உங்களுக்கு உரிமை இல்லை என்று சொல்கிறீர்கள். உண்மையில் கண்டெடுத்தவருக்கு ஓரளவு அதில் உரிமை உண்டு. முற்றிலும் அதில் உரிமை இல்லை என்று அவர் கூறிவிட முடியாது. அவ்வாறே உமது முன்னோர் அதில் அதைப் புதைத்து இருந்தாலும் இருக்கலாம் என்பதற்கு இடம் இருக்கிறது. அதனால் உமக்கும் ஓரளவு அதில் உரிமை உண்டு. இருவரும் அதை வைத்துக்கொள்ள இஷ்டப்படாததால் அப் பொருள் அரசனைச் சேரும். அதனால் அதை அரசரிடம் ஒப்படையுங்கள். அப்படி ஒப்படைக்கும் பொழுது இப்பொருளில் கடவுள் அறிய ஏதாவது எனக்கு உரிமை இருந்தால் அந்த உரிமைப்படி எனக்குள்ள பங்கை அறநிலையத்திற்கு அளிக்கிறேன் என்று எழுதிக் கொடுங்கள். இப்போது சரிதானே ?

**இருவரும்:** சரி சரி. அவ்விதமே செய்கிறோம்.

**நீதிபதி:** (முதல்வரைப் பார்த்து) நான் கூறியது உங்கள் மனச்சான்றுக்குத் தெளிவாகின்றதா ?

**முதல்வர்:** ஆகின்றது ; ஆகின்றது.

**நீதிபதி:** எப்படி ? தெளிவாகக் கூறும்.

**முதல்வர்:** இப்பொருளில் ஒருசிறிதும் என்னைச் சார்ந்ததல்ல. ஆனால், இதைக் கண்டெடுத்ததால் ஓரளவு இதில் எனக்கு உரிமையுண்டு ; அவ்வுரிமையால் எனக்கு எவ்வளவு சேரவேண்டும் என்பது தீர்மானித்தற்கு இயலாதது. அதனால் எதையும் நான் எடுத்துக்

கொள்ள விரும்பவில்லே. அதனுல் அந்த உரிமைப் படி எனக்குச் சேரவேண்டியதை அறநிலேயத்திற்கு அளிக்கச் சித்தமாயிருக்கிறேன் என்பதே.

**நீதிபதி :** ( மற்றவரைப் பார்த்து ) நீர் என்ன கூறுகிறீர் ?

**இரண்டாமவர் :** இதில் எனக்குள்ள உரிமை இதுதான். அதாவது என் முன்னேர் ஒருகால் இதைப் புதைத் திருக்கலாம் என்பதுதான். அதைத் திட்டமாகக் கூற இயலாததால் அப்பொருளே நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லே. அதனுல் அவ்வுரிமைப்படி சேரவேண்டிய பகுதியை அற நிலேயத்திற்கு அளிக்கச் சித்தமாயிருக்கிறேன் என்பதே.

**நீதிபதி :** இச்சமயத்தில் யான் தெரிவிக்கவேண்டியதும் ஒன்று இருக்கிறது. அதாவது யானே அரசன் என்பது. இதோ, வேடத்தைக் கஃளகிறேன். ஒரு வரும் தமதென்று ஏற்றுக்கொள்ளாத பொருள் அரசருக்குச் சொந்தமாகும் என்பது சட்டம். அச் சட்டப்படி யான் இப் பொருளே ஏற்கிறேன். ஆயி னும் இப்படிக் கிடைக்கும் பொருளே நாட்டு நலத் திற்கே செலவிட வேண்டுவது முறையாகையால் இப்பொருள் முழுவதும் நமது நாட்டிலுள்ள அற நிலேயங்களுக்கு நான் அளித்து வருகின்றேன். உங்கள் மனம் சமாதானமடைந்ததன்ருே ?

**முதியவர் இருவரும் :** ஆ ! ஆ ! நேர்மையான தீர்ப்பு ! நேர்மையான தீர்ப்பு ! எங்கள் மனம் சமாதான மடைந்தது. மனத்துள் இருந்த ஒரு பாரம் நீங்கி விட்டது.

**முடத்தாமக்கண்ணியார் :** 'உரை முடிவு காணுன் ! இளமையோன் ! என்ற நரைமுதுமக்கள் உவப்ப, சொல்லால் முறை செய்தான் சோழன் ! குலவிச்சை கல்லாமல் பாகம்படும்.

**அவையினர் :** நீதிகண்டு முறை செய்த நிருபன் வாழ்க! மன்னன் கரிகாலன் வாழ்க !

அங்கம் : இரண்டு
களம் : மூன்று

## இகல் கருதிய பகைவர்

**இடம் :** புகாரில் ஒரு மாளிகை.

**காலம் :** நள்ளிரவு.

**உறுப்பினர் :** கரிகாலன், தாயத்தார், பாண்டிய மரபினர் ஒருவர், இருங்கோவேள் முதலிய பதினொரு வேளிர், பெருஞ் சேரலாதன், இரும்பிடர்த்தலையார்.

*[கரிகாலனது பகைவர் அவனுக்கு எதிராகச் சதியாலோசனை புரிகின்றனர். மாறு வேடத்தில் இரும்பிடர்த்தலையார் மாளிகையை அணுகுகின்றார்.]*

**இரும்பிடர்த்தலையார் :** (தமக்குள்) நீண்ட நாள் வேவு பார்த்து இவர்கள் மறைவாகக் கூடுமிடத்தைக் கண்டுபிடித்தோம். இன்று இவர்கள் இம்மாளிகையில் கூடிச் சதியாலோசனை செய்யப்போகிறார்களாம். என்ன ஆலோசனை நடக்கிறதென்று பார்க்கவேண்டும். குழலூதியதும் மாளிகையைச் சூழ்ந்து கொள்ளுமாறு அருகில் மறைவிடங்களில் காவலர்களை மறைந்திருக்கச் செய்துள்ளேன்.

மான்விழிகள் போன்ற சாளரங்களைக் கொண்டு மருவூர்ப்பாக்கத்துள்ள இம்மாளிகையில் முன்னம் ஒரு யவன வாணிகன் இருந்தான். அவன் இப்போது தன் நாடு சென்றுள்ளான். அவன் வரும் வரையில் இவர்கள் குடிக்கூலிக்கு இதைப் பெற்றுள்ளனர் போலும். ... இதனுள் செல்வதெப்படி? அவர்கள் பெரும்பாலும் நள்ளிரவில் கூடுவர் என்று எண்ணுகிறேன். எதற்கும் முன்னிரவிலேயே இதனுள் சென்று ஏதாவது ஓரிடத்தில் மறைந்து கொள்வது நலம். இதனைச் சுற்றிப் பார்த்து இதனுள் செல்ல வழிகாணுகின்றேன்.

இதோ, ஒரு மரம் இதன் மேனிலை வரையில் உயர்ந்து சென்றுள்ளது. இதன் அந்தக் கிளையி னின்று கயிற்றைத் தொங்கவிட்டு மேனிலையில் இறங்கக்கூடும். அப்பால் உள்ளே செல்லும் வழியை ஆராய்வோம். ஒற்றறிதல் அபாயகரமான செயல். அபாயம் நேரும்போலிருந்தால் விரைந்தோடிவர முன்னரே வழிகோலி வைத்துக்கொள்ள வேண்டும்.

இதோ மேனிலை யடைந்தாயிற்று. இதைச் சுற்றிப் பார்க்கிறேன். இதோ உட்புற முற்றத் திற்குச் செல்ல வழிகள் உள்ளன. முற்றத்தை அடைந்தாயிற்று. அதோ மூலையில் ஒரு கதவு. கதவைத் திறந்தாயிற்று. இதோ மற்ருேர் முற்றம். இதற்குமேல் செல்ல இயலாது. இங்குள்ள இக் கதவு உள்ளே தாழிடப்பட்டுள்ளது. இதனருகில் உயரத்தில் உள்ள பலகணி வழியாய் உட்புறத்தின் அமைப்பைப் பார்க்க வேண்டும். சாளரம் உயரத்தி லிருக்கிறதே, என்ன செய்வது? எதன் மேலாவது ஏறி நின்றே உட்புறம் பார்க்கவேண்டும். எதன் மேல் ஏறி நிற்பது? ஆராய்கின்றேன். இதோ ஒரு கல் உரல் உள்ளது. ஓசையுண்டாகாதவாறு இதைப் புரட்டி, சாளரத்துக்கு அடிப்புறத்தில் கொண்டுவர வேண்டும். இதோ கொணர்ந்தாயிற்று. இனி மேலே ஏறி உட்புறம் நோக்குவேன். உட்புறம் இருட்டாயிருப்பதால் ஒன்றும் புலப்படவில்லை. நல்லது. காத்திருக்கிறேன்! பரிசு கிடைக்காதா?

எத்துணை நேரம் காத்திருப்பது? ஒரு கணம் ஒரு யுகம்போல் இருக்கிறது. ஆ! உள்ளே விளக்கு ஏற்றப்பட்டுவிட்டது. அதன் வெளிச்சம் அதோ அங்குள்ள சுவரில் படுகின்றதன்ருே? இனி உள்ளே பார்க்கின்றேன். ஆ! பெரிய கூடம். காவலன் ஒரு வன் ஆசனங்களைச் சரிவர அமைத்து வைக்கிருன். இனி விரைவில் அவர்கள் வந்து கூடுவர். அவர்கள்

என்ன பேசுகிறார்கள் என்று கவனித்துச் சமயம் நோக்கி குழல் ஊதுவோம்.

*[சேவகன் வேலை முடித்துவிட்டுச் செல்கிறான். தாயத்தார், இருங்கோவேள் முதலிய வேளிர், சேரர், பாண்டியர் ஆகியோர் உள்ளே வந்து ஆசனங்களில் அமர்கின்றனர்.]*

**தாயத்தாருள் முதல்வர்:** உறையூரில் சிறை தீப்பற்றி எறிந்தபோதே அதில் அவர்கள் எரிந்திருக்க வேண்டும் என்று எண்ணினோம். அது தவறாயிற்று. பிறகு யானை யாரோ ஒரு கீழ்மகனைக் கொணர்ந்தது என்று சொல்லிக் கலகம் செய்யப் பார்த்தோம். அரசியும் இரும்பிடர்த்தலையானும் அவனை அரசகுமாரன் என்று சொன்னதாலும், சிறைக்காவலர் இருவர் அடையாளங் கண்டதாலும், யானையும் அவன் சொற்படி நடந்ததாலும் நமது கட்சி எடுபடவில்லை. இனி வெளிப்படையாகப் போரிட்டே அரசைக் கைப்பற்ற வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?

**பாண்டிய மரபினர்:** மதுரையில் அரசு புரியும் எமது தாயத்தார் நாட்டில் எமக்குரிய பகுதியையும் தமதாகக் கொண்டு ஆண்டுவருகின்றார். அவரிடமிருந்து எமக்குரிய பங்கைப் பெற முயன்று ஐயாயிரம் பேரடங்கிய ஒரு படையையும் சித்தம் செய்துள்ளேன். இப்போது உமது முயற்சியில் எனது உதவியை நாடுவீரானால், எனது முயற்சியில் நீங்கள் எனக்கு உதவி செய்வதாக ஒப்பந்தமளிக்க வேண்டும்.

**முதல்வர்:** ஆகா! அப்படியே செய்து தருகின்றோம். எம்மவராகிய மற்றவர்கள் இதற்கு ஒரு தடையும் கூறமாட்டார்கள். ஏன், அப்படித்தானே?

**மற்றத் தாயத்தார்:** ஆம். சம்மதமே.

**சேரவேந்தர்:** நான் என்னாலியன்ற உதவியை உங்களுக்குச் செய்யத் தடையில்லை. ஆனால் போரில் வெற்றி பெற்றால் உமது நாட்டில் எமது நாட்டை

அடுத்துள்ள ஒரு பகுதியை எனக்குத் தரவேண்டும். அப்படிச் செய்வதானல் உதவி செய்யத் தடை யில்லை.

**தாயத்தாருள் முதல்வர் :** உதவி செய்பவர் கைம்மாறு எதிர்பார்ப்பதும் வழக்கமே. உமது கோரிக்கைக்கும் இணங்குகின்ருேம். ஆனல், எம்மிடமிருந்து மிக அதிகமாக எதிர்பார்க்கமாட்டீர்கள் என்று எண்ணு கின்ருேம். உமது கருத்து யாது? எவ்வளவு எதிர் பார்க்கிறீர்கள் ?

**சேரர் :** குறைந்தது இரண்டு கோட்டமாவது வேண்டும்.

**முதல்வர் :** அது அதிகமில்லை என்றே கருதுகிறேன். மற்றவர்களும் இதனை மறுக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். சரிதானே ?

**மற்றத் தாயத்தார் :** சரிதான் !

**முதல்வர் :** (வேளிரை நோக்கி) வேளிர் பெரு மக் களே, உங்கள் செய்தியெல்லாம் நீங்கள் முன்னரே கூறியிருக்கின்றீர்கள். உங்கள் கருத்துக்கிணங்க நாங்கள் உங்கட்குச் சிறப்புச் செய்ய ஆயத்தமா யிருக்கின்ருேம். ...... பாண்டிய மன்னரே, போர் நடத்தும் முறைமை குறித்து உமது கருத்து என்ன ?

**பாண்டியர் :** வெளிப்படையாகப் போரில் இறங்குவ தாயினும், அன்றி, மறைவில் இயற்றுவதாயினும் எதற்கும் யான் சித்தமே ! உங்கள் போராயத்தங் களுக்கு ஏற்றவாறு செயலாற்றுவோம்.

**இருங்கோவேள் :** கரிகாலன் நாட்டிற்கரசன் என்பது நாட்டார் யாவரும் ஒத்துக்கொண்ட செய்தியாகி விட்டது. இப்போது அவர்களிடம் வலிமை பொருந்திய படையும் உள்ளது. குடிமக்கள் அவன் சார்பாகவே உள்ளார்கள் என்பது ஒற்றரால் தெரிய

வருகின்றது. ஆதலால், வெளிப்படையான போர் அவ்வளவு நன்மை தராதென்று எண்ணுகின்றேன். மறைவில் கலகமும் கொள்ளையும் விளைவித்துக் கொண்டு; சமயம் நோக்கி அச்சிறுவனைத் தூக்கிக் கொணர்ந்து கொன்றுவிடுதலே நலம்.

**பாண்டிய மன்னர் :** (தனக்குள்) இவர்கள் எவ்வகையில் நாட்டைப் பெற்ருல் நமக்கென்ன? நமக்கென நாம் ஒருநாட்டை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்னும் நமது கருத்து முற்றுப்பெற வேண்டும். இவர்களுக்கு உதவி செய்து ஒரு சிறு நாட்டைப் பெறுவோம். பின் இவர்கள் துணைகொண்டு நமது தாயத்தாளுகிய பாண்டியனை வென்று பாண்டிய நாடு முழுவதையும் கைப்பற்றுவோம். அப்பால் இச்சோழரையும் வெல்ல வகை தேடுவோம்.

**சேர வேந்தர் :** (தமக்குள்) இவர்கள் திரை மறைவில் செயலாற்றி வெற்றி பெற்றுவிட்டால், நமது கருத்து முடிவு பெறுமோ? இச்சோணுட்டின் மேற்குப் பகுதியை முன்னமேயே கைப்பற்ற நினைத்தோம். அது கைகூடவில்லை. இப்போது இவர்களைப் போரில் இறக்கினுல்தான் நமது கருத்து முற்றுப் பெறும். அன்றியும் கோழைபோலத் திரை மறைவில் செயலாற்றுவது என் போன்றவர்க்குத் தகுதியல்ல. இன்னும் சிறிதுமுயற்சி செய்வோமாயின் இப்போரில் வெற்றி பெற்றதாகச் சோணுட்டுப் பகுதியைப் பெறுவதோடு, பாண்டியனுக்குத் துணையாய் அவன் பாண்டிய நாட்டைப் பெறச் செய்து அந்நாட்டிலும் ஒரு பகுதியைப் பெறலாம். அப்போது இவர்கள் வலி குறையும். நமது வலிமை அதிகரிக்கும். அப்போது சுலபமாக இவ்விருவரையும் அடக்கி மும்முடியரசனுக ஆகலாம்.

**தாயத்தாருள் முதல்வர் :** சேர வேந்தரே, போர்ச்செயல் குறித்து நுமது கருத்து யாது?

**சேர வேந்தர் :** மறைந்து எதிரியைத் தாக்குவது என்பது எமக்கு ஏற்காத செயல். சோழனாகிய சிறுவனைத் தூக்கிக் கொணர்ந்து கொல்லுவதென்பதைக் கனவிலும் நான் நினைக்க மாட்டேன். மேலும் மறைவில் செயலாற்றுதல் கோழைகளின் செயலாம். நீங்கள் அச்சோழனாகிய சிறுவனை ஏனோ மிக மேன்மையாக மதிக்கின்றீர்கள்? அவனுக்கு உதவியாகச் சிறந்த அமைச்சரும் படைத்தலைவரும் இருக்கலாம். அதனாலென்ன? நாமெல்லாரும் ஒருங்கு சேர்ந்து எதிர்க்கும்போது அச்சோழர் எம் மாத்திரம்? நான் உங்கட்கு உதவியாகப் பெரிய படையைக் கொணர்கின்றேன். அப்படியும் வெளிப் படையாகப் போரில் இறங்க நீங்கள் விரும்பாவிட்டால், நானே தனிமையில் போர் இயற்றி அச் சிறுவனை வெற்றி காண்பேன்!

**முதல்வர் :** (தமக்குள்) நமக்கு உதவியாகப் போர் புரிய ஒரு வலிய நண்பர் ஏற்பட்டுவிட்டார். போதிய படை இல்லாத காரணத்தால் அன்றோ மறைவில் செயலாற்ற எண்ணினோம்? சேரர் துணையிருக்கும் போது அப்படிச் செய்வானேன்? (வெளிப்படையாக) நன்று. வீரர்க்குற்ற செயலையே நீவிர் எடுத்துக் கூறினீர்! அங்ஙனமே வெளிப்படையான போரையே மேற் கொள்வோம்! நல்லது, தாங்கள் எவ்வளவு படை கொணர இயலும்?

**சேரர் :** ஓரிலக்கம் வீரரைக் கொணர்கின்றேன். ஆயிரம் யானைகளைக் கொண்ட யானைப்படையும் கொணர்கின் றேன்.

**தாயத்தாருள் இரண்டாமவர் :** அது போதுமானதே! அதிகமும் கூட என்னலாம். எங்களிடம் இருபதாயிரம் குதிரைப்படை வீரரும், இருபதாயிரம் காலாட் படையினரும் உள்ளனர். பாண்டியர் ஐயாயிரம் காலாட்படையினரைக் கொணர்கின்றார். வேளிர்

ஐம்பதாயிரம் காலாட் படையினரைக் கொணர்வர். எல்லாம் சேர்ந்து மிகப் பெரிய படையாகின்றது! வெற்றி நமதேயாம் என எண்ணுகின்றேன்!

**தாயத்தாருள் மூன்றுமவர் :** இனிப் போரியற்றுவது எவ்வாறென ஆராய்வோம். எனக்குத் தோன்றியதைக் கூறுவேன். அப்புறம் அவரவர் தங்கள் தங்கள் ஆலோசனைகளைக் கூறினால் எல்லாவற்றையும் கவனித்து ஒரு முடிவுக்கு வருவோம். என் ஆலோசனை யாவது, நமது படையை நான்கு பிரிவாகப் பிரித்து ஒரே காலத்தில் நான்கு புறமாக இருந்தும் தாக்க வேண்டும் என்பதே.

**தாயத்தாருள் நான்காமவர் :** அது நல்ல ஆலோசனையே! அதனோடு ஒரு திருத்தத்தையும் சேர்த்தால் இன்னும் மேலாகும்! அதாவது, ஒருவர் பக்கம் வெற்றியும், மற்றொருவர் பக்கம் தோல்வியுமாக நேர்ந்தால் வென்றவர், தோற்றவர் போரிடும் பக்கம் சென்று உதவி புரிய வேண்டும் என்பதே.

**இருங்கோவேள் :** ஆளுக்கொரு மூலையில் சண்டையிடும்போது வெற்றி தோல்விகள் உடனுக்குடனே அறிய இயலாதே! அதற்கென்ன செய்வது?

**முன்னவர் :** ஏன் ஆளுக்கொரு மூலைக்குப் போக வேண்டும்? கூடியவரையில் போர்க்களங்களைச் சமீபமாகவே அமைத்துக் கொள்வோம்! குதிரை அஞ்சல் ஏற்பாடு செய்துகொண்டால் அவ்வப்போது செய்திகளை அறியலாமன்றோ?

**சேர வேந்தர் :** இதெல்லாம் வீணான ஆலோசனைகள்! யாவரும் கூடி ஒருமுகமாக எதிரி எதிர்பாராத இடத்தில் போரைத் தொடங்க வேண்டும்.

**முதல்வர் :** சேரர் கூறுவதே சரி எனத் தோன்றுகின்றது! போருக்கு எவ்விடத்தைத் தேர்ந்தெடுப்போம்?

**சேரர் :** அதனை நீவிரே முடிவு செய்க! என்னைப் பொறுத்து யான் எங்கு வேண்டுமானாலும் நின்று போரிடச் சித்தமாயிருக்கின்றேன்.

**முதல்வர் :** எமது படை **கோயில் வெண்ணிக்கு** அருகில் உள்ளது. அங்குப் போரிட வசதியானதும் விசாலமானதுமான வெளியிடமும் அமைந்துள்ளது. அவ் **வெண்ணிப்பறந்தலையிலேயே** போரைச் செய்வோம்!

**இருங்கோவேள் :** அதோ, சாளரத்தில் ஒரு தலை முன் வந்து மறைந்தது போலக் காணப்பட்டது.

**முதல்வர் :** ஆ! அப்படியா! அடுத்த கூடத்தில் ஆட்கள் உள்ளனர். உடனே போய் அவ்வொற்றனைக் கொணரச் செய்கின்றேன். (எழுந்து போதல்.)

**இரும்பிடர்த்தலையார் :** (தமக்குள்) வந்ததே ஆபத்து. இதுவரையில் ஒளிந்திருந்தது போதுமானது. உடனே ஓடி இவர்களைப் பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

*[ஓடித் தப்புகிறார்; மாளிகையின் வெளிப் புறத்தை அடைந்ததும் ஊதுகுழலை ஊதுகிறார். உடனே நாற்புறமும் மறைந்துள்ள வீரர்கள் மறைவிடங்களினின்று வந்து மாளிகையைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள்.]*

**முதல்வர் :** (ஆட்களைப் போக்கிவிட்டு வந்து உட்கார்ந்து) ஒற்றன் எப்போது வந்தானோ? நமது பேச்சில் எவ்வளவு பகுதியை அவன் அறிந்தானோ? இப்போது என்ன செய்வது?

**பாண்டியர் :** ஒற்றனா...? யாருடைய ஒற்றன்? அவன் இங்கு நம்மை வேவு பார்க்கக் காரணமென்ன? அவன் ஒற்றனென்று நான் நினைக்கவில்லை. அவன் ஏன் கள்வனாயிருத்தல் கூடாது?

**முதல்வர் :** அப்படியும் இருக்கலாம். கள்வனாயிருந்தால் நமக்குத் துன்பமில்லை. ஒற்றனாயிருந்தால்...?

**இருங்கோவேள் :** ஆ! இந்த ஒற்றர்கள் எவ்வளவு திறமை வாய்ந்தவர்கள்? எவ்வளவு பாதுகாப்பான விடத்தில் ஆலோசனை நிகழ்த்தினாலும் அவ் விடத்தையடைந்து ஒற்றறிந்து சென்றுவிடு கிறார்கள்!

*[ஒற்றனைத் துரத்திச் சென்றவர்கள் திரும்பி வந்து—]*

அரசே, அவ்வொற்றன் முன்னெச்சரிக்கை யுடனேயே வந்திருக்கின்றான். அவனைப் பின்பற்றி மாடியை யடைந்தோம்! அப்போது அவன் மரக் கிளையில் தொங்கவிட்டிருந்த ஒரு கயிற்றின் வழியாக ஏறி மற்றொரு கயிற்றின் வழியாகக் கீழிறங்கி ஓடி விட்டான். நாங்கள் பின் தொடராமல் இருப்ப தற்காக மேலேறியதும் கயிற்றை மேலிழுத்துக் கிளையில் கட்டிவிட்டான்.

**சேரர் :** ஐயமில்லாமல் அவன் ஒற்றனே! ஆயினு மென்ன? நாம் விரைந்து செயலாற்றுவோம். ஒற் றன் போய்ப் பகைவனிடம் சொல்லியதனால் ஏற்படும் தீங்கு என்ன? ஆராய்ந்தால் ஒன்றுமே இல்லை. நாம் கோயில் வெண்ணியில் போரிட ஆயத்தமாவதை அவன் முன்னெச்சரிக்கையாக அறிந்துகொள்ளப் போகிறான். தெரிந்து கொள்ளட்டுமே! அங்கு வந்து நம்மை எதிர்க்கட்டும். நாம் நல்ல பாடம் கற்பிப் போம்.

**இருங்கோவேள் :** அடுத்த அறையில் ஆரவாரங் கேட்கின்றது. சற்றுக் கவனியுங்கள்.

**முதல்வர் :** இருங்கள். இரகசியப் பலகணியின் வழி யாகப் பார்த்து வருகின்றேன். (எழுந்து போய்த் திரும்பி வந்து) வந்தது ஆபத்து. இரும்பிடர்த் தலை யான் பல ஆட்களுடன் வந்து அடுத்த கூடத்தில் நமது ஆட்களுடன் சண்டையிடுகிறான். நாம் உடனே தப்பிச் செல்லவேண்டும். வாருங்கள் எல்

லாரும். சுரங்க வழியாய்த் தப்பிச் செல்லுவோம். நமது ஆலோசனையைப் பிறிதொருகால் வேருே ரிடத்தில் வைத்துக் கொள்ளுவோம்.

*[யாவரும் எழுந்து போய்விடுதல்.]*

**இரும்பிடர்த்தலையார்:** (ஆலோசனைக் கூடத்தை யடைந்து) என்ன...? ஒருவருங் காணப்பட வில்லையே. தப்பிச் சென்றுவிட்டார்கள். எப்படிச் சென்றிருப்பார்கள்? ஆராய்ந்து பார்க்கின்றேன். ஆ! இதோ ஒரு படத்திற்குப் பின்னுல் முறுக்காணி. இதைத் திருப்புகிறேன். ஆ! இதோ கள்ளக் கதவு திறந்து கொண்டது. பார்வைக்கு இது ஒரு சித்தி ரம் போல அல்லவா காணப்படுகிறது? இந்த யவனரது ஆற்றலே ஆற்றல்! சுரங்க வழியாய்ச் சென்று அவர்களைப் பிடித்தல் இயலாது. ஆயினும் இச்சுரங்கவழி எங்குச் செல்லுகிறதென்று பார்ப் போம். (சுரங்கவழியே செல்லுதல்) இதோ தோட் டத்தின் இப் பொதும்பருள் இது முடிகின்றது. தோட்டக் கதவு திறந்துள்ளது. தப்பிவிட்டனர். நாம் எல்லாரையும் அழைத்துக்கொண்டு உட்புறம் வந்து விட்டதால் அவர்கள் சுலபமாய்த் தப்பிச் செல்ல ஏதுவாய்விட்டது. போகட்டும். கோயில் வெண்ணியில் போரில் சந்திப்போம். (போகிருர்).

அங்கம் : இரண்டு

களம் : நான்கு

## போர்க்குப் பெயர்தல்

இடம் : உறையூர் அரண்மனையில் ஒரு கூடம்.

காலம் : காலை.

உறுப்பினர் : கரிகாலன், இரும்பிடர்த்தலையார், அமைச்சர், வேற்றரசர் தூதர் முதலியோர்.

**கரிகாலன் :** அன்பிற்குரிய அம்மான், நீவிர் சென்ற செய்தி யாதோ?

**இரும்பிடர்த்தலையார் :** பகைவர் நம்மீது போர் தொடுக்கத் தீர்மானித்துள்ளனர். அவர்கள் கோயில் வெண்ணியில் போரிட ஏற்பாடு செய்துள்ளனர். சேரபாண்டியர் நம் தாயத்தாராகிய நமது பகைவர்க்குத் துணையாக வர இசைந்துள்ளனர். ஆயிரம் யானைப்படை, இருபதினாயிரம் குதிரைப்படை, நூற்றைம்பது ஆயிரம் காலாள் கொண்ட பெரும் காலாட் படை—இவை நம்மை எதிர்க்கப் போகின்றன.

**கரிகாலன் :** சேரர் நம்மீது போர் தொடுப்பதாக இது வரை செய்தி கிடைக்கவில்லையே. மற்று அவர்கள் படை யெடுத்துவர வேண்டுமானால் நமது நாட்டின் மேற்குப்பக்க மிருந்தன்றோ வரவேண்டும்? மற்றுப் பாண்டியவரசரும் நம்மீது படையெடுப்பதாகச் செய்தி தெரிவிக்கவில்லையே.

**இரும்பிடர்த்தலையார் :** அதுதான் பகைவர் சூழ்ச்சி. சேரர் படையின் ஒரு பகுதி சிறு சிறு கூட்டங்களாக முன்னரே நமது நாட்டை அடைந்து விட்டது. மற்றொரு பகுதி கடல் வழியாக வந்து கொண்டிருக்கின்றது. இப்போதுள்ள பாண்டியரல்லர் அவர்க்குத் துணையா யமைபவர். அவரது தாயத்தாருள் ஒருவர். கோயில் வெண்ணியின் பக்கத்

தில் நமது தாயத்தாரின் படைகள் மறைந்து வசிப்பதால் அவர்கள் அப்பக்கமாக வந்து அவர்களுடன் சேர்ந்து நம்மை எதிர்க்கப் போகிறார்கள்.

*[காவலன் வருதல்.]*

**காவலன் :** அரசே, வாழ்க. சேரநாட்டிலிருந்து தூதரொருவர் வந்துள்ளார்.

**அமைச்சர் :** வரவிடுக அவரை.

*[காவலன் போதல்—தூதன் வருதல்.]*

**தூதன் :** அரசு வாழ்க! சேரநாட்டுத் தூதன் யான். எமதரசர் தங்கட்குக் கூறியனுப்பிய செய்தி இது. காலஞ்சென்ற சோழவரசருக்குச் சொந்தமான சோணாட்டைத் தாங்கள் கைக்கொண்டு ஆளுவதை எங்கள் அரசர் ஒப்பவில்லை. தங்கள் தாயத்தாரையே அவர் நியாயமாக அரசுக்கு உரியவராக மதிக்கின்றார். ஆதலால் நாட்டை அவர்கள்பால் ஒப்படைக்காவிட்டால் போருக்கு ஆயத்தமாக இருக்குமாறு கூறுகின்றார்.

**கரிகாலன் :** நன்று! நாங்கள் நாட்டைத் தாயத்தார்பால் ஒப்படைக்க இயலாதென்றும், போருக்கு ஆயத்தமாயிருப்பதாயும் போய் அறிவிப்பீர்!

*[தூதர் போதல் - காவலன் மீண்டும் வருதல்.]*

**காவலன் :** அரசே, பாண்டி நாட்டுத் தூதர் ஒருவர் வந்துள்ளார்.

**அமைச்சர் :** அவரை வர விடுக!

*[காவலன் போதல்-தூதன் வருதல்.]*

**தூதர் :** அரசு வாழ்க! எமதரசர் தங்கட்குக் கூறுமாறு கூறியனுப்பிய செய்தி இது: எமதரசர் தங்கள் அரசை முறையான அரசாக ஏற்றுக்கொள்ளுதற்கியலாதென்றும், அரசைத் தாயத்தார்பால் ஒப்படைக்க வேண்டும் என்றும், இல்லாவிடில் போர் குறித்து வருவதாகவும் கூறுகின்றார்.

**கரிகாலன் :** இப்போது மதுரையிலிருந்து அரசாளும் பாண்டியர் எமக்குப் பகைவர் அல்லவே! நீவிர் எப் பாண்டியரது தூதர்?

**தூதன் :** யான் அவரது தாயத்தாரது தூதன். அவர் பாண்டிய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் இருப் பவர்.

**கரிகாலன் :** ஓ! அங்கோர்பால் காட்டில் கரந் துறைந்து வழிப்பறி நிகழ்த்துகின்றாரே, அவரா? தூதர் என்னும் பெயருக்காக உம்மை ஒன்றும் செய்யாது விடுகின்றோம்! உடனே திரும்பிச் சென்று உமது தலைவரிடத்தில் வீரமிருந்தால் எம்மோடு போருக்கு வருமாறு கூறுக! இல்லையேல் காட்டிலேயே ஒளிந்து வழிப்பறி செய்யட்டும். ...காவல, இவரை வெளியிற் கொண்டுபோய் விட்டு விட்டு வருக!

*[தூதரும் காவலனும் போதல்.]*

**கரிகாலன் :** இளையன் இவன் என்று, என்னை உளை யக் கூறிச் சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை, நாளை அருஞ்சமரில் சிதையத் தாக்கிப் புறங்கொடுத்தோடச் செய்யேனாயின், 'மனதில் ஒரு சார்புற வழக்கறவுரைக்கும் புன்றொழிலர் வீழ் நரகு புக்குழலுவேன்' ஆக யான்! மேலும், 'தஞ் சென வந்தவர் தமக்கிடர் நினைக்கும் நஞ்சனைய பாதகர் நடக்கும் நெறி சேர்வேன்.'

அமைச்சரே, நிமித்திகரைக் கொண்டு நாளும் கோளும் ஆராய்ந்து நல்லோரையில் வாளையும் குடையையும் புறவீடு விடுக்க!

அங்கம்: இரண்டு
களம்: ஐந்து

## வெண்ணிப்பறந்தலை. வாகைப்பறந்தலை.

**இடம்** : *வெண்ணி, வாகைப் போர்க்களங்கள்.*

**காலம்** : *பகல்.*

**உறுப்பினர்** : *தாயமாக்கள், பாண்டி மன்னர், சேர மன்னர், இருங்கோவேள் முதலிய வேளிர் பதினொருவர், கரிகாலன், படைவீரர், புலவர், பொருநர் முதலியோர்.*

*[கரிகாலன் படை போர்க்குச் செல்லுகின்றது. வேடிக்கை பார்க்கும் மாந்தர் கூடிப் பேசுகின்றனர்.]*

**ஒருவர்:** நமதரசர் படை போர்க்குப் புறப்படும் அழகைப் பாருங்கள்! எவ்வளவு யானைகள்! எவ்வளவு தேர்கள்! எவ்வளவு குதிரைகள்! எத்தனை வீரர்கள்! படைகள் வரிசை கலையாமல் அணிவகுத்துச் செல்லும் பான்மைதான் என்னே! வீரர் கையில் பளபளவென்று மின்னும் படைக் கலங்களைப் பார்க்கும்போது நெஞ்சம் நடுங்குகின்றது!

**மற்றொருவர்:** மதநீர் வழியச் சினத்தொடு பிளிறிக் கொண்டு செல்லும் இக்களிறுகள், மின்னல் இடி முழக்கங்களோடு செல்லும் கொண்டல்களைப் போலக் காணப்படவில்லையா? இவை செல்லுவதால் பூமியைத் தாங்கும் ஆதிசேடனது பணமுடிகளும் தடுமாறுகின்றன போலும்! ஆகையினாலன்றோ இப்பூமியே அதிர்கின்றது?

**வேறொருவர்:** இங்கு வரிசையாகச் செல்லும் தேர்களை மலைச் சிகரங்களின் கூட்டம் என்னலாமா? அப்படிச் சொன்னால் அச்சிகரங்களுக்குச் சக்கரங்கள் ஏது? கொடிகள் ஏது? புரவிகள் ஏது? அவற்றைச் செலுத்தப் பாகர் ஏது?

**இன்னொருவர் :** ஆ! இப்படையிற் செல்லும் புரவி களின் வனப்பே வனப்பு! இவை கனைத்துத் தூசியை எழுப்பிக்கொண்டு செல்லும் தன்மை யானது யுகமுடிவு காலத்தில் புகை எழுப்பிக் கொண்டும், பொருள்களை அழித்துக்கொண்டும் செல்லும் ஊழித் தீயைப்போல அல்லவா உள்ளது? இவற்றின் குளம்புகள் நிலத்தில் தாக்குவதை நோக்கின் அவை மலைகளையும் பொடியாக்கிவிடும் போல் காண்கிறதே!

**பின்னொருவர் :** படைக்கலங்கள் ஒன்றோடொன்று மோதுதலாலுண்டான கலகல ஒலியோடு ஆர்த் தெழுந்து செல்லும் இக் காலாட் படையின் போக்கை நோக்கின், உலக முடிவு காலத்தில் உலக முழுவதையும் பருகுவதற்காக ஆர்த்தெழுந்து செல்லும் கடல்போல அல்லவா காண்கின்றது? இன்னும் இப்படையில் செல்லும் தேர்கள் அக் கடலிடைச் செல்லும் மரக்கலங்களைப் போலவும், அவற்றின் மருங்குசெல்லும் புரவிகள் அக்கடலிடைச் செல்லும் சுறுமீன்களைப் போலவும் அல்லவா காணப்படுகின்றன?

**போர்க்களம் பாடும் பெருநர் :** (பாடுதல்)

*(1) பண்ணுக வயக்களிறு பண்ணுக வயப்புரவி*
*பண்ணுக கணிப்பில் பல்தேர்*
*நண்ணுக படைச் செருநர் நண்ணுக செருக்களம்*
*நமக்கிகல் கிடைத்த தெனவே!*

*(2) விடவிகள் மொடுமொடு விசைபட முறிபட*
*வெறிபட நெறிபடவே*
*அடவிகள் பொடிபட அருவிகள் அனல்பட*
*அருவரை துகள்படவே.*

*(3) அறைகழ லிளையவர் முறுகிய சினவழல்*
*அதுவட வனலெனவே*
*முறைமுறை முரசுகள் மொகுமொகு வதிர்வன*
*முதிர்கடல் அதிர்வெனவே.*

(4) சென்று தேர்களும் தேர்களும் சேர்ந்தன
வென்றி வேழமும் வேழமும் ஊர்ந்தன
நின்ற வாசியும் வாசியும் நேர்ந்தன
வென்றி வீரரும் வீரரும் மேவினர்

(5) ஓடி முட்டலின் தேர்க ளுடைந்தன
நாடி முட்டலின் நாகங்கள் வீழ்ந்தன
கூடி முட்டலின் கொய்யுளை மாய்ந்தன
சாடி முட்டலின் ஆண்களும் சரிந்தனர்.

**ஒரு பொருநன் :** பகைவர் எய்யும் அம்புகளால் கொம்புகள் அடியோடு இற்றுவீழ, இறந்துபடும் யானைகள், முன்னம் கண்ணபிரானுக்கு எதிரில் கஞ்சன் வரவிட்ட குவலயாபீடம் என்னும் யானையை ஒத்துள்ளனவன்றோ? இன்னும் இப்போர்க்களத்தில் பெருகி யோடும் இரத்த வெள்ளத்தில் பாதி புதைந்த முகப்பட்டத்தையுடைய களிறுகள் நீண்ட முதலையின் வாயில் விழுந்து முன்னம் திருமாலால் காப்பாற்றப் பட்ட யானையை ஒத்துள்ளனவன்றோ?

**மற்றொரு பொருநன் :** ஆ! ஆ! இப் போர்க்களத்தில் இற்று விழுந்தன எத்தனை முடித்தலைகள்! எத்தனை புயங்கள் துணிந்து சாய்ந்தன! எத்தனை கரக் கமலம்! எத்தனை உடற்குறைகள்! எத்தனை கொடிக் குடர்கள்! எத்தனை மலர்க் கழல்கள்!

**வேறொரு பொருநன் :** ஆ! இப் போர்க்களத்தில் தலை யிற்று விழுந்த உடல்கள் எழுந்து ஆடுந்தோறும் அலகைக் கூட்டங்கள் எழுந்தாடுகின்றனவே! அதோ இரு பேய்கள், யானைகளின் இற்று விழுந்த தலைகளை வாய்களில் கவ்விக்கொண்டு இறந்த வீரர் களின் படைக்கலங்களைக் கையிற்கொண்டு ஒன்றோ டொன்று போரிடுகின்றன. அது முன்னம் இந்தி ரனும் அமரரும் துதிக்கக் கஜமுகாசுரனுடன் போர் புரிந்த விநாயகரது போரினை நினைப்பூட்டுகின்றதே!

**இன்னொரு பொருநன் :** இப்பகைவர் காணுவிடத்து ஆண்மை கூறுவர். நமதரசனைப் போரில் கண்

டாலோ எதிரில் நில்லார். பகைவர் படை புறமுதுகிட்டு ஓடுதலை இதோ கண்ணெதிரில் கண்டேன் !

**முதற் பொருநன் :** முதுகிற் புண்பட்டதனுல், பாவம் ! சேரவேந்தர் புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருக்கின்ருராம். நமதரசர் பெருமானே போரை முடித்து வாகை சூடிப் பெருமிதத்தோடு வீற்றிருக்கின்ருராம்! வாருங்கள் பொருநர்களே ! ஆண்டுச் சென்று அரசரைக் காண்போம் !

(பொருநர் யாவரும் பாடி வீடு அடைதல். அங்குக் கரிகாலன் உயரியதொரு தவிசில் பெருமிதத்தோடு வீற்றிருத்தல். அருகில் படைத்தலைவர் முதலியோர் அவரவர்க்குரிய இருக்கைகளில் அமர்ந்திருத்தல். கரிகாலன் கூட்டத்தை நோக்கிப் பேசத் தொடங்கினன் :)

**கரிகாலன் :** அன்புமிக்க குடிமக்களே, அடிபிறக்கிடாது போரில் முற்பட்டுச் சென்று ஒன்னுர் வலிகெடுத்து அவர்களை ஓடச் செய்து, பழைய மறக்குடிப் பெருமையை நிலைநாட்டிய வீரப் பெருமக்களே, பயனைக் கருதாது வீரத்தையே பெரிதென மதித்து உயிரைத் துரும்பாக எண்ணி நீங்கள் போரிட்டதனுலன்ருே இன்று எமக்கு வெற்றி கிட்டியது ! இப்போரில் விழுப்புண் பட்டவர்க்கும் கை, கால் முதலிய உறுப்புக்களை இழந்தவர்க்கும் எமது அனுதாபம். அவர்கள் குடி உலகுள்ளளவும் உண்டி, உறையுள் முதலியவற்றிற்கு இடர்ப்படாது இனிது வாழ வகைசெய்வோம். மற்றும் போரில் செயற்கரிய செய்து மேம்பட்டோர்க்கு எமது நன்றி. அந்நன்றி காரணமாக அவர்கட்கு வீரக் கழல்களை எமது கரத்தாலேயே புனைவோம். போரில் வெற்றி கிட்டுதற்கு உறுதுணையாயிருந்த படைத்தலைவர்களே, உங்கட்கு ஏனுதிப் பட்டம் வழங்கியிருக்கின்ருேம். அனைவருக்கும் வணக்கம்.

[காவலன் ஒருவன் வந்து—]

**காவலன் :** அரசே, வாழ்க! இரு புலவர்கள் வந்துள் ளனர்.

**கரிகாலன் :** வரவிடுக அவர்களை.

*[வெண்ணிக் குயத்தியாரும், கருங்குழ லாதனாரும் வருகின்றனர்.]*

**வெண்ணிக்குயத்தியார் :** [அரசனை வணங்கி—]

*"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி*
*வளிதொழில் ஆண்ட உரவோன் மருக,*
*களியியல் யானைக் கரிகால் வளவ,*
*சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற*
*வென்றோய், நின்னினும் நல்லன் அன்றே*
*கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை*
*மிகப்புகழ் உலகம் எய்திய*
*புறப்புண் நாணி வடக்கிருந் தோனே."*

**கருங்குழலாதனார் :** [அரசனை வணங்கி—]

*"களிறு கடைஇய தாள்*
*கழலுரீஇய திருந்தடிக்*
*கணைபொருது கவிவண் கையால்*
*கண்ணொளிர் வரூஉம் கவின்சா பத்து*
*மாமறுத்த மலர்மார்பின்*
*தோல்பெயரிய எறுழ்முன்பின்*
*எல்லையும் இரவும் எண்ணாய் ; பகைவர்*
*ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலை*
*கொள்ளை மேவலின் யாகலின் நல்ல*
*இல்ல ஆகுபவால் இயல்தேர் வளவ,*
*தண்புனல் பரந்த பூசல் மணமறுத்து*
*மீனிற் செறுக்கும் யாணர்ப்*
*பயன்திகழ் வைப்பிற்பிறர் அகன்றலை நாடே."*

**கரிகாலன் :** அமைச்சரே, இப்புலவர்க்கு ஆளுக் கொரு யானையும் தேரும் ஆயிரம் பொன்னும் பரிசளிக்க. மற்றும் இங்கு வந்துள்ள பொருநர், பாணர் முதலி யோருக்கும் அவரவர்க்குரிய சிறப்புக்களைச் செய்க.

**பொருநர் :** [மகிழ்ந்து பாடுதல்.]

*"ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த*
*இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய*

*வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்*
*கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்*
*தார்நிழல் மருங்கில் அணுகுபு குறுகித்*
*தொழுதுமுன் (நின்றே மாகப்) பழுதின்று*
*ஈற்றா விருப்பின் போற்றுபு நோக்கி (எம்)*
*கையது கேளா அளவை ஒய்யென*
*பாசி வேரின் மாசொடு குறைந்த*
*துன்னற் சிதாஅர் நீக்கித் தூய*
*கோட்டைக் கரைய பட்டுடை நல்கிப்*
*பெறலருங் காலத்திற் பெட்டாங் குண்கெனப்*
*பூங்கமழ் தேறல் வாங்குபு தரத்தர*
*வைகல் வைகல் கைகவி பருகி*
*எரியகைந் தன்ன வேடி ழுமரை*
*சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி*
*நூலின் வலவா நுணங்கரின் மாலை*
*வாலொளி முத்தமொடு பாடினி அணியக்*
*கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தேர்*
*பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்*
*காலின் ஏழடி பின்சென்று கோலின்*
*தாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு*
*பேரியாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்*
*தண்பணை தழீஇய தளரா விருக்கை*
*தன்பல் லூர நாட்டொடு நன்பல்*
*வெரூப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை*
*வெருவரு செலவின் வெகுளி வேழம்*
*தரவிடைத் தங்கலோ விலனே" (வாழி.)*

**நாங்கூர்வேள் :** வாழி எம் வேந்தே, வாழி! தலைநகர்க்குத் திரும்புங்கால், தாம் எளியேன் சிறு குடிலுக்கு எழுந்தருளுமாறு வேண்டுகின்றேன்.

**கரிகாலன் :** நன்று. அங்ஙனமே! இனி அவை கலைக.

அங்கம் : மூன்று
களம் : ஒன்று

## நாங்கூர் நங்கை

**இடம்** : *நாங்கூரை யடுத்த காடும் பொழிலும்.*

**காலம்** : *மாலை.*

**உறுப்பினர்** : *கரிகாலன், பாங்கன், நாங்கூர் நங்கை, தோழி முதலியோர்.*

*[கரிகாலனும் பாங்கனும் பரிமாக்களில் ஏறிக் காட்டுவழியாகச் செல்லுகின்றனர்.]*

**கரிகாலன் :** பாங்க, இக்காட்டின் அழகை நோக்கினையா? இங்கு வளர்ந்துள்ள மரஞ் செடி கொடிகள் நமது பூங்காவிலுள்ளவற்றைப் போல ஒரு நெறிப்பட அமைந்திராவிடினும், ஏதோ ஒரு நெறிப்பட்டது போன்று அழகாகக் காணப்படுகின்றதன்றோ? ஆ! இயற்கையின் அழகே அழகு!

**பாங்கன் :** ஆம்! மிக அழகாகக் காணப்படுகின்றது. இதை நோக்க எனக்கு ஒரு யோசனை தோன்றுகின்றது! அதாவது நாம் ஏன் கஷ்டப்பட்டுப் பூங்காவை வளர்க்க வேண்டும்? ஒன்றும் கவனியாமல் அப்படியே விட்டுவிட்டால் அது இயற்கை அழகு மிகுந்து மிகவும் வியக்கத் தக்கதாயிருக்குமல்லவா என்பதுதான்!

**கரிகாலன் :** ஆஹா! அபூர்வமான யோசனை! உன் மூளையின் கூர்மையே கூர்மை! அதை எந்தக் கல்லில் தீட்டினாய்?

**பாங்கன் :** ஏன் நீயும் உன் மூளையை அக்கல்லில் தீட்டி அதை என்னிலும் கூர்மையாகச் செய்து கொண்டு விடலாம் என்றா? அது நடக்காது! அந்தக் கல்லைப் பற்றிய செய்தி எதையும் உன்னிடம் கூற இயலாது!...... அதோ, தூரத்

தில் உள்ள மலையைப் பார்! கரிய அம்மலைச்சரிவில் வெள்ளிய அருவி இரண்டு இழிந்து வரும் அழகைக் காண்! அதற்கோர் உவமை சொல் பார்க்கலாம்!

**கரிகாலன் :** கரிய உனது மார்பின்மீது வெள்ளிய உனது மேலாடை விளங்கித் தோன்றுவது போலன்றோ அது காண்கின்றது!

**பாங்கன் :** ஆ! நான் என்ன செய்வேன்? எவ்வாறு உய்வேன்? என் மூளையைத் தீட்டுங் கல்லை நான் மிகுந்த பாதுகாப்பில் வைத்திருந்தும் அதை எப்படியோ கைப்பற்றியதோடு, அதில் உன் மூளையையும் தீட்டி விட்டாயே! இல்லாவிட்டால் இப்படிப் பட்ட உவமை உன் மூளையில் தோன்றியிருக்குமா? நண்பா, கொடுத்து விடு - என் கல்லை என்னிடம் கொடுத்து விடு.

**கரிகாலன் :** சரி, மூக்கால் அழாதே; கொடுத்து விடுகிறேன். அதிருக்கட்டும், அதோ பார்! அம்மலர் மரத்தின்மீது மாலைக் கதிரவனது பொன்னிற வெயில் படிந்திருப்பதானது அதற்குப் பொன்னுடை போர்த்ததுபோலக் காணப்படுகின்றதன்றோ?

**பாங்கன் :** மேலும், அதிலிருந்து பூக்கள் உதிர்வதை நோக்கின், இப்போர்வையை இவ்வேனிற் காலத்தில் என் மேல் போர்த்து எனக்கு வெப்பத்தை உண்டாக்கித் துன்புறுத்துகிறாயே என்று சொல்லிக் கதிரவனை நோக்கிக் கண்ணீர் விடுவதைப்போலக் காணப்படவில்லையா?

**கரிகாலன் :** ஆ! உன் மூளை தீட்டும் கல்லை நான் உன்னிடம் தருவதற்கு முன் நீயே எடுத்துக் கொண்டு விட்டாயா? சரி, சரி, தொலை!...அதோ பார், ஒரு மான் ஓடுகின்றது; அதைப் பின் பற்றிச் சிறிது வேட்டையாடி விட்டுச் செல்வோம்; வருகிறாயா?

**பாங்கன் :** மான் வேட்டையா? செல்! செல்! முதலில் நாலு கால் மான் வேட்டை ஆடு. அப்பால் இரண்டு கால் மான் வேட்டை ஆடு. அப்புறம் அந்த மான் இப்படி இருந்தது, அப்படி இருந்தது என்றெல்லாம் என்னிடம் இல்லாததும் பொல்லாததும் சொல்லு. பிறகு அம்மானிடம் உன் மனத்தைப் பறிகொடுத்து விட்டதாக ஓலமிடு. இதெல்லாம் உனக்கு வழக்கந்தானே! செல்! செல்!

**கரிகாலன் :** ஆனால், நீ வர மாட்டாயா?

**பாங்கன் :** அதெல்லாம் என்னால் முடியாது.

**கரிகாலன் :** அதுவும் சரியே. நீ முன்னால் சென்று எனது வரவை அறிவி. நான் சிறிது வேட்டையாடி விட்டு வருகிறேன்.

*[கரிகாலன் பாங்கனைப் பிரிந்து செல்லல்.]*

ஆ! மான் வேகமாய் ஓடிவிட்டதே! பரிமா நீண்ட தூரம் வந்ததால் அதைப் பின்பற்ற முடியவில்லை. கிடக்கட்டும்! இதோ ஒரு பொழில் காணப்படுகின்றது! இதனுள் சென்று சற்று இளைப்பாறுகின்றேன்!

*[பொழிலுக்குள் செல்லுதல்.]*

அதோ, ஒரு செய்குளம். இதோ இங்கு ஒரு ஒற்றையடிப் பாதை காணப்படுகின்றது. மனிதர் நடமாட்டம் இங்குள்ளதென்பதில் ஐயமில்லை. அச் செய்குளத்தின் கரையில் புல்தரை காணப்படுகின்றது. அங்குச் சென்று சற்றுத் தங்கிவிட்டு செல்வேன்.

*[புல்தரைக்குச் சென்று அமர்தல். நாங்கூர் நங்கை ஆங்கோர்புறம் வந்து நிற்றல்.]*

ஆ! இங்கே வந்து நிற்பது யார்? பொற்கொடியொன்று பிறையணிந்து, கொண்டல் வேய்ந்து, குவளையும் கமலமும் முல்லையும் காந்தளும் பூத்து மின்னி நுடங்குவதுபோல அன்றோ காணப்படுகின்

றது! இங்குக் காணப்படும் இந்நங்கை விண்ணுல கத் தணங்கோ? அன்றி, மண்ணுலகத்துப் பெண் ணோ? இவளது கால் நிலந்தோய்தலால், சூடிய மலர் வாடியிருத்தலால், இவள் விண்ணுலகத்தாள் அல்லள்; மண்ணுலக மடந்தையே! ஆ! எத்தகைய எழில்! இவளது எழிலாகிய காந்தம் எனதுள்ளத்தை ஈர்க் கின்றது. துன்னூசி செல்லும் வழி நூல் செல்லுதல் போல எனதுள்ளம் செல்லும் வழி எனது கால்களும் செல்லுகின்றன.

யான் இவளை யடைதல் கூடுமோ? இவளைக் கண்டு எனதுள்ளம் நெகிழுமாறுபோல, என்பால் இவள் உள்ளம் நெகிழப் பெறுமோ? இவள் மனம் அறிதல் எப்படி?

> "யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
> தான்நோக்கி மெல்ல நகும்."

இவள் தலை குனிந்து காணப்படுகின்றாள். இவ ளது கால் நிலத்தைக் கீறுகின்றது. இவற்றால் இவள் நம்பால் அன்புடையவளேயாவாள். மேலும்,

> "இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
> நோய்நோக்குஒன் றந்நோய் மருந்து."

ஆதலின் இவள் எனக்குக் கிடைப்பவளே. இவளை யணுகி வார்த்தையாடுவது எப்படி? அதோ, ஒரு வண்டு இவளது கூந்தலில் முடிக்கப்பட்டுள்ள பூக்களி லுள்ள தேனைக் குடிக்க வருகின்றது. அதனை யோட்டு வதுபோல இவளை நெருங்கி வார்த்தையாடுகின்றேன்.

**நாங்கூர் நங்கை:** (தனக்குள்) இதோ, என்முன் காணப் படுபவர் யாவரோ? இவர் மாரனோ? அன்றிக் குமாரனோ? உயரிய உடையணிந்திருப்பதால் ஒருக் கால் அரசகுமாரராகயிருக்கலாம். இவர் எந்நாட்டு அரசகுமாரரோ? ஏனோ இவரைக் கண்டதும் என் மனம் நெகிழ்கின்றது? ஆற்றின் வழிச் செல்லும் மிதவையைப்போல, என் மனம் சென்றவழி என்

அன்பும் இவர்பால் செல்லுகின்றது. இனி என் மனத்தையும் அன்பையும் இவரைவிட்டு வேறு வழியில் திருப்புதல் கூடுமோ? கூடாது.

இவரது விழிகளை எதிரிட்டு நோக்க என் விழிகட்கு வல்லமை இல்லை. இவர் என்னை நோக்கி வருகின்றார். இவரது கண்களில் அன்பு நிறைந்திருக்கின்றது. இருக்கட்டும். இவர் என்ன செய்கின்றார்? பார்ப்போம்.

**கரிகாலன் :** (அருகு சென்று) ஏ, பேதை வண்டே, நீ இவளது முகத்தைத் தாமரையென எண்ணி மயங்குகின்றாய் போலும்! அது தாமரையல்ல; மறுவில்லாத மதியாம். வானில் திரியும் மதி இவளது மறுவற்ற முகம்போலத் தன் முகம் இல்லையே என வருந்திப் பகலில் வருவதற்கு நாணி இரவில் உலாவிப் பகல் வந்ததும் கடலில் போய் ஒளிந்துகொண்டு விடுகின்றான். நீ வீணாக அவளிடம் போய் ஏமாறாதே. அப்பால் செல்!

பெண்ணமுதே, இவ்வண்டு உன் முகத்தருகு வாராமல் உன் கூந்தலிலுள்ள பூக்களையே நாடி வருகின்றதெனினும், அது உன்னை ஏதாவது துன்பம் செய்யுமோ என்று ஏங்குகின்றது என் மனம். உன்னை நோக்கிய என் கண்கள் இனி வேறு எதையும் நோக்க மறுக்கின்றன. உன் மனத்திற்கு இனியன செய்தலையே என் மனம் விரும்புகின்றது. நீ அம்மனத்தின் தன்மையை நோக்காது என்னை வெறுத்து நீங்குவாயாயின், அது என்ன பாடு படுமோ? யான் அறிகிலேன். வண்டுகள் சூழ்ந்து கலைத்தலால், இக்கூந்தலில் துவளும் இம்மலர்களை அழகுபெற யான் திருத்தி அமைக்கலாகுமோ?

**நாங்கூர் நங்கை :** ஓர் இளஞ்சிங்கம் ஒரு மெல்லியலை அடுத்துக் குறையிரந்து நிற்றல் எனக்கு நாணைத் தருகின்றது.

**கரிகாலன் :** சிங்க ஏறு இங்ஙனம் மெலிந்து குறை யிரத்தல் அதன் ஆண்மைக்குத் தகாதுதான். ஆத லின் வலிந்து கைப்பற்றுகின்றேன்.

**நாங்கூர் நங்கை :** வலிந்து கைப்பற்றுதற்கு நான் தங்கட்குப் பகை அல்லவே!

**கரிகாலன் :** ஆம்! நீ கூறுவது சரியே! ஆயின் மெல்லக் கைப்பற்றுகின்றேன்.

**நங்கை :** யான் ஏதேதோ கூறுவதும், தாங்கள் அதற் கொத்தவாறெல்லாம் செய்வதும் எனக்கு நகை யைத் தருகின்றன. (புன்சிரிப்போடு நிற்றல்.)

**கரிகாலன் :** (கையைப்பற்றி) முத்தன்ன வெண் ணகையாய்! கைக்கு உவமையாகக் கமலத்தைக் கூறுவர். உன் கை அக் கமலத்தினும் அழகிது; மென்மையானது. மனக்கினிய மாதரைக் 'கரும்பே, தேனே' என்பார். அக்கரும்பும் தேனும் நின்னை நோக்க வேம்பாம்! கடுவாம். இனி உன் நலம் முற்றும் நுகர்ந்தாலோ...?

**நங்கை :** ஆருயிர் அனையவர் ஆயினீர்! யான் கூறு தற்கு என்ன இருக்கின்றது?

**கரிகாலன் :**

> *'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி*
> *வாலெயிறு ஊறிய நீர்'*
>
> *'கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்*
> *ஒண்டொடி கண்ணே உள'*

என்னும் நாயனார் வாக்கின் உண்மையை இன்றே காணப்பெற்றேன். நங்காய்! இனி உன்னைப் பிரியேன்! பிரியின் ஆற்றேன்!...நீ யாவள்?

**நங்கை :** யான் இந்நாங்கூரை யாளும் வேளிரது மகளாவேன். தாங்கள் யாவரோ?

**கரிகாலன் :** யான் இச்சோணாட்டை ஆளும் அரசன். *கரிகாலன்!*

**நங்கை :** ஆ! தாங்கள் அரசரா?

**கரிகாலன் :** அதோ, தோழிமார் வருகின்றனர். விரைந்து செல்வாய்! நான் உன் தந்தை யரண் மனைக்கு வருகின்றேன்!

*[இருவரும் பிரிந்து போதல்.]*

**நங்கை :** (தனக்குள்) ஆ! இரு பெரு வேந்தரும் ஒரு களத்து அவிய, வெருவரு வெண்ணிப் பறந்தலை யில் போரிட்டு வென்றவரன்றோ இவர்! இவர் என் மனத்தைக் கொள்ளுதல் அரிதோ? ஆ! என்னைப் பிரிந்து சென்று விட்டனரே! ஆயினும் என் தந்தைபால் வருவதாகச் சொல்லியிருக் கின்றார். அதோ, தோழிமார் வருகின்றனர். என் உணர்ச்சிகள் என் முகத்தின் மூலமாக அவர் களுக்கு வெளிப்படாமல் மறைக்கவேண்டும். ஆ! மறுபடி நான் எப்போது அவருடன் கூடப்பெறு வேனோ?

அங்கம் : மூன்று

களம் : இரண்டு

## மணவினை மாட்சி

இடம் : *நாங்கூர் அரண்மனையில் மண மண்டபம்.*

காலம் : *காலை.*

உறுப்பினர் : *நாங்கூர்வேள், நங்கை, கரிகாலன், இரும்பிடர்த்தலையார், உறவினர், புலவர், பரிவாரத்தார், நகர மக்கள், குறுநில மன்னர் முதலியோர்.*

*[பல்லியங்கள் முழங்குகின்றன. அந்தணர் மறையோதுகின்றனர். மகளிர் மங்கல வாழ்த்துப் பாடல் பாடுகின்றனர். புரோகிதர் மணவினைச் சடங்கு நிகழ்த்துகின்றனர். கூடியிருப்பவர் அளவளாவுகின்றனர்.]*

**அவையினருள் ஒருவர் :** இம்மண மண்டபத்துச் சுவர்கள் பொன்னால் இயன்றன போலவும், ஆண்கள் பவளத்தால் இயன்றன போலவும், மேற்கட்டி முதலியன நவமணிகள் இழைத்துச் செய்யப்பட்டன போலவும் காணப்படும் அழகினைக் காண்.

**மற்றொருவர் :** மணமக்கள் வீற்றிருத்தற்காக இங்கு அமைக்கப்பட்ட மணவறையையும் தவிசையும் பார்த்தனையா? அவை பொன்னும் மணியும் குயிற்றி இயற்றப்பட்டிருக்கும் பான்மையைப் பார். இதனைப் பார்த்தால் கண்பெற்ற பேறேயாகும். இம்மண வறையைச் சூழ்ந்து நான்கு புறங்களிலும் அசைந்தாடுமாறு அமைக்கப்பட்ட பொன்னரிமாலைகள் வானிடை மின்னும் மின்னைப்போல அல்லவா காட்சியளிக்கின்றது!

**வேறொருவர் :** இங்குச் சுவர்களில் வரையப்பட்டுள்ள சித்திரங்கள் உயிரோவியங்களாகக் காணப்படும் வனப்பு வனப்பே! இங்கு வரையப்பட்டுள்ள மரஞ்

செடி கொடிகளின் சித்திரங்களும் இங்கு மணவறை யலங்காரமாக அமைக்கப்பட்டுள்ள கமுகு, வாழை முதலிய குலைகளின் தோற்றமும் இவ்விடத்தை ஒரு பொழில் போலக் காணப்படச் செய்கின்றனவே!

**இன்னொருவர் :** ஆ! மணமக்களாம் வளவனும் நங்கையும் ஒருசேர வீற்றிருக்கும் மாண்புதான் என்னே! திருமாலும் திருமகளும் திருவைகுந்தத்து வீற்றிருக்கும் சிறப்பையன்றி வேறு எதனை இதற்கு ஒப்புமை கூறலாம்!

**பின்னொருவர் :** ஆ! இம்மணமக்கள் இம்மணவறை யிடத்து வீற்றிருக்கும் பான்மை திருக்கைலாயத்து எம்மிறைவனும் இறைவியும் வீற்றிருக்கும் கோலத்தையே போலும்!

**வேறு ஒருவர் :** இம்மணமக்கள் இவ்வழகிய மணவறையில் வீற்றிருப்பதை இந்திரன் தன் அவைக்கண்ணே இந்திராணியுடன் வீற்றிருப்பதை ஒக்கும் என்பேனா? அன்றிக் காமனும் இரதியும் தம் மணவினைக் காலத்தில் அமர்ந்த பான்மையை ஒக்கும் என்பேனா? இவை யெல்லாம் அன்று. செவ்வேள் தெய்வயானையம்மையை மணந்த காலத்து வீற்றிருந்த தன்மையே இதற்கு ஒப்பாம்.

**மங்கையர் :** (மங்கல வாழ்த்துப் பாடுதல்.)

*மங்கல மணவினை மாட்சி ஓங்கவே*
*மங்கல மனையறம் மாணச் சிறக்கவே*
*மங்கலம் பெருகவே நம்பியும் நங்கையும்*
*மங்கலம் முற்றுற மகிழ்ந்து வாழ்கவே.*

**புலவர்கள் :** வாழ்க வளவர்கோன்! வாழ்க நாங்கூர் நங்கை! வாழ்க மன்னன் கரிகாலன்! வாழ்க அவன் மனைவியாம் நங்கை! வாழ்க மன்னவன் கொற்றம்! வாழ்க வையகம் எல்லாம்!

**சாப்பாட்டு ராமர்கள் :** ஆ! ஆ! என்ன சாப்பாடு! என்ன சாப்பாடு! எத்தனை கறி! எத்தனை கூட்டு!

எத்தனை பச்சடி! எத்தனை வகைப் பாயசம்! எத்தனை வகைச் சித்திரான்னங்கள்! எத்தனை வகைப் பண்ணியாரங்கள்! அல்வா, லட்டு, ஜிலேபி எனச் சிலவகைகளை நான் கேட்டிருக்கிறேன். நான் கண்ணால் பார்க்காத, காதால் கேட்காத பக்ஷணங்கள் எல்லாம் செய்திருக்கிறார்களே! இன்னும் பழவகைகள் எத்தனை! மா, பலா, வாழை என்னும் முக்கனி மட்டுமா? இன்னும் எந்தெந்த நாட்டிலிருந்தோ எத்தனையோ மன்னர் கொணர்ந்தார்கள் எனச் சொல்லுகிறார்கள். இதுவரை கண்டுங் கேட்டுமறியாத பழங்களை எல்லாம் அல்லவா இன்று கண்டேன்! உண்டேன்!

ஆ! ஆ! பாயசம் உண்டால் பாயசத்தையே உண்ணவேண்டும்போல் இருக்கிறது! பலகாரங்களை உண்டால் பலகாரங்களையே உண்ணவேண்டும்போல் இருக்கிறது! பழங்களை உண்டால் பழங்களையே உண்ணவேண்டும்போல் இருக்கிறது! இன்னும் சித்திரான்னங்களை உண்டால், பொரியல், அவியல் இவற்றை உண்டால், அவ்வவற்றையே உண்ண வேண்டும்போல அத்தனை உருசியாக அல்லவா இருக்கிறது!

ஆ! ஆ! பிரமாதம்! பிரமாதம்! இந்த மாதிரி மணவினை இதற்குமுன் நடந்ததில்லை! இனி நடக்கப் போவதுமில்லை.

**கலா விநோதர்கள் :** ஆ! ஆ! என்ன பாட்டு! என்ன பாட்டு! இன்று பாடிய அந்நங்கையின் எழிலை என்னவென்று சொல்லுவேன்! காமனும் கண்டு காமுறும் எழில் வாய்ந்த அந் நங்கை தன் மிடற்று வழி இசை எழுப்பிப் பூங்குயில் மாந்தர் குரல் கொண்டு பாடுவதுபோலப் பாடிய எழிலே எழில்! என்ன ஐயா, வான் அளாவப் புகழ்கிறீர்! கல்யாணி பாடினால் காம்போதி பாடுகிறாள் என்பீர்! ஆதிதாளம்

போட்டால் மட்டிய தாளம் போடுகிருன் என்பீர்! ஆ! ஆ! யாழ் வாசித்தாளே அந்நங்கை! அந்த வாசிப்பின் அழகே அழகு! யாழின் நரம்பு ஒலித்ததா, அவளது மிடற்று நரம்பு ஒலித்தா என்பதே தெரிய வில்லையே! அந்தக் காலத்தில் அநுமார் பாறை உருகப் பாடினுர் என்று கதை சொல்லுவார்கள். அவளுடைய யாழ் ஒலி கன்மனத்தார் எல்லாரையும் கரைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை!

ஆ! ஆ! என்ன நாட்டியம்! என்ன நாட்டியம்! பதாகம், திரிபதாகம், முகுளம், கபித்தம், சிம்ஹமுகம், ஸூசி, கர்க்கடகம்—அந்தந்தக் கைகளெல்லாம் அப்படி அப்படியே! தாளக்கட்டு, தீர்மானம் ஒரு துளி தவற வேண்டுமே, கிடையாது! எல்லாம் பட்டுக் கத்திரித்தாற்போல! ஆடினுளே அந் நங்கை யின் ஆட்டம்! இன்னும் என் கண்முன்னே நிற்கின் ருள் அவள்! இல்லை, இல்லை! ஆடுகின்ருள்! பதினெருவகை ஆடலும் முற்றமுடிய அல்லவா முடித்துக் காட்டினுள்! தலைக்கோல் பெற்றவள்! தலைப் பரிசாகிய ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் பெற்றவள்! அவள் ஆட்டத்திற்குக் கேட்கவா வேண் டும்! தேவருலகத்து ரம்பை, ஊர்வசி எல்லோரும் இவள் கால்தூசிக்கு ஒப்பாக மாட்டார்கள்.

**யாவரும் :** கரிகாலன் - நங்கை மணவினையே மண வினை! அம்மன்னனது மாண்பே மாண்பு! எல்லா இன்பங்களும் துய்த்தவாறு வாழ்க மணமக்கள்!

அங்கம் : நான்கு

களம் : ஒன்று

## வடநாட்டு நெடுஞ்செலவு

**இடம்** : *கரிகாலன் அவை.*

**காலம்** : *காலை.*

**உறுப்பினர் :** *கரிகாலன், ஐம்பெருங் குழுவினர். எண்பேராயத்தார் முதலியோர்.*

*[அவை கூடியிருக்கின்றது. கரிகாலன் அரசு கட்டிலில் அமர்ந்திருக்கின்றான். நாடு காவல் முதலிய செயல்கள் ஆராயப்படுகின்றன.]*

**கரிகாலன் :** அமைச்சரே, நமக்குப் பகையாயமைந்தோர் மேலும் நமக்குக் கேடு சூழும் செய்திகள் ஏதேனும் நிகழ்கின்றனவோ? அதுபற்றி ஒற்றர் ஏதேனும் செய்தி அறிவிக்கின்றனரோ?

**அமைச்சர் :** இல்லை, அரசே! நமது பகைவர் தாயமாக்களே. வெண்ணிப் பறந்தலையிலும், வாகைப் பறந்தலையிலும் அவர்களில் பெரும்பாலோர் அழிந்து பட்டனர். எஞ்சி நின்றவருள் முக்கியமானவர் அருவா நாட்டுக் குறும்பரிடம் அடைக்கலமாய் மறைந்தொழிந்து போனதைத் தாங்கள் அறிவீர்கள். அவ்வருவா நாட்டவரை அடக்கி அத்தாயத்தவரைக் கொணர நமது படைத் தலைவரை அனுப்பினோம். இதுவும் தாங்கள் அறிந்ததே. அப்படைத் தலைவர் அவர்களை வென்று திரும்பிவந்து கொண்டிருக்கின்றனர் எனச் செய்தி வந்துள்ளது.

**கரிகாலன் :** திருக்கோவலூர் மலையமானுக்கு நாம் அனுப்பிய செய்தி யாதாயிற்று?

**அமைச்சர் :** அவர் நமது தலைமைக்குட்பட்டு நமக்குத் திறையளிக்கும் குறுநில மன்னராய் இருக்க

இசைந்துவிட்டார். அவர் அனுப்பியுள்ள திறைப் பொருள்களும் வந்துள்ளன.

**கரிகாலன் :** மற்றுத் திறை கொடாத மன்னர் எவரே னும் உளரோ?

**அமைச்சர் :** இப்போது ஒருவரும் இல்லை. முன்னம் மனம் வேறுபட்டுப் பூசல்விளைத்த பன்றி நாட்டு ஒளியர், மள்ளர், பாண்டி மன்னர், பூழி, குடம், குட்டம், கற்கா, வேண் ஆகிய நாட்டுமன்னர் யாவரும் இப்போது நமக்கடங்கி முறைப்படி திறை அளந்து வருகின்றார்கள். மேலும் முல்லை நிலப் பொதுவரும் அடங்கிவிட்டனர்.

*[ஒரு காவலன் வந்து-]*

**காவலன் :** அரசே, வாழ்க! அருவா நாட்டுக்குச் சென்று வென்ற படைத் தலைவர் வந்துள்ளார்.

**கரிகாலன் :** நன்று. வரவிடுக அவரை.

*[காவலன் போதல்—படைத் தலைவர் வருதல்.]*

**படைத்தலைவர் :** அரசே, வாழ்க! வென்றது நம்படை! வீழ்ந்தனர் பகைவர்! தாயத்தார் தப்பியோட முயன் றார். ஆனால், நமது படைகள் அவரை வளைத்துக் கொள்ளவே, போரிட்டு மடிந்தார்.

**அமைச்சர் :** அரசே, இனி நமக்குப் பகைவர் எவரும் இல்லை!

**கரிகாலன் :** தமிழ் நாட்டில் நமக்குப் பகையாய் ஏற் படாதவாறு யாவரும் அடங்கிவிட்டனரேனும் யான் வறிதே இருப்பதற்கில்லை. பெற்றதே போதும் என்று இருப்பவன் மன்னனாகான். தென்னாடு அடங்கிற்று என்றால், வடநாடு அடங்காமல் உள்ள தன்றோ? பண்டு தமிழ்நாட்டவர் இமயம்வரை படையெடுத்துச் சென்று பல வடநாட்டரசரை வென்றுள்ளனரன்றோ? அவ்வாறே யாமும் செய்தா லன்றி நமக்குப் புகழ் உண்டோ? மேலும் யான்

அதற்கப்பாலும் செல்லக் கருதுகின்றேன். விரைந்து அதற்காவனவற்றைச் செய்து முடிப்பீர்.

*[காவலன் ஒருவன் வந்து-]*

**காவலன் :** அரசே வாழ்க! கடியலூர் உருத்திரங் கண்ணனார் வந்துள்ளார்.

**கரிகாலன் :** வரவிடுக அவரை.

*[காவலன் போதல்—புலவர் வருதல்.]*

**புலவர் :** அரசே, வாழ்க! சிறக்க நும் கொற்றம்!

*"மலையகழ்க் குவனே கடல்தூர்க் குவனே*
*வான்வீழ்க் குவனே வளிமாற் றுவன்எனத்*
*தான் முன்னிய துறைபோகலின்*
*பல்லொளியர் பணியொடுங்கத்*
*தொல் அருவாளர் தொழில் கேட்ப*
*வடவர் வாடக் குடவர் கூம்பத்*
*தென்னவன் திறங்கெடச் சீறி மன்னர்*
*மன்னெயில் கதுவும் மதனுடை நோன்றாள்*
*மாத்தாளை மறமொய்ம்பின்*
*செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப்*
*புன்பொதுவர் வழிபொன்ற*
*இருங்கோவேள் மருங்குசாயக்*
*காடுகொன்று நாடாக்கிக்*
*குளந்தொட்டு வளம்பெருக்கி*
*பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்*
*கோயிலொடு குடிநிறீஇ(ய) .*
*.... .... .... .... .... .... .... ....*
*அரிமாவன்ன அணங்குடைத்துப் பின்*
*கரிகால் வளவ .... .... .... .... ...."*

நின் பெருமையைக் கேட்டு நின்னைக் காணிய வந்தேன். நின் திகிரி குவலய முழுதும் திரிக!

**கரிகாலன் :** நன்று, புலவரே! பொருளாழ்ந்த நுமது இப்பாடலுக்கு மகிழ்ந்தோம். அமைச்சரே, இப்புலவருக்கு உயரிய வரிசையோடு, ஆயிரம் பொன்னும் வழங்குக!

*[காவலன் வந்து-]*

**காவலன் :** அரசே, வாழ்க! வாயிலில் முனிவர் ஒருவர் வந்துள்ளார்!

**கரிகாலன் :** வரவிடுக அவரை.

[காவலன் போதல்—முனிவர் வருதல்.]

**முனிவர் :** சிவோஹம்! சச்சிதானந்தம்! மன்னவ, வாழி! செழிக்க நின் கொற்றம்!

**கரிகாலன் :** வருக! வருக! முனிவர் பெருமானே! அடிகள் இங்கெழுந்தருளப் பெற்றது என்கொலோ? இவ்விருக்கையில் எழுந்தருள்க! வணக்கம் பல!

[வணங்குதல்.]

**முனிவர்:** சிவோஹம்! சச்சிதானந்தம்! எமது இருக்கையின் எதிரில் வீற்றிருக்கும் அதோ அச் செல்வரது மேலங்கியின் நீலநிறம் யாவற்றினும் சிறிது மேம்பட்டுத் தோன்றுகின்றது. அவரது காதில் அணிந்துள்ள பொற்குண்டலங்களின் ஒளி, அந் நீல நிறத்தின்மிசை இலேசாகப் படிகின்றது. இங்கு வந்துள்ள எமது கண்முன் மற்றவற்றினும் இவை சிறக்க முற்பட்டுத் தோன்றுவதால், உனக்கு வருவதோர் ஆபத்து உண்டென்றும், தக்க முயற்சி செய்யின் அது விலகுமென்றும் தோன்றுகின்றது.

**கரிகாலன் :** ஆபத்தா...? அது எவ்வகையில் நேரும் எனக் கூற இயலுமோ?

**முனிவர் :** இதோ, உனது மார்பின் மணிமாலையுள் நாயகமணியா யமைந்த மரகதமணி நிறம் மேம்பட்டு ஒளிர்கின்றது. ஆதலின் அஃது ஒரு தெய்வத்தால் தோன்றுவதாகும்.

**கரிகாலன் :** எத்தெய்வத்தாலோ...?

**முனிவர் :** சிவோஹம்! சச்சிதானந்தம்! பச்சை இரத்தினத்திற்கு உரியவையாகப் பல தெய்வங்களைக் கூறுவதுண்டு. ஆகையால், எத்தெய்வத்தால் ஏற்படுமெனத் திட்டமாகக் கூறுதல் இயலாது. என்

மனத்துள் தோன்றும் சில குறிப்புக்களைக் கொண்டு பாசண்டச் சாத்தனால் தீங்கு நேரலாமெனத் தோன்றுகின்றது.

**கரிகாலன் :** பாசண்டச் சாத்தனா? அஃது அருளுடைத் தெய்வமன்றோ?

**முனிவர் :** சிவோஹம்! சச்சிதானந்தம்! அருள்வதும் வெகுள்வதும் அவரவர் காலத்திற்கேற்ப ஏற்படும். சிவபிரானாகிய கடவுளுக்கு ஆக்கல், அளித்தல் இவற்றோடு அழித்தலும் உண்டன்றோ?

**கரிகாலன் :** இதற்குச் செய்யத் தக்க பரிகாரம் யாதோ?

**முனிவர் :** சிவோஹம்! சச்சிதானந்தம்! உண்டு. பாசண்டச் சாத்தற்குச் சிறப்பான பூசனை புரிவதே பரிகாரமாகும்.

**கரிகாலன் :** தாங்கள் அப்பூசனையைச் செய்யலாகுமோ? அல்லது வேறு யாரையாவது கொண்டு செய்வதோ?

**முனிவர் :** சிவோஹம்! சச்சிதானந்தம்! காஞ்சியிலுள்ள எமது குருநாதர் முன்னிலையில் இப்பூசனை புரியின் மிக்க நன்மையாம். அருளுருவாகிய அவர், யாவர் எதுவேண்டினும், அது தம்மால் செய்யக் கூடியதா யிருப்பின் மறுக்காது செய்வர். அவர் வசிக்குமிடத்திற்கு அருகாமையில் சாத்தன் கோயிலொன்றும் உள்ளது.

**கரிகாலன் :** முனிவர் பெருமானே, நன்று. யான் சில பரிவாரத்தோடு அவரைக் காணக் காஞ்சிக்கு வருகின்றேன். அவரை எப்போது காண்போம்?

**முனிவர் :** சிவோஹம்! சச்சிதானந்தம்! யாம் தல யாத்திரையாக வந்தவிடத்து உலகங் காக்கும் அரசனாகிய உன்னைக் காணாது செல்லல் தகுதியன்றென வந்தோம். வந்த விடத்துச் சில குறிகள் நேர்ந்தமையின் மனத்துள் தோன்றியவற்றைக் கூறினோம்.

இனி எமது விருப்பப்படி சில தலங்களைத் தரிசித்த பின்னர் இன்னும் ஒரு மாத காலத்தில் காஞ்சியை யடைவோம். ஆதலின் நீவிர் இற்றைக்குச் சரியாக ஒரு மாத காலத்தில் - அதாவது அடுத்த அஷ்ட மியன்று - காஞ்சிக்கு வந்தால் எம்மை அங்குள்ள **சதாசிவபட்டர் மடத்தில்** சந்திக்கலாம். அப்போது நாம் மேல் நடக்க வேண்டியவற்றைத் தெரிவிப் போம். அதுவரை இன்னலொன்றுமில்லை. ஆதலின் கவலையுறு தொழிக.

**கரிகாலன் :** நன்று. அங்ஙனமே வருகின்றேன். யாதொன்றுக்கும் பற்றாத எளியேன்மீது கருணை கூர்ந்து எழுந்தருளி வந்து எமக்குண்டாகும் துயரைப் போக்க முற்பட்டீர்கள். இப்பேருதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்ய இயலும்? இதோ, என் வணக்கமே கைம்மாறு. இன்று அடியேன் சிறு குடிலில் எழுந்தருளி அன்னமருந்திச் செல்லல் வேண்டும்.

**முனிவர் :** சிவோஹம்! சச்சிதானந்தம்! கைம்மாறு எமக்கெதற்கு? எமக்கு இப்புவியில் வேண்டுவது யாது உளது? பசியெடுத்தபோது கிடைத்த உணவு, குருநாதர் அருள், கடவுளருள்-இவையே வேண்டுவன. இதுபோது உணவில் எமக்கு விருப்பமில்லை. ஆதலின் யாதொன்றும் வேண்டா. வந்த காரியமோ முடிவுற்றது. யாம் இப்போதே செல்லவேண்டும். தயங்காது விடையளிப்பாய். சிவோஹம்! சச்சிதானந்தம்!

*[பேசியவாறே முனிவர் எழுந்துசெல்கின்றார்.]*

**கரிகாலன் :** ஆயினும் அடிகள் சிறிது பழங்களையாவது அருந்திச் செல்ல வேண்டுகிறேன். யாரங்கே?... அமைச்சரே, பழங்கள் கொணரச் செய்க.

**முனிவர் :** (நடந்து கொண்டே) சிவோஹம்! சச்சி தானந்தம்! வேண்டாம் அப்பனே, வேண்டாம்.

அன்பே அமுது! அன்பே சிவம்! அன்பே அனைத்தும்! உன்பால் உள்ள அமுது எனது மனத்தைத் திருப்திப் படுத்திவிட்டது. சென்று பிறிதொரு கால் வருவோம். அப்போது உன் விருப்பப்படி நடப்போம். இதுபோது எமது போக்கைத் தடுத்தல் வேண்டா. சிவோஹம்! சச்சிதானந்தம்!

*[போய்விடுதல்.]*

**கரிகாலன் :** இனி அவை கலைக.

## அங்கம்: நான்கு
## களம்: இரண்டு

### காஞ்சி நிகழ்ச்சி

**இடம்** : *காஞ்சி நகர் மதிற்புறத்தை யடுத்ததோர் பொழில்.*

**காலம்** : *மாலை.*

**உறுப்பினர்** : *கரிகாலன், கோதமன், கோசிகன், அகோர முனிவர் ஆகியோர்.*

*[கரிகாலன் மாறுவேடத்துடன் காஞ்சி நகர் மதிற்புறத்துத் தனித்து வருகின்றான்.]*

**கரிகாலன் :** (தனக்குள்) அவைக்கு வந்து வருவதுரைத்துச் செய்யத் தக்கனவற்றைக் கூறிய முனிவர், தமது குருநாதர் எழுந்தருளியுள்ள இடம் இவ்விடத்திற்கு அணித்தானது என்றார். அவருடன் குருநாதர்பால் செல்லுதற்குரிய காலம் நாளை நள்ளிரவே யாயினும், அப்பெரியாரை விரைந்து காணுதற்கு விழைகின்றது என் மனம். தனிமையில் ஊரைச் சுற்றிப் பார்க்கப் போந்ததும் ஒருவகையில் நல்லதாயிற்று. எவருங் காணுவகையில் அவ்வகோர முனிவர் தவச்சாலையை யடைந்து அவரது பெருமைகளைக் கண்டு களிக்கவேண்டும். அதற்கேற்றவாறே இரவும் வந்து கொண்டிருக்கின்றது. இப்போது அடியவர் கூட்டம் அத்தவச் சாலையில் அப்பெரியாரிடம் அளவளாவிக் கொண்டிருக்கக் கூடும். யானும் கூட்டத்தோடு கூட்டமாய் ஒரு மூலையில் அமர்ந்து கவனிக்கின்றேன்.

இதோ, ஒரு பொழில் காணப்படுகின்றது. இப்பொழிலில்தான் முனிவர் இருக்கை இருக்க வேண்டும் என்றெண்ணுகிறேன். இதோ, ஒரு கொடிவழி இதற்குள் செல்லுகின்றது. இதன் வழியாகச் செல்கின்றேன்.

ஆ! இதென்ன! இவ்வளவு தொலைவு வந்தும் ஆளரவமே காணேமே! ஒருவேளை முனிவர் இருக்கை வேறு எங்காவது இருக்குமோ! அவர் மதிற்புறத்துப் பொழில் என்ருர். இப்பொழிலைத் தவிர வேறு பொழில் இருப்பதாகப் புலப்பட வில்லையே! இன்னும் சிறிது தூரம் சென்று பார்க் கின்றேன்!

இதோ, பேச்சுக்குரல் கேட்கிறது. ஆச்சிரமம் இங்கில்லாவிட்டாலும் இங்குப் பேசுபவர்களை வினவி ஞல் அது இருக்குமிடம் தெரியக் கூடும். இதோ, ஒரு குடிசை. இதனுள்ளேதான் பேச்சுக்குரல் கேட்கின்றது. சற்று நின்று கவனித்துவிட்டுப் பின்னர் உள்ளிருப்பவர்களை அழைத்துப் பேசு வோம்.

**வீட்டினுள் ஒரு குரல் :** என்ன கோதமா, காரியத்தைச் சாதித்துவிட்டாய் போலிருக்கிறது.

**கோதமன் :** இந்தக் கோதமன் செல்லும் காரியம் பலிக்காமற் கூடப் போவதுண்டா? உனக்கு ஒரு தெய்வத்தால் தீங்கு நேரப் போகிறதென்று ஒரு சொக்குப்பொடி போட்டேன். ஆள் மயங்கிவிட்டான். மயங்கிவிட்டான் கோசிகா, மயங்கி விட்டான்.

**கோசிகன் :** சடைமுடி, தாடி, மீசை, உன் சொக்குப் பொடி எல்லாம் சேர்ந்து ஆளை மயக்கி விட்டன! அப்புறம்...?

**கோதமன் :** சிவோஹம்! சச்சிதானந்தம்! நாளை நள் ளிரவில் அவனை இங்கே கூட்டிவருவேன்!... ...நமது குருநாதர் எங்கே...?

**கோசிகன் :** அவர் நாளை நிகழ வேண்டிய செயலுக் காக முன்னர்ச் செய்தற்குரிய சில செயல்களைச் செய்து முடிக்கச் சுடுகாட்டுக்குச் சென்றிருக்கின்ருர்.

**கோதமன் :** சரிதான். அதற்காக இப்போதே போவானேன்? வழக்கம்போலச் சில நாழிகைப்போது முன்னால் போனால் போதாதோ?

**கோசிகன் :** சாதாரணமாயிருந்தால் போதுந்தான்! இவ்வொருவனேடு இம்முயற்சியே முடிந்துவிடுகிறதல்லவா? ஏதோ சில பூசைகள் முடிவு பெருமல் அரைகுறையாக நிறுத்தி யிருந்தாராம். அவற்றை முடிக்கக் கருதிச் சென்றிருக்கிருர்.

**கோதமன் :** அது சரிதான். ஆனால், நாளை நமது குருநாதருக்குச் சாத்தன் அருள் கிட்டிவிடும் என்று சொல்லு!

**கோசிகன் :** தடை யென்ன? அப்புறம் உலகமே அவர் காலடியின் கீழ்! நமக்கு இந்திர போகம்!

**கோதமன் :** உஸ்! இரையாதே! 'பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் வேண்டாம்' என்னும் பழமொழியை நீ கேட்டதில்லையா?

**கோசிகன் :** அது கிடக்கிறது! இந்த இரவில் நமது இந்த ஆச்சிரமத்தில் அடியெடுத்துவைக்கத் துணிபவனும் இருக்கின்ருனு? ஊரார் பகலிலேயே இங்குவர அஞ்சுவது உனக்குத் தெரியாதா?

**கோதமன் :** சரிதான் எனக்கும் இப்படி ஆள் பிடிப்பது தொல்லையாகத்தான் இருக்கிறது! நாளையோடு எல்லாம் தீர்ந்துவிட்டால் முதலில் இக்கொலை பாதகம் தொலையும்.

**கோசிகன் :** இரையாதே. அதோ, குருநாதரது பாதக் குறட்டின் ஓசை கேட்கிறது. பேசாமல் தூங்குவது போல் பாசாங்கு செய்.

**கரிகாலன் :** (தனக்குள்) ஆ! இது ஏதோ விபரீதமாகக் காண்கிறதே. நம்மைக் குறித்துத்தான் இவர்கள் பேசுகிருர்களா? அல்லது வேறு யாரையாவது குறித்துப் பேசுகின்ருர்களா? 'சிவோஹம்,

சச்சிதானந்தம்' என்றவன் நம்மிடம் வந்த முனிவன் என்பதில் ஐயமில்லை. அவன் சாத்தன் அருள் என்று ஏதோ கூறினன். 'குருநாதர்' என்று ஏதோ கூறினன். 'பலி, கொலைபாதகம்' என்றான். இவை எல்லாம் எவற்றைக் குறிக்கின்றன? நன்றாக ஆராய வேண்டும். பாதக் குறட்டின் ஒலி அருகில் வந்துவிட்டது. நன்றாக மறைந்து இன்னும் கவனிக்கின்றேன்.

*[குருநாதர் வந்து கதவைத் தட்டுகிறார். கதவு திறக்கப்படுகிறது.]*

**குருநாதர் :** எல்லாம் முடித்துவிட்டேன். அந்தக் கரிகாலன் ஐயங்கொள்ளாதவாறு எல்லாச் செயல்களையும் விழிப்புடன் செய்ய வேண்டும். சிறிது தவறினாலும் காரியம் கெட்டுவிடும். அவன் நமக்காக இங்கு வந்துள்ளான் என்பது எவருக்கும் தெரியலாகாது. நீ அவனிருப்பிடம் சென்று அருகிலேயே இருந்து நாளை இரவு குறித்த நேரத்தில் இங்குக் கூட்டிவா.

**கோதமன் :** அது வேண்டாம். அவன் இங்கே வந்திருப்பதை எவரும் அறியார். அவன் இன்று மாலை தான் இங்கு வந்தான் என்றார்கள். நாளைக் காலைக்குள் அவனுடன் எவரும் பேச்சுக் கொடுத்து ஏதும் செய்துவிட இயலாது. மேலும் அவன் செயல்களைக் கவனிக்குமாறு நம் **சார்ங்கலனை** அங்கே நிறுத்தியிருக்கிறேன்.

**கரிகாலன் :** ஆ! என்னையே வேவு பார்க்கின்றார்களா? சரிதான். இவர்கள் ஏதோ சூதினையே கருதியிருக்கின்றார்கள். முற்ற முடிய இன்னும் இன்று அறியக் கூடியவைகளை அறிந்துகொண்ட பின்பே திரும்புவேன். இவர்கள் செயலை நோக்கின் நான் மிகவும் விழிப்பாய் இருக்க வேண்டும் என்பது ஐயமற

விளங்குகின்றது. நல்லது. இன்னும் என்ன பேசு கிருர்கள் என்பதைக் கவனிக்கின்றேன்.

**கோசிகன் :** குருநாதா. ஒரு செய்தி. அவன் நமது பூசையைக் கண்டு ஐயங்கொள்ளாமல் இருக்க வேண்டுமே.

**குருநாதர் :** அதைப் பற்றிய கவலை வேண்டாம். அவன் நள்ளிரவில்தானே இங்குவரப் போகிருன். சுற்றுப்புறத்தி லிருப்பவை என்ன தெரியப் போகி றது? நீ மட்டும் நான் சொன்னதை நினைவில் வைக்க வேண்டும். ஆட்டைப் பலி கொடுத்ததும் அவன் கவனத்தை என் பக்கம் ஈர்த்து மந்திரோச் சாடனம் செய்வேன். அடுத்தாற்போலுள்ள மேடை மறைவினின்று ஓடிவந்து உடனே ஒரே வெட்டில் இருதுண்டாகச் செய்ய வேண்டும். தெரிகிறதா?

**கோசிகன் :** கட்டளை குருநாதா! சொன்னவாறே செய்து முடிப்பேன்.

**குருநாதர் :** இறுதிப் பலி! குறைவு நேரக் கூடாது. வெண்ணெய் திரளும்போது தாழி உடையுமாறு விடக் கூடாது.

**கோசிகன் :** அப்படியே.

**குருநாதர் :** நல்லது. உறங்கச் செல்லுங்கள். காலை யில் வழக்கம்போல் செயல்கள் நடக்கட்டும்.

**கரிகாலன் :** (தனக்குள்) பசுத்தோல் போர்த்த புலி கள். இத்தகையோரும் உலகில் இருக்கின்றனர். நான் பிறந்தகாலை ஒரு முனிவர் தந்தையைத் தேடி வந்ததையும், அவரால் விளைந்த நன்மையையும் கேள்வியுற்று என்பால் வந்தவரும் அத்தகையோர் என எண்ணி ஏமாந்தேன். இறுதிப் பலியாம்! பூசை முற்றுப் பெற்ருல் சாத்தன் அருளாம்! உலகை 'எல்லாம் ஆட்டிவைப்பானும்! இத்தகை யோனிடம் உலகம் அகப்பட்டால் என்ன ஆகும்?

குரங்கின் கைப் பூமாலைதான்! இவர்களை ஒழித்தே தீரவேண்டும். இப்போதே ஒழித்து விடுவோமா? கூடாது. இவர்கள் நாடகத்தை முற்ற முடியப் பார்க்க வேண்டும். நாளை இரவு இங்கு வந்து ஆட்டைப் பலி கொடுத்து என்னை நோக்கி மந்திரம் உச்சரிக்கத் தொடங்கியதும் உடைவாளை உருவி இக்குருவைச் சாய்க்க வேண்டும். அப்பால் அந்தச் சீடன்! மற்றொரு சீடன் அப்போது ஓடத் தொடங் கலாம்! நொடியில் பின் சென்று பாய்ந்து பிடித்து அவனையும் ஒழித்து விடவேண்டும்.

*[கரிகாலன் திரும்பிச் செல்லுதல்.]*

## அங்கம் : நான்கு
## களம் : மூன்று

# சாத்தன் செண்டு

**இடம்** : *காஞ்சி நகரத்து மதிலோரப் பொழில்.*
**காலம்** . *நள்ளிரவு.*
**உறுப்பினர்** : *கரிகாலன், குருநாதர், கோதமன், கோசிகன்.*

*[குருநாதர் ஓமாக்கினி முன் மந்திரம் முணுமுணுத்தவாறு இருக்கிறார். கோதமன் அருகில் இருந்து அவர்க்கு உதவி புரிகிறான். கோசிகன் மேடைக்குப் பின் வாளுடன் மறைந்திருக்கிறான். சாத்தன் உருவம் அலங் கரித்து ஓமாக்கினி அருகில் வைக்கப்பட்டிருக் கிறது. எதிரில் கம்பத்தில் ஓர் ஆடு கட்டப் பட்டுள்ளது. கரிகாலன் குருநாதருக்கு எதிரில் அமர்ந்திருக்கிறான்.]*

**குருநாதர்** : ஓம் ! ச்லீம் ! ஹ்ரீம் ! ஸௌம் ! ஓம் ! ஹ்ராம், ஹ்ரீம், ஹ்ரூம்! ஸௌம்! க்லீம்! ஆம்! ஓம்! ஹூம்பட்! ...கோதமா, அந்த இளநீரைக் கண் திறந்து வை! அந்த நைவேத்தியத்தைத் திறந்து வை...அரசனே, இப்படி என் முன் இத் தவீசில் உட்காருவாய். இக் குங்குமத்தை அணிந்துகொள். அபி மந்திரிக்கப் பட்ட இம்மலர் மாலையையும் அணிந்து கொள். ...ஓம் ! ஹ்ராம் ! க்லீம் ! ஹ்ரீம் ! ஸௌம்!...கோதமா, ஆட்டை இங்குக் கொணர்ந்து இம்முளையில் கட்டு. இந்நீரை அதற்கு அபிஷேகம் செய். அதன் நெற்றி யில் இக்குங்குமத்தை இடு. இந்த மாலையை

அதன் கழுத்தில் போடு. பலிகொடு!...ஓம்! ஹ்ரீம் ஹூம்பட்.

அரசனே, கவனமாக நான் கூறும் மந்திரத்தை உச்சரி. ஓம்! ஹ்ரீம்! சாஸ்தா.

[கரிகாலன் துள்ளி எழுந்து அப்பால் சென்று வாளை உருவுதல்! மேடையின் பின்னாலிருந்து கோசிகன் அரிவாளுடன் ஓடிவருதல். இமைக்கு முன் கரிகாலன் இருவரையும் வெட்டி வீழ்த்துதல்! நிகழ்ச்சிகளைக் கண்டு பிரமித்து நின்ற கோசிகனையும் கரிகாலன் வெட்டி வீழ்த்துதல். அசரீரி பேசுதல்.]

அசரீரி: வளவ, வாழி! கொடியவர் ஒழிந்தனர். அவர்கள் கருதியது முடிந்திருந்தால் உலகம் படாத பாடு படும். நீ இவ்வாறு செய்து உலகைப் பாதுகாக்கவேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம்! இச் செயலால் எனக்கும் நீ உதவி செய்துள்ளாய். குருவாக விளங்கிய அக்கொடியோன் மந்திரத்தால் என்னைக் கட்டுப்படுத்தினான். உன்னை அவன் பலிகொடுத்திருந்தால் நான் அவன் சொல்லுகிற படி எல்லாம் ஆடவேண்டியதே. அவன் இறந்ததால் இப்போது அவனது கட்டும் அகன்றுவிட்டது. நீ எனக்குச் செய்த இவ்வுதவிக்காக ஒரு செண்டை உனக்குத் தருகின்றேன். அது உன்கையில் உள்ள வரை உன்னை [illegible]வரும் வெல்ல இயலாது. நீ மலை அகழ்க்குவை. கடல் தூர்க்குவை. வான் வீழ்க்குவை. வளி மாற்றுவை. இனி நீ உலகில் புகழ் பெற்று நீடுவாழ்க!

உன் அரண்மனைக்கு முனிவர் வேடத்தில் வந்த கோதமன் உனக்குச் சாத்தன் என்னும் தெய்வத்தால் தீங்கு உண்டாம் என்று கூறினான் அன்றோ? பின்னர், குருநாதர் பூசையால் நன்மை உண்டாம் என்றும் கூறினான். அது ஓரளவு உண்மையாயிற்றல்லவா? நானே சாத்தன். உனக்கு நன்மை

யுண்டாகுக! இப்பொழிலை யடுத்துள்ள சாத்தன் கோயிலுக்கு இப்போதே செல். அங்குக் கோயில் வாயிலில் செண்டு வைக்கப்பட்டிருக்கும். எடுத்துச் செல்வாயாக!

*[அசரீரி முடிவுற்றது. கரிகாலன் சாத்தன் கோயிலை அடைந்து செண்டை எடுத்துச் செல்கிறான்.]*

அங்கம் : நான்கு

களம் : நான்கு

## ரேநாட்டு மாநாட்டில்...

**இடம்** : *ரேநாட்டுத் தலைநகரில் ஒரு தெரு.*

**காலம்** : *காலை.*

**உறுப்பினர்** : *கரிகாலன், பாங்கன், தெருமக்கள், பறையறைவோர்.*

*[தெருவில் பறை அறையப்படுகின்றது. தெருமக்கள் கூட்டமாக நின்று அதனைக் கேட்கின்றனர். கரிகாலனும் பாங்கனும் மாறு வேடத்தில் அக்கூட்டத்தில் கலந்துள்ளனர்.]*

**பறையறைவோன் :** மாநகர் மாசனங்களே, கேளுங்கள்! எல்லோரும் கேளுங்கள்!

மன்னன் மகள் நேற்றிலிருந்து காணப்பட வில்லை. அரசகுமாரியைக் கண்டு பிடித்துக் கொணர் வோர்க்கு அரசர் பாதியரசைக் கொடுப்பார். டுடும்! டுடும்! டுடும்! டுடும்!

**கூட்டத்துள் ஒருவர் :** என்ன, நேற்று முதல் அரச குமாரி காணப்படவில்லையா? அரண்மனைக்குள் புகுந்து அவ்வளவு துணிச்சலாக அரசகுமாரியைக் கவர்ந்து செல்லக் கூடியவர்கள் யார்? உளவாளி இல்லாமல் இக்காரியம் நடக்கவில்லை. உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்த பாவி எவனோ?

**மற்றொருவர் :** அரசகுமாரி மிக்க அழகு வாய்ந்தவள் என்று சொல்லுகிறார்கள். அவளது அழகில் ஈடு பட்ட எவனோ சமயம் நோக்கிக் கொண்டு சென் றிருக்கக் கூடும். ஒரு வேளை அரசகுமாரியும் தன் காதல் காரணமாக அதற்கு உடன்பட்டிருக்கலாம்!

**வேறொருவர் :** பகையரசன் எவனோ தீங்கு செய்தலைக் குறித்து இக்காரியம் செய்திருக்கக் கூடும். அரண்

மனையில் அவன் உளவாளி ஒருவன் இருந்து துணை புரிந்திருப்பான். ஏனெனில் அரண்மனையில் வேறு எப்பொருளும் கொள்ளை போகாமல் அரசகுமாரி மட்டுமன்றோ காணமற் போயிருக்கிறாள்?

**இன்னொருவர் :** இதென்ன மாயமோ? எல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது! யார் எப்படிப் போனால் நமக்கென்ன? நமக்கேன் பெரிய இடத்துப் பேச்சு?

[கூட்டம் கலைந்து செல்லுதல்.]

**கரிகாலன் :** (பாங்கனை நோக்கி) நண்பா! இதோ, திடுக்கிடத்தக்க ஒரு செய்தி! இதில் என்ன மர்மம் அடங்கியிருக்கிறதென்று ஆராய்தல் வேண்டும்!

**பாங்கன் :** என்ன மர்மம் அடங்கியிருக்கப் போகிறது? தாம் அவளை மணம் புரியும் நோக்கமாகிய மர்மம் அடங்கியிருக்கலாம்!

**கரிகாலன் :** ஏளனம் புரிகின்றாயா? ஆனால், ஒருவர்க்கு ஒரு துன்பம் நேர்ந்ததென்று அறிந்தால், நம்மால் இயன்ற வரை போக்க முயலவேண்டுவது நமது கடமை அல்லவா?

**பாங்கன் :** கடமையா, காதலா? காதலா, கடமையா? சற்று இருங்கள். இதில் என்ன செய்தி இருக்கின்றது என்று ஆராய்ந்து பார்க்கிறேன்! காதலா, கடமையா? கடமையா, காதலா? எது இருக்கிறது? ஒன்றும் புரியவில்லையே!

**கரிகாலன் :** அது கிடக்கட்டும்! நீ மனத்தை ஒன்றும் குழப்பிக் கொள்ளவேண்டாம்! இதனை யார் செய்திருப்பார்கள்? உன் கருத்துக்குப் புலப்படுவதைச் சொல்லு.

**பாங்கன் :** மீனம், மேஷம், ரிஷபம், இரண்டில் செவ்வாய், மூன்றில் புதன், ஏழில் சனி! ஒன்று, இரண்டு, மூன்று!

**கரிகாலன் :** என்ன, சோதிடம் பார்க்கின்றாயா? உன்னைச் சோதிடமா பார்க்கச் சொன்னேன்?

**பாங்கன் :** சோதிடம் வேண்டாம்! ஆரூடம் பார்க்கிறேன். நூற்றெட்டுக்குக் குறைவாக ஒரு தொகை சொல்லு! ஏதாவது ஒரு பூச் சொல்லு! இல்லாவிட்டால் ஒரு மரம் சொல்லு!

**கரிகாலன் :** எனக்கு உன் சோதிடமும் வேண்டாம்! ஆரூடமும் வேண்டாம்! உன் ஆலோசனை ஒன்றுமே எனக்குத் தேவையில்லை. நீ வாயை மூடிக்கொண்டு சும்மா இரு.

**பாங்கன் :** இல்லை, இல்லை! கோபித்துக் கொள்ளாதே! இதோ வந்துவிட்டேன். இராசகுமாரியை யார் கொண்டு போயிருப்பார்கள்? பகைவர்களா, கள்வர்களா? கள்வர்களா, பகைவர்களா? ஒன்றும் புலப்படவில்லையே! இரண்டும் பொருத்தமாகத்தான் காணப்படுகின்றன.

**கரிகாலன் :** பகைத் தன்மையும் கள்ளத் தன்மையும் சேர்ந்துதான் இது நடந்திருக்கிறது என்பதற்கு உன்னுடைய அரிய ஆலோசனை வேண்டுமோ? இதற்குத்தான் உன்னை ஆலோசனை கேட்கிறேனோ?

**பாங்கன் :** அரசர் என்னை எதற்கு ஆலோசனை கேட்கிறார்? ஒன்றும் புலப்படவில்லையே. குழப்பமாக அல்லவா இருக்கிறது.

**கரிகாலன் :** என்னை எதற்காக ஆலோசனை கேட்கிறாய்? உன் கருத்துப்படியே செய் என்கிறாயா? சரி, அப்படியே செய்கிறேன்.

**பாங்கன் :** இல்லை, இல்லை! கோபித்துக் கொள்ளாதே! இதோ வந்துவிட்டேன்.

**கரிகாலன் :** சரி சரி! நீ ஒன்றும் வரவேண்டாம்! பேசாமலிரு.

**பாங்கன் :** ஆஹா ! அருமையான ஆலோசனை வந்த போது பேசிக் கெடுத்துவிட்டாயே. இரு இரு, இதோ ஞாபகம் வந்துவிட்டது. கடமையும் உண்டு, காதலும் உண்டு. கடமைத் தட்டு கொஞ்சம் தூக்கி நிற்கிறது. யார் தூக்கிப் போயிருப்பார்கள் ? அரசர்க்குப் பகைவர்கள் யார் ? அரசர்கள்தான். பகையில்லாவிட்டால் ஏன் தூக்கிப் போகிருன் ? தூக்கிப் போவது கள்ளத்தனமாயிற்றே. அரசன் கள்ளத்தனம் செய்யலாமா ? செய்வாஞ ? என்ன எல்லாம் குழப்பமா யிருக்கிறதே.

**கரிகாலன் :** குழப்பம், குழப்பம் ! எல்லாம் உனக்குக் குழப்பந்தான். என்றைக்குத்தான் உன் அறிவு தெளிந்ததா யிருந்தது. குழம்பிக் கொண்டே கிட. நான் போகிறேன்.

**பாங்கன் :** இல்லை, இல்லை ! வேண்டாம். இதோ வந்துவிட்டேன். இதோ வந்துவிட்டேன். வந்து, வந்து, பகைவன், கள்வன் ! கள்வன், பகைவன். இரண்டும் பொருந்தின ஒருவன்தான் கள்வன். அரசன், பகைவன், அரசன், கள்வன், பகைவன். பகைவன், அரசன், கள்வன் இம்மூவரும் ஒருங்கு சேர்ந்தே இச்செயலைச் செய்திருக்க வேண்டும்.

**கரிகாலன் :** அப்பாட ! மலையைக் கெல்லி எலியைப் பிடித்துவிட்டாய்.

**பாங்கன் :** என்ன, என் ஆலோசனை அவ்வளவு தாழ்வாகப் போய்விட்டதோ ? இனிமேல் என்னை எந்தவிதமான ஆலோசனையும் கேட்காதே.

**கரிகாலன் :** இல்லை ! இல்லை. கோபித்துக் கொள்ளாதே ! உன் ஆலோசனையில் சிறந்த பொருள் அடங்கியிருப்பது புலப்படுகிறது. பெண்ணைக் கேட்டுக் கொடாததனுல் பகை கொண்ட ஓர் அரசன் கள்வர் மூலமாகவும், அரண்மனையில் தன்னுல் நியமிக்கப்பட்டுள்ள உளவாளிகள் மூலமாகவும் அரச

குமாரியைக் கொண்டு சென்றிருக்கிறான் என்று ஆலோசனை கூறுகிறாய். அப்படித்தானே?

**பாங்கன் :** அப்படியிருந்தாலும் இருக்கலாம். வேறு விதமாக இருந்தாலும் இருக்கலாம். இரு, யோசித்துச் சொல்லுகிறேன். அப்படி இருக்குமா, இருக்காதா? இருக்காதா, இருக்குமா? இருக்குமா, இருக்காதா?

**கரிகாலன் :** வேண்டாம், இப்போது ஆலோசிக்க வேண்டாம். அப்புறம் சாவகாசமாக ஆலோசித்துச் சொல்லு, போதும்...இதோ நான் சொல்வதைக் கேள். நகரத்தில் இன்னும் சில தினங்களுக்கு இதைப் பற்றிய பேச்சாகவே இருக்கும். நாம் நகரத்தில் ஆங்காங்குப் பல இடங்களில் சுற்றி, இதைப் பற்றிப் பேசுவோரிடம் பேச்சுக் கொடுத்து ஆராயின் ஏதாவது உண்மை புலப்படக்கூடும். வா, போகலாம்!

**பாங்கன் :** நல்லது, அப்படியே செய்வோம்!

*[இரவாயிற்று. கரிகாலனும் பாங்கனும் அந்நகரத்தின் ஒரு தெருப் பக்கமாகச் செல்லுகின்றனர்.]*

**கரிகாலன் :** தோழ, இன்று பகல் சுற்றியதில் பயன் ஒன்றுமில்லை. பலர் இச் செய்தியையே பற்றிப் பேசினும் புதிய செய்தி ஒன்றுமில்லை! ஆயினும் ஒரு கூட்டத்தார் பேசிய சில பேச்சுக்களிலிருந்து இந் நகரத்தின் வட கிழக்கு மூலையில் உள்ள கள்ளுக்கடை இரவில் கள்வர் கூடும் இடம் எனத் தெரிய வந்ததன்றோ? அங்குச் சென்று பார்ப்போம்:

**பாங்கன் :** அதனருகில் பேய்க்குளம் என்று ஒரு குளம் இருப்பதாகக் கேள்வியுற்றோமே! அந்த இடந்தானே?

**கரிகாலன் :** ஆம், அதே இடந்தான்!

**பாங்கன் :** ஐயோ! அங்கே என்னால் வர இயலாது!

**கரிகாலன் :** பேய்கட்கு அச்சமா? ஆனால், இங்கேயே ஒரு புறத்தில் தங்கியிரு!

**பாங்கன் :** இங்கேயா...? இங்கே நான் எப்படித் தனியாக இருப்பேன்?

**கரிகாலன் :** ஆயின் அடுத்த தெருவிலுள்ள அந்த மாடி வீட்டுத் திண்ணையில் இரு! அங்கே இருள் இல்லை! பேயும் இல்லை!

**பாங்கன் :** உன்னைவிட்டு நான் எப்படித் தனியே இருக்க முடியும்!

**கரிகாலன் :** அதென்னவோ எனக்குத் தெரியாது! நீ வந்தாலும் வராவிட்டாலும் நான் அங்கே செல்லப் போகிறேன்!

**பாங்கன் :** அப்படியானால் ஒன்று நான் உன்னோடு வரவேண்டும்! இல்லாவிட்டால் இங்கேயே ஓர் புறம் தங்கியிருக்க வேண்டும் என்று சொல்லுகிறாய்! அப்படித்தானே?

**கரிகாலன் :** ஆம்!

**பாங்கன் :** அப்படியானால் சற்று இரு! யோசித்துச் சொல்லுகிறேன்! போவதா? வேண்டுமா? வேண்டாம்! இல்லை, போகலாம்! இல்லை, இல்லை, வேண்டாம்! இல்லை, இல்லை, போகலாம்!

**கரிகாலன் :** போதுமே, உன் ஆலோசனை! இதோ நான் புறப்பட்டுவிட்டேன்!

**பாங்கன் :** இதோ நானும் முடிவு செய்துவிட்டேன்!

**கரிகாலன் :** என்ன முடிவு?

**பாங்கன் :** உன்னோடேயே வருவதுதான்!

**கரிகாலன் :** இந்த முடிவுக்கு இவ்வளவு நேரமா?

**பாங்கன் :** நேரமானால் என்ன? கள்வர்கள் நள்ளிரவிலேதானே கூடுவார்கள்?

**கரிகாலன் :** அதற்குள் இங்கே கொஞ்சம் தூங்கலாம் எனத் திட்டம் போடுகிருயோ ?

**பாங்கன் :** திட்டமென்ன ! தூங்கினுல் நல்லதென்றே நினைக்கிறேன் !

**கரிகாலன் :** சரி சரி, நீ தூங்கு ! நான் போகிறேன் !

**பாங்கன் :** இல்லை இல்லை, இதோ நானும் வருகிறேன்.

*[இருவரும் சென்று கள்ளுக் கடைக்கு எதிரில் உள்ள குளத்தின் கரையில் உள்ள ஒரு மரத்தின் பின்னுல் ஒளிந்திருந்து கடையைக் கவனிக்கின்றனர்.]*

**கடைவாசலில் இருந்த ஒருவன் :** ஏ, சாமுண்டி ! ஊரைச் சுற்றிப் பார்த்தாயா ? ஏதாவது தென்பட்டதா ?

**சாமுண்டி :** ஒன்றும் புதியதாகத் தென்படவில்லை. அரசகுமாரி காணுமற்போனதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிருர்கள் ! ஆனுல் எவரும் யாரைப் பற்றியும் சந்தேகித்துப் பேசவில்லை. ஒரு சிலர்– பொதுவாக இங்கு வரும் கற்றவர் சிலர் – தூக்கிப் போயிருக்கலாம் என்று கூறுகிருர்கள் ! அவ்வளவே! அதிருக்கட்டும் !...இருளா, நீ போன செய்தி என்ன ?

**இருளன் :** நான் அவளைத் தலைவன் குறிப்பிட்ட இடத்திலே கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு வந்து விட்டேன் ! மற்றப்படி யாதொரு விசேடமும் இல்லை! ஏ, மாடா ! நீ எப்போதும் தலைவனுடன் இருப்பவ ஞயிற்றே ! அதைப் பற்றிய செய்தி உனக்கேதாவது தெரியுமா ?

**மாடன் :** பத்து நாளைக்கு முன் வேங்கடத்து வடுக மன்னர் நமது தலைவருடன் நமது இரகசியக் குகை யில் பேசிக்கொண் டிருந்தார். அதனுல் இச்செயல் அவருக்காகவே நடந்திருக்கிறதென்று எண்ணுகி றேன். நமது தலைவன் என்னை உங்களுடன் இங்கே யிருக்கும்படி கூறியதால் மேல் நடந்தது என்ன என்று எனக்குத் தெரியாது.

**இருளன் :** என்ன மாடா, உரக்கப் பேசுகிருய்? மெது வாகப் பேசு! இரவு நேரம் அல்லவா?

**மாடன் :** நான் மெதுவாகத்தானே பேசுகிறேன்! மேலும் இங்கே இந்த நள்ளிரவில் நம் கூட்டத் தாரைத் தவிர வேறு யாராவது தலைகாட்ட முடியுமா? வந்தால் ஒரே அடி! மண்டை சுக்கு நூருய்விடும் என்று தெரியாதா? அரச காவலர் வந்தால், நம்மில் ஒரு காக்கைக்குஞ்சும் இங்கே இருக்கப் போவதில்லை! இது தெரிந்த செய்திதானே! இன்னும் இங்கே வருபவர்களுக்கு இரண்டே வழிகள் உள்ளன. ஒன்று: தெரு வழி! மற்ருென்று: பேய்க்குளத்து வழி! தெரு வழியில் நமது ஆட்கள் இருக்கின்றனர். பேய்க் குளத்து வழியிலோ, நாமே போகப் பயப்படுகிருேமே! எந்த ஆள் அப்பக்கமாக வரமுடியும்?

**இருளன் :** ஆமாம்; அது மெய்தான். அந்தச் சுடு காடும், அங்குப் பேய்கள் ஆடுவதும், அந்தக் காளி கோயிலும், வழியில் நரியும், பாம்பும், யார்தான் அந்தப் பக்கமாக வரமுடியும்? அது கிடக்கட்டும்! ...ஏ, விரியன் பாம்பு! அரண்மனையில் என்ன செய்தி?

**விரியன் பாம்பு :** அரசரும் அமைச்சரும் விரிவான வாதம் புரிந்தார்கள். ஒரு படைகொண்டு நம்மைத் தாக்க முடிவு செய்தார்கள். நம்மில் யாராவது ஒரு வன் நமது கூட்டத்தாரைக் காட்டிக் கொடுக்கக் கூடும் என்றே பாதி அரசு கொடுப்பதாகப் பறை அறைவித்துள்ளார்கள்.

**மாடன் :** நம்மில் யார் அப்படிக் காட்டிக் கொடுக்கக் கூடியவன்?

**இருளன் :** காட்டிக் கொடுத்துவிட்டு அவன் உயி ரோடு இருந்துவிட முடியுமா? என்னவோ பைத் தியக்காரத்தனம்! முரசு அறைந்திருக்கிருர்கள்! அது கிடக்கட்டும்! எப்படி எங்குப் படையெடுக்கப் போகிருர்களாம்?

**விரியன் பாம்பு:** அது இன்னும் தீர்மானமாகவில்லை!

**மாடன்:** படையெடுக்கட்டுமே! படை நமது குகையை அடையும்போது அங்கே வெறுங் குகைதான் இருக்கும்! அதைப் பிடித்துக்கொண்டு அதில் வாழட்டும்! நாளுக்குச் சில படை வீரராகச் சிறிது நாளைக்குள் படை வீரர் எல்லாரும் மாயமாய் அழிந்து போவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அதிருக்கட்டும்!...வீரா, உன் செய்தி என்ன?

**வீரன்:** நான் ஊரைச் சுற்றிவரும்போது, என் எதிரில் இருவர் வந்தனர். அவர்கள் வேற்று நாட்டவர் போலக் காணப்பட்டனர். அவர்கள் யாருடனும் பேசாமல் கூட்டங் கூடிப் பேசுவோரது பேச்சைக் கவனித்தவாறு ஊரைச் சுற்றினர். அவர்கள் யார் என்று அறிய விரும்பி அவர்களறியாமல் அவர்களைப் பின்தொடர்ந்தேன். அவர்கள் பலவிடங்கட்குச் சென்றனர். முடிவில் ஒரு வீட்டில் நுழைந்தவர் நெடுநேரம் வரையில் வெளியில் வரவில்லை. பிறகு நான் இங்கே வந்துவிட்டேன். அவர்களைப் பற்றி நான் அறிந்தது எல்லாம் அவர்கள் மாறுவேடம் பூண்டவர்கள் என்பதே! அவர்கள் வேற்று நாட்டு ஒற்றர்களாக இருக்கலாம் என்று எண்ணுகின்றேன்.

**மாடன்:** அவர்களின் அங்க அடையாளங்களைச் சொல்லக் கூடுமோ?

**வீரன்:** ஆம்! கூடும். அவர்களுள் ஒருவன், சற்றுப் பருத்து உயர்ந்தும், மற்றொருவன் சற்று மெலிந்து குட்டையாயும் இருந்தனர். ஆயினும் இருவரும் மிக்க வலிமை வாய்ந்தவர்கள் என்றே கூறவேண்டும். அவர்களில் பெரியவனது கையைச் சிறிதளவு பார்க்க நேரிட்டது. ஆ! அது எவ்வளவு வலிய கை தெரியுமா? இருப்புலக்கை என்றே சொல்ல வேண்டும்!

**மாடன் :** ஆ! அப்படியா! அவர்களை முழுவதும் ஆராயாமல் இங்கு வந்துவிட்டாயே!

**வீரன் :** அவர்களை முழுதும் கவனிப்பதற்கு என்ன இருக்கிறது! அவர்கள் நாட்டுக்குப் புதியவர்கள் என்பதில் ஐயமில்லை! ஏனெனில், நானும் இத்தனை நாளாக இவ்வூரில் திரிகிறேன். இவர்களைப் போன்றவர்களைக் கண்டதில்லை. அவர்கள் நம் அரசனது ஒற்றரல்லர் என்பது நிச்சயம்! அப்புறம் அவர்கள் யாராயிருந்தால் நமக்கென்ன? நாம் தினமும் இங்குக் கூடவேண்டியது அவசியமல்லவா?

**மாடன் :** சரி...முனியா உன் செய்தி என்ன?

**முனியன் :** நான் ஊரைச் சுற்றி நடப்பவற்றை எச்சரிக்கையாயிருந்து கவனித்து வருகையில், வீரன் அவன் கூறிய இருவரைப் பின்பற்றுவதை அறிந்தேன்! ஆதலால் நான் அவர்களைப் பின்பற்ருமல் வேறுபல இடங்களுக்குச் சென்றேன்! புதிய செய்தி எதுவுமில்லை!...வீரா, நீ அவர்களை வேடம் பூண்டவர்கள் என எவ்வாறு அறிந்தாய்?

**வீரன் :** அவர்களில் பருத்தவன் ஒரு தொப்பைச் செட்டியார் போல் காணப்பட்டான். மற்றவன் அவனது வேலைக்காரன் போல் காணப்பட்டான். செட்டியார் போல் இருந்தவன் கோவில் குளத்திற்குச் சென்று கைகால்களைக் கழுவினன். அப்போது அவன் முன் கை அங்கி சற்று விலக்கப்பட்டது! அதோடு தொப்பை ஏற்படுவதற்காகத் திணிக்கப்பட்டிருந்த துணிகள் சற்றுத் தளர்ந்தன. மீண்டும் அவன் அதைச் சரிப்படுத்திக் கொண்டான். அப்போது அவன் வேலைக்காரன்போல் இருந்தவனை, 'நண்பா, நீயும் வா' என்ருன். அவனும் கீழே நீரில் இறங்கிக் கைகால்களைக் கழுவினன். அப்போது அங்கே அருகில் ஒரு வளைந்த இருப்புக் கம்பி கீழே

கிடந்தது. அதை மெலிந்தவன் எடுத்து வளைவை நிமிர்த்திக் கீழே போட்டான். அவர்கள் போன பிறகு நான் அந்தக் கம்பியை எடுத்து வளைத்தேன்! அது எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா! அந்தச் செயல்களிலிருந்து அவர்கள் வேடதாரிகள் என்றும், மிக்க வலிமை வாய்ந்தவர்கள் என்றும் அறிந்தேன்.

**மாடன் :** வீரா, நீ உன் வேலையைச் சரியாகச் செய்ய வில்லை! அரைகுறையாகச் செய்திருக்கிருய்! நீ இங்கே வந்தது தவறு. அவர்களையே நீ கவனித்துக் கொண்டு இருந்திருக்க வேண்டும்!

**வீரன் :** சரி! நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்கி றேன். ஆனல் ஒன்றுமட்டும் நிச்சயம். அவர்கள் நம் ஊரைச் சேர்ந்தவர்களல்லர் ; நமது அரசரது ஒற்றரல்லர். இது நிச்சயமாய் என் அறிவுக்குப் பட்ட தால் நான் மேலும் அவர்களை ஆராயவில்லை. மற்று அவர்கள் நாளைக்குள் எங்கே போய்விடப் போகி ருர்கள்? எனக்கு அவர்கள் இருப்பிடம் தெரியும்! நாளை நன்ருகக் கவனித்து வருகிறேன்.

**மாடன் :** சரி. நாம் நமது தலைவன் கூறியபடி மிகவும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். என்ன காரணமோ, இன்று தலைவனிடமிருந்து செய்தி ஒன்றும் வரவில்லை! நாளை செய்தி வருகிறதா, பார்ப்போம்! நல்லது. நேரமாகிறது! இனித் தூங்கச் செல்வோம்!

*[யாவரும் குடிசையுள் புகுகின்றனர்.]*

**கரிகாலன் :** (காதோடு) நண்பா, பார்த்தாயா? நம்மை யாரோ பின்பற்றுகின்ருன் என்று கூறியபோது, நீ இல்லை என்று மறுத்தாயே! நல்ல வேளையாக, நான் உன் பேச்சைக் கேளாமல் வீட்டுக்கொல்லைப் புறமாக வீட்டை விட்டு வெளியே வந்து, இவ்விடத் திற்குக் குளக்கரைப் பக்கமாக வந்தேன்! இனி வந்த வழியே திரும்பவேண்டும்! நாம் இப்போது அவ் வீட்டுக்குச் செல்லாமல், கீழைத் தெருவிலுள்ள

நமது மற்றெரு வீட்டிற்குச் செல்வோம். இனி நாம் பகலில் எங்கும் செல்லவேண்டாம். இரவு பத்து நாழிகை வரையில் வீட்டுக்குள் அடைந்து கிடந்து விட்டு, பிறகு, நேராக இவ்வீட்டை அடைந்து இவர்கள் செய்கையை ஆராய வேண்டும். நாளையோ, அடுத்த சில நாட்களிலோ இவர்களது தலைவன் இவர்களுக்குச் செய்தி அறிவிப்பான் என்று தெரிகிறது. பிறகு இங்குள்ள செய்தியைத் தலைவனுக்கு அறிவிப்பதற்கு இவர்களுள் யாராவது செல்வர். அப்படிச் செல்பவனைப் பின்பற்றிச் சென்று தலைவன் செயலை ஆராய்வோம்! அந்த வேங்கட வடுகன் இதில் சேர்ந்திருப்பது உண்மையானுல் அவனையும் ஆராய்வோம்!

**பாங்கன் :** (மெதுவாக) அதெல்லாமிருக்கட்டும்! அப்பெண்ணை அவர்கள் அதற்குள் வலிய கற்பழித்திருந்தால் நீ அவளை மணம் செய்துகொள்ள இயலாதே! இவ்வளவு பாடும் வீண்தானே!

**கரிகாலன் :** அவளைப் பற்றிய பேச்சை நீ ஏன் எடுக்கிருய்? நான் முன்னமே சொல்லவில்லையா? ஏதோ கொடுமை நடந்திருக்கிறது! அதைக் கவனித்து அதில் துன்புற்றவர்களுக்கு நம்மாலான உதவியைச் செய்ய வேண்டியது நமது கடமை! மேலும் இக்கொள்ளைக் கூட்டத்தாரை இப்படியே விட்டு வைப்பது சரியா? அரசர்களுக்குக் கடுக்காய் கொடுத்துக் கொண்டிருக்கிற இவர்களை ஒழிக்க வேண்டியது என் பொறுப்பு என்பதனை மறந்தனையா? தமிழ் நாடு மட்டுமன்று; நிலவுலக முழுவதும் என்னுடையதே! தெரிந்ததா?

**பாங்கன் :** அரசே, மன்னிக்க! யான் பரிகாசமாக அதனைக் கூறினேனேயன்றி வேறல்ல!

**கரிகாலன் :** நல்லது, வா, போவோம்!

*[இருவரும் போகின்றனர்.]*

## அங்கம் : நான்கு
## களம் : ஐந்து

# புலிமுழையில் புல்வாய்

**இடம்** : *காட்டு வழி.*

**காலம்** : *பகல்.*

**உறுப்பினர் :** *கரிகாலன். பாங்கன், மாடன், கள்வர் கூட்டத்தார் சிலர், அரசகுமாரி, காவற் பெண்.*

*[காட்டு வழியில் மாடன் முதலிய கள்வர் கூட்டத்தாரைக் கரிகாலனும் பாங்கனும் மறைவாகப் பின்பற்றுகின்றனர்.]*

**கரிகாலன் :** இப்போது கதிரவன் உதித்துவிட்டதனால் இனி இவர்களை நெருங்கிப் பின்பற்றலாகாது. அடிக்கடி மரங்களின் பின்னே ஒளிந்து அவர்கள் நீண்ட தூரம் சென்றபின் மரத்தின் மீதேறி அவர் செல்லும் வழியைப் பார்த்துக் கண்டறிந்து பின்பற்ற வேண்டும். இப்போது நமக்கு முன்னால் சென்ற அவர்கள் நெடுந்தூரம் சென்றிருப்பர். இதோ, இம் மரத்தின் மீதேறி, அவர்கள் சென்ற வழியைப் பார்ப்போம்!

*[மரத்தின்மீது ஏறிப் பார்த்தல்.]*

அவர்கள் அதோ அக்குன்றின் அடிவாரத்தில் செல்லுகிறார்கள். அங்கே குன்றைத் தாண்டி அப்பால் செல்லுவதற்கு ஓர் இடுக்கு வழி போகிறது! அவ்வழியாகவே அவர்கள் செல்வார்கள் என எண்ணுகிறேன்! வா, விரைந்து செல்லுவோம்!

*[விரைந்து செல்லுதல்.]*

அதோ செல்லுகிறார்கள் அவர்கள். இங்கே வழி முழுதும் சிறிதும் பெரிதுமான குத்துப் பாறைகள் நிறைந்திருப்பது நாம் ஒளிந்து செல்லுவதற்கு

எளிதாயிருக்கும். விரைந்து பின்பற்றிச் செல்லுவோம். அதோ அவர்கள் அப்பாறையினருகில் நிற்கிருர்கள். அவர்களுக்கு எதிரில் அதோ வேறு ஒருவன் வருகிருன். அவர்கள் அவனைப் பார்த்துக்கொண்டு நிற்கிருர்கள். வா, இந்தப் பாறைகளின் இடுக்கு வழியாகச் சென்று அந்தப் பாறையின் மறைவில் ஒளிந்து நின்று கவனிப்போம்.

*[ஒளிந்து சென்று அவ்வாறே நின்று கவனித்தல்.]*

இதோ அவர்கள் பேச்சுக் குரல் கேட்கிறது. என்ன பேசுகிருர்கள் என்று பார்ப்போம்.

**மாடன் :** ஏண்டா மூக்கா, என்ன செய்தி ?

**மூக்கன் :** எல்லாம் நல்லதுதான். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலை என்னவாயிற்று ?

**மாடன் :** அரண்மனையிலிருந்து நம்மை எவரும் தேடி வரவில்லை. ஆனால் நகரில் ஒற்றர்போலக் காணப்பட்ட இருவரைக் கண்காணிக்கும்படி வீரனையும் முனியனையும் அனுப்பியிருக்கிறேன்.........தலைவன் செய்தி எம்மட்டிலுள்ளது ?

**மூக்கன் :** கன்னியைப் பழைய கோட்டைக்குக் கொண்டு போயிருக்கிருர்கள். அங்கே நாளைக்கு அடுத்த நாள் வேங்கடவரசர் வரப்போகின்ருராம். ...நமது தலைவன் ஒரு பெரிய திட்டம் போட்டிருக்கிருன். அவன் நமது கூட்டத்தார் இருநூற்றுவரோடு பழைய கோட்டை சென்றிருக்கிருன். அவன் உங்களை இன்னும் சில நாட்களுக்கு நகரத்திலேயே தங்கியிருந்து அரண்மனைச் செய்திகளைக் கவனித்துக் கொண்டு இருக்குமாறு கூறச் சொன்னன்.

**மாடன் :** சரி. அவ்வாறே செய்கின்ருேம்......நமது தலைவன் போட்டிருக்கும் பெரிய திட்டம் என்னவோ ?

**மூக்கன் :** வேங்கட வேந்தருக்காக வன்ருே கன்னியைக் கொண்டு சென்றது ? இப்போது நமது

தலைவன் தானே அக்கன்னியை அடையவும், ரே நாட்டு அரசில் பாதியையும் வேங்கடவரசு முழுவதையும் பெறவும் திட்டமிட்டிருக்கிறான்.

**மாடன் :** அதெப்படி ?

**மூக்கன் :** பழைய கோட்டை இடிந்த கோட்டை தானே! வேங்கட வேந்தர் அதனை இத்தகைய செயல்களுக்குத்தானே இடமாகக் கொண்டார். அதனை நாடு காவலுக்காகச் சீர்ப்படுத்தி வைக்கவில்லையன்றோ ? அங்கே அவர் வருங்கால் நூற்றுவருக்குமேல் அவருடைய பரிவாரத்தார் வரமாட்டார்கள். அங்கு அவர்கள் வந்ததும், போரிட்டு அவர்களை ஒழித்துவிட்டு, கன்னியைக் கொணர்ந்து அவளுடைய தந்தைபால் விட்டுப் பாதி அரசைப் பெறுதல். பிறகு வேங்கட நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அதனையும் கைப்பற்றுதல். அப்பால் ரே நாட்டு அரசகுமாரியை மணந்து கொள்ளுதல்.

**மாடன் :** ஏது, பெரிய திட்டமாயிருக்கிறதே! இது முடிந்தால் நமது பாடெல்லாம் கொண்டாட்டந்தான்! சரி, நாங்கள் சென்று வருகின்றோம்! நீயும் போய் வா.

*[கள்வர் செல்லுதல்.]*

**கரிகாலன் :** நாம் இப்போது மூக்கனைப் பின்பற்றிச் சென்று பழைய கோட்டையை அடைந்து கன்னியை மீட்க வகை செய்வோம். இவனையும் எச்சரிக்கையாகவே பின் தொடர வேண்டும்.

**பாங்கன் :** நல்லது. திருச்சித்தப்படியே.

*[இருவரும் மூக்கனைப் பின்பற்றிப் பழைய கோட்டையை அணுகுகிறார்கள்.]*

**கரிகாலன் :** அதோ காணப்படுவது பழைய கோட்டை என்றெண்ணுகிறேன். நாற்புறமும் அகழி சூழ்ந்துள்ளது. ஆளரவம் இருப்பதாகத் தென்படவில்லை.

**பாங்கன் :** இது பின்புறம் போல் காணப்படுகின்றது; ஒருவேளை மறுபுறம் ஆள் ரவம் இருக்கலாம்.

**கரிகாலன் :** ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும். தூரத்திலேயே மறைவாகச் சென்று கோட்டையின் அமைப்பைக் கவனிப்போம். கோட்டையைச் சூழ்ந்த சுவர் அங்கங்கே இடிந்து கிடக்கிறது. கோட்டையி னுட் புகுவதற்குமுன் எப்பக்கமாக எப்படிப் புகுவது என்று திட்டமிடுவோம். பிறகு இரவில் புகுந்து ஆராய்வோம்.

**பாங்கன் :** சுவர் இடிந்திருந்தாலும் மேலே ஏறுவதற் குச் சிறிது கடினமாய் உயரமாக இருக்கும்போல் காணப்படுகிறதே. மேலும் அகழியைக் கடக்க மிதவைக்கு எங்கே போவது?

**கரிகாலன் :** முதலில் கோட்டையைச் சுற்றிப் பார்ப் போம். அப்பால் அதோ தெரியும் கிராமத்திற்குச் சென்று உணவருந்திவிட்டு ஒரு தாம்புக் கயிறு வாங்கிக் கொள்வோம். மிதவையென்ன? தலையில் துணியைச் சுற்றிக்கொண்டு நீந்திச் சென்றால் போகிறது.

**பாங்கன் :** அகழியில் சுறா, முதலை ஏதாவது இருந் தால்...?

**கரிகாலன் :** கவனிப்பாரற்று இடிந்து கிடக்கும் பழைய கோட்டை அகழியில் சுறாவையும், முதலையையும் யார் விட்டுவைத்திருக்கப் போகிறார்கள்? ஆயினும் எதற்கும் நமது குத்துவாளையும் எடுத்துச் சித்தமாக வைத்துக்கொண்டால் சரியாகி விடுகிறது.

**பாங்கன் :** நல்லது. திரு, திருச்சித்தப்படியே.

*[திட்டப்படியே எல்லாவற்றையும் செய்து முடித்து, அகழியை நீந்திக் கடக்கின்றனர்.]*

**கரிகாலன் :** நான் எதிர்பார்த்தபடியேதான். சுறாவோ முதலையோ இங்கு ஒன்றும் இல்லை.

**பாங்கன் :** எல்லாம் திரு, திரு, திருவுள்ளப்படியே தானே நடக்கும். நான் கூறியது தவறுதான்.

**கரிகாலன் :** நண்ப, நீ அடிக்கடி எச்சரிக்கையாகக் கூறுவதில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? ஒவ்வொன்றிலும் இருக்கத்தக்க துன்பங்களை அலசிப் பார்த்து எச்சரிக்கை செய்வதில் உன்னையொத்தவர்கள் இல்லை. இங்கே அபாயமொன்றுமில்லை என்றாலும் கையில் குத்துவாளை எடுத்துச் சித்தமாய் வைத்துக்கொண்டதில் தவறுண்டோ? ஆதலால் உன் கூற்றில் தவறேதுமில்லை. நீ வீணாக அதற்காக வருந்தல் வேண்டா.

**பாங்கன் :** அப்போது வீணாகக் கூறினேன். இப்போது வீணாக வருந்துகிறேன். இப்படி நான் செய்வதெல்லாம் வீணாக இருக்கிறது. என்ன செய்வது?

**கரிகாலன் :** சரி, சரி, போதும். உன் திரு, திரு, திருவாயைத் திறக்காதே. பேசாமல் என்னைப் பின் தொடர்ந்துவா.

*[அகழியைக் கடந்து மதில்மேல் ஏற முயலுகிறார்கள்.]*

நண்ப, நீ கூறியது சரியாயிற்று. இடிந்த விடத்தில் ஏறுவதற்குக் கடினமாயிருக்கிறது. அதோ அந்த மதில் மேற்சூட்டில் கயிற்றைச் சுருக்கிட்டு வீசிப் பிணித்துக் கயிற்றின் வழி ஏற முயலுவோம்.

*[கயிற்றைப் பிடித்து ஏறி மதிலைக் கடக்கின்றனர்.]*

மதிலைக் கடந்தாயிற்று. திரும்பும்போதும் இவ்வழியாக வருவதற்கு வழியைக் குறித்துக்கொள்வோம். கள்வர் தலைவனது ஆட்கள் இக்கோட்டைக்குள் தங்கியிருக்கலாம். எச்சரிக்கையாகவே செல்லவேண்டும். ஆ! இருட்டில் வழி கண்டு

செல்வது எவ்வளவு கடினமாயிருக்கிறது! தட்டுத் தடுமாறி மிக மெதுவாக அன்றோ செல்லவேண்டி யிருக்கிறது!

**பாங்கன் :** இதோ ஒரு பெரிய முற்றத்தை அடைந் தோம்! அதோ அம்மூலையில் பலகணி வழியாக விளக்கு வெளிச்சம் காணப்படுகிறது பார். அதைக் கவனிப்போம்!

**கரிகாலன் :** நண்பா, பலகணி உயரமாய் இருக் கிறதே!

**பாங்கன் :** நான் குனிந்து கொள்கிறேன். என்மேல் ஏறிப் பாருங்கள்!

*[கரிகாலன் அவ்வாறே பலகணி வழியாகப் பார்க்கிருன்.]*

**கரிகாலன் :** (கீழே இறங்கிய பின்) அறைக்குள் கன்னி யும் மற்ருெரு பெண்ணும் மட்டும் இருக்கிருர்கள். வாயில் மறுபக்கமாக இருக்கிறது. அங்குக் காவலர் இருக்கலாம். மெதுவாகச் சென்று காவலரை ஒழித்துவிட்டுக் கன்னியைக் கைப்பற்றி வர வேண்டும்!

**பாங்கன் :** நல்லது. மறுபக்கம் செல்வது எப்படி?

**கரிகாலன் :** இதோ இந்தப் பக்கமாக மாடியின்மீது ஏறலாம். நீ இங்குச் சுவரோடு சாய்ந்து நில்! நான் உன்மேல் ஏறி மேலே செல்லுகிறேன். அப் பால் கயிற்றைத் தொங்கவிடுகிறேன். நீ அதன் வழியாக ஏறி வா!

**பாங்கன் :** சரி, அப்படியே!

*[ஏறி மாடிமீது செல்லுகிருர்கள்.]*

இதோ இங்கே இச்சுவர்மீது முதலில் இறங்கிப் பின் கீழே நிலத்தில் குதிக்கலாம். இங்குச் சுவரும் நிலமும் அதிக ஆழத்தில் இல்லே. இங்கே காவ

லரும் இல்லை. இம்முற்றத்தின் பக்கமாகக் கன்னி யிருக்கும் அறைக்குப் போக வழி இருக்கலாமென்று எண்ணுகிறேன்.

**கரிகாலன் :** சரி, அப்படியே!

*[முற்றத்தில் இறங்கி ஆராய்கின்றனர்.]*

இதோ மற்றொரு பலகணி. இதோ பக்கத்தில் வாயிலும் உள்ளது. பலகணி வழியாகப் பார்க்கிறேன்! இங்கே உள்ளே இடம் விசாலமாயிருக்கிறது. காவலர் பதின்மர் தூங்குகின்றனர். இவர்கள் இவ்வாயிலின் வழியாக இம்முற்றத்திற்கு வரக்கூடும். இவ்வாயிலின் கதவு இந்தப் பக்கம் தாழிடப்படாமல் இருக்கிறது. இதைத் தாழிட்டு விட்டால் இவர்கள் இப்பக்கம் வர இயலாது. அப்படியே செய்கிறேன். இதோ எதிர்ப்புறம் தாழ்வாரத்தில் இருகாவலர் தூங்குகின்றனர். கதவு உட்புறம் தாழ் இடப்பட்டு இருக்கிறது. இந்த அறைதான் கன்னி உள்ள அறையாயிருக்க வேண்டும். இதோ இங்குள்ள பலகணி வழியாகப் பார்க்கிறேன். ஆம், இதோ கன்னியும் காவலாக இருக்கும் பெண்ணும் தூங்குகிறார்கள்.

**பாங்கன் :** சரி, கதவு உள்ளே தாளிடப்பட்டு இருக்கிறதே! உள்ளே செல்வது எப்படி?

**கரிகாலன் :** நீதான் சொல்லேன்!

**பாங்கன் :** இந்தக் கதவு நம்மை உள்ளே செல்ல விடாமல் தடுக்கிறபடியால் இது நமது பகையாகும். இதை உடைத்தெறிய வேண்டியதே! உடைப்பதெப்படி?

**கரிகாலன் :** நீதான் இதற்கொரு வழி கண்டு பிடிக்க வேண்டும்.

**பாங்கன் :** வழி கண்டு பிடித்தாயிற்று! முள்ளை முள்ளாலேயே எடுக்க வேண்டும்!

**கரிகாலன் :** முள் எங்கே யிருக்கிறது?

**பாங்கன் :** அதோ பார்! விறகுக் கட்டை! அதுதான் முள்!

**கரிகாலன் :** சரி, முதலில் தூங்குகிறவர்களை எழுப்பு. போரிட்டு வெல்வோம்!

**பாங்கன் :** அதென்னத்திற்கு? நம்மிடம் நீண்ட கயிறு இருக்கிறதே! அதில் இரண்டு சிறு துண்டு களைத் துண்டித்தெடுத்து இவர்கள் தூங்கி வழியும் தூண்களோடேயே சேர்த்துக் கட்டிவிடுவோம்!

**கரிகாலன் :** சரிதான்! போரிட்டால் கொல்ல நேர்ந் தாலும் நேரும்! அநாவசியமான கொலை என்னத் திற்கு என்கிருயா? அதுவும் சரிதான்!

*[இரண்டு துண்டுக் கயிறுகள் கொண்டு இருவரும் ஆளுக்கொருவராக இரு காவலரை யும் தூண்களோடு சேர்த்துக் கட்டுகிருர்கள். அப்போது அக்காவலர்கள் கூச்சலிட்டதால், அறைக்குள் தூங்கிக் கொண்டிருந்த காவலர் விழித்துக் கொண்டனராயினும் கதவு தாழிடப் பட்டதால் ஒன்றும் செய்ய இயலாதவராயினர். காவலரைக் கட்டிய பிறகு விறகுக் கட்டையை எடுத்துக் கதவை இடித்துத் திறக்க முயலு கிருர்கள்.]*

**கரிகாலன் :** இதோ கதவு தாழ்ப்பாளுடன் பெயர்ந்து விட்டது. உள்ளே இருக்கும் பெண்கள் விழித் தெழுந்து பயத்தால் நடுங்கிக் கொண்டிருக்கின்ற னரே! என்ன செய்வது?

**பாங்கன் :** உண்மையை அவர்களிடம் சொல்வது! ...அம்மணீ! அரசகுமாரீ! நாங்கள் உங்கள் தந்தை பறையறைவித்துத் தெரிவித்ததற்கிணங்க உம்மை விடுவிக்க வந்தவர்கள்!...உடன் இருக்கும் காவற் பெண்ணே! உனக்கு இனி வேலை இல்லை! நீ போகலாம்! நாங்கள் இந்த அம்மணியை இவ ளுக்கு உரியவரிடம் சேர்த்து விடுகின்ருேம்!

**காவற் பெண் :** நீங்கள் ஏன் இவர்களுக்குப் பகைவ ரான கள்வரா யிருத்தல் ஆகாது? உங்களை எப்படி நம்புவது ?

**பாங்கன் :** யாரை நம்பி இந்த அம்மணி இங்கு வந் தார்கள் ? அப்படியே இப்போதும் ஒருவரையும் நம்பாமல் எங்களுடன் வரவேண்டியதே! என்ன செய்வது ? விதி அப்படி இருக்கிறதே !

**அரசகுமாரி :** விதிப்படியே நடக்கிறேன் ! நீங்கள் என்னை எங்கே கொண்டு சென்றாலும் சரி! என்ன செய்தாலும் சரி! என் கற்புக் கெடாதவரை உயிரோடு இருக்கின்றேன்! கற்புக் கெட்ட அன்றே மாள்கின்றேன் !

**பாங்கன் :** நல்லது அம்மணீ! அப்படியே செய்யுங்கள்! இப்போது எங்கள் பின்னால் வாருங்கள்.

*[கரிகாலன் சுவரின்மேல் பாய்ந்தேறி மாடியை அடைந்து கயிற்றைத் தொங்க விடுகிறான். பாங்கன் அரசகுமாரியிடம் அதை இடுப்பில் கட்டிக்கொள்ளுமாறு கூறுகி றான். அவளும் அப்படியே செய்யக் கரிகாலன் அவளை உயரத் தூக்குகிறான். இச்சமயத்தில் காவற்காரப் பெண் கட்டப்பட்ட காவலரை அவிழ்த்துவிட முயலுகிறாள். அரசகுமாரி உயரத்தூக்கப்பட்ட பின் பாங்கனும் சுவரின் மேல் பாய்ந்தேறிச் செல்லுகிறான். பின் பக்கம் கயிற்றின் மூலம் மூவரும் முற்றத்தில் இறங்கு கிறார்கள். பாங்கனும் அரசகுமாரியும் இறங்கிய பின் கரிகாலன் இலாகவமாய்க் கீழே குதிக் கின்றான்.]*

**பாங்கன் :** இதோ வேறுபுறமிருந்து காவலர் ஓடி வருகின்றனர்.

**கரிகாலன் :** எத்தனை பேர் வருகின்றனர் ?

**பாங்கன் :** ஒன்று, இரண்டு, மூன்று, பத்துப் பேர் வருகின்றனர்.

**கரிகாலன் :** எத்தனை பேர் வந்தால் என்ன? போரிட்டு வென்றே அப்பாற் செல்ல வேண்டும்.

*[காவலர் பதின்மர் வந்து சண்டையிடுகின்றனர். வாட் போர் நடக்கிறது. ஒவ்வொருவராகக் காவலர் காயமுற்று விழுகின்றனர். இறுதியில் மூவர் இருக்கும்போது அவர்கள் ஓட முயல்கின்றனர். உடனே கரிகாலன் கயிற்றைச் சுருக்கிட்டுச் சுவரின் சூட்டின்மீது வீசி அதில் அதைப் பிணிக்கின்றான். முதலில் பாங்கன் ஏறிப் பின் அரசகுமாரியைத் தூக்குகிறான். அப்பால் கரிகாலன் கயிற்றின் மூலமாக ஏறுகிறான். அவன் பாதி ஏறும்போது தூரத்தில் காவலர் பலர் ஓடி வருகின்றனர்.]*

**பாங்கன் :** ஆ! அதோ மேலும் காவலர் பலர் ஓடி வருகின்றனர். ஆயினும் அவசரப்பட வேண்டாம். நீ ஏறுவதற்குள் அவர்கள் வந்துவிட இயலாது.

*[கரிகாலன் சுவரின் உச்சியை அடைந்ததும் கயிற்றை இழுத்து மறுபக்கம் தொங்க விடுகிறான். அப்போது சுவரின் அடியை அடைந்த காவலர் சினங்கொண்டு வேல், வாள் முதலியவற்றை வீசுகின்றனர். ஆனால் பயனொன்றுமில்லை. கரிகாலன் முதலியோர் கீழிறங்கிச் சென்று விடுகின்றனர்.]*

அங்கம் : நான்கு

களம் : ஆறு

## வருவது தானே வரும்

**இடம்** : ரே நாட்டு அரசர் அவைக்களம்.
**காலம்** : காலை.
**உறுப்பினர்** : ரே நாட்டரசர், அவர் மகள், கரிகாலன், பாங்கன், அவையினர், பால்வண்ணர்.

[அவை கூடியிருக்கிறது. அரச குமாரி கண்டு பிடிக்கப்பட்டு விட்டாள் என்னும் செய்தி ஊரில் பரவவே, பலர் பலவிதமாகப் பேசுகின்றனர்.]

**அவையில் ஒருவர் :** (மற்றொருவரைப் பார்த்து) அரச குமாரி கண்டு பிடிக்கப்பட்டு விட்டாளாமே. உமக்கு அதைப் பற்றிய விவரம் ஏதேனும் தெரியுமோ?

**மற்றவர் :** விவரம் ஒன்றும் தெரியாது. யாரோ இருவர் சாமர்த்தியமாகத் தேடிக் கண்டுபிடித்துக் கொணர்ந்தார்களாம். (அங்கிருந்த மற்றொருவரை நோக்கி) ஓய், பால்வண்ணரே, நீர் அடிக்கடி அரண்மனைக்குள் சென்று வருகிறவர் ஆயிற்றே. உமக்கு ஏதாவது தெரியுமோ?

**பால்வண்ணர் :** கண்டுபிடிக்கப்பட்டு விட்டது தெரியும். யாரோ இருவர் கண்டுபிடித்தார்கள் என்பதும் உண்மையே. ஆனால் அந்த இருவர் யார் என்பது தெரியாது. இன்னும் சிறிது நேரத்தில் நமது அரசர், அரசி, அரசகுமாரி, அவளைக் காப்பாற்றிய இருவர் ஆகிய எல்லாரும் இங்கு வரப் போகிறார்கள். நமது அரசர் அவர்களுக்குத் தக்க வரவேற்பு அளித்து உபசரிக்கப் போகின்றார். அப்போது எல்லாச் செய்திகளும் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கி விடும்.

**முதல்வர் :** அரசகுமாரியைக் கொண்டு சென்றவர்கள் யாவரோ ?

**பால்வண்ணர் :** அதைப் பற்றிய செய்திகளையெல்லாம் அவையில் விவரமாகச் சொல்லுவதாக அவளைக் கண்டுபிடித்துக் கொணர்ந்தவர் தெரிவித்துள்ளாராம்.

**இரண்டாமவர் :** அரசகுமாரி இப்போது எங்கிருக்கிருள் ?

**பால்வண்ணர் :** எங்கிருப்பாள் ? நீர்தான் சொல்லுமே! இது என்ன கேள்வி ஐயா, இது ?

**இரண்டாமவர் :** இல்லை. கேட்டேன். கோபித்துக் கொள்ளாதீர்கள்.

**பால்வண்ணர் :** சரி, சரி. அவள் அரண்மனையில்தான் அந்தப்புரத்தில் இருக்கின்ருள்.

**முதல்வர் :** திரும்பி வந்த பிறகு நீங்கள் அவளைப் பார்த்தீர்களோ ?

**பால்வண்ணர் :** இல்லை. அந்தப்புரத்திலுள்ளவர்களை எவரும் அடிக்கடி பார்க்க முடியாது என்பது தெரியாதா உமக்கு ? எல்லாம் சிறிது நேரத்தில் தானே தெரிந்து விடுகிறது.

**முதல்வர் :** அரசகுமாரி காணமற் போனதும், திரும்பக் கொணரப்பட்டதும் ஏதோ காதும் காதும் வைத்தாற் போல் அல்லவா உள்ளது! இவ்வளவு விரைவில் அவளுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடித்துப் பகைவர் கைவசம் கடுங்காவலில் இருக்கக் கூடிய அவளைக் கொணர்வதென்ருல், அப்படிக் கொணர்ந்தவர் எப்படிப்பட்ட சமர்த்தரா யிருத்தல் வேண்டும் !

**இரண்டாமவர் :** இச்செய்தி சாமானியரால் செய்ய இயலுமா ? அவர்கள் எப்படிப்பட்ட மகானுபாவர்களோ !

**பால்வண்ணர் :** நமது நாட்டு ஒற்றர்களும் சிறந்த வீரர்களும் ஒன்றும் தெரியாது விழித்திருக்கையில் இவர்கள் எப்படியோ கண்டுபிடித்துக் கொணர்ந் திருக்கிறார்கள். அவர்கள் தெய்வாம்சம் பொருந்திய வர்களாய்த்தான் இருக்க வேண்டும்.

**முதல்வர் :** ஒரு வேளை அவர்களே கொண்டு போய் விட்டுப் பாதி அரசு தருவதாகச் சொன்னதும் அதற்கு ஆசைப்பட்டுத் திரும்பக் கொணர்ந்திருக்கலாமோ?

**இரண்டாமவர் :** இருந்தாலும் இருக்கலாம். யார் கண்டது? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக் குமோ?

**பால்வண்ணர் :** ஏன் இப்படிச் சளசள வென்று பிதற்றிக் கொண்டிருக்கிறீர்கள்? எது எப்படியிருந் தால் நமக்கென்ன? எல்லாம் இன்னும் சிறிது நேரத் திற்குள் விளங்கி விடுகிறது. பேசாமலிருங்கள்.

*[அரசர் வருதல்.]*

**கட்டியக்காரர் :** ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட ராஜ கம்பீர, பரராஜ பயங்கர, சமரசூர, ரே நாட்டு மன்னர் வருகிரு......ர்! பராக்! எச்சரிக்கை!

**அவையினர் :** (எழுந்து நின்று), ரே நாட்டு மன்னர் பெருமானுக்கு - ஜே!

*[அரசர், அரசி, அரசகுமாரி, அமைச்சர் ஆகியோர் அவரவர்க்கு உரிய இருக்கைகளில் வந்து அமர்கின்றனர்.]*

**அரசர் :** அவையோர்களே, வணக்கம். நமது அருமைக் குமாரி காணமற் போன இந்தச் சில நாட்களுக்குள் நாமடைந்த துன்பம் அளவற்றது. இப்போது அக் குமாரி உங்கள் முன்னிலையில் வந்து அமர்ந்திருப் பதை நீங்கள் காண்கின்றீர்கள். காணமற் போன வரலாற்றையும், கண்டு பிடிக்கப்பட்ட வரலாற்றையும் கண்டு பிடித்தவருடைய வரலாற்றையும் அறிய உங் களுக்கு மிக்க ஆவலாயிருக்கும். அவற்றை நமது

அமைச்சர் உங்களுக்கு இப்போது எடுத்துக் கூறு வார்...அமைச்சரே, கூறுக அவற்றை.

**அமைச்சர் :** பெருமக்களே, வணக்கம். சிறிது காலத் திற்கு முன்னல் வேங்கடவரசர் நமது அரசகுமாரியை மணந்து கொள்ள விரும்பித் தூது விடுத்ததை அறி வீர்கள். அக்காலை அவர் வயதானவர் என்னும் கார ணத்தால் மகட்கொடை மறுத்தோம். சுயம்வரம் ஏற் படுத்தப் போவதாகவும் அறிவித்தோம். அவ்வாறு மறுத்தமையால் சினங்கொண்ட அவர், நமது நாட்டு எல்லையை அடுத்துள்ள காட்டில் வாழும் கள்வரது உதவி கொண்டு, நமது அரசகுமாரியைக் கன்னி மாடத்தினின்று மஞ்சத்தோடு தூக்கிச் சென்று விட் டனர். அவ்வகையில் அக்கள்வருக்கு நமது அரண் மனையில் துணையாய் அமைந்தவர்கள், அரண்மனைத் தோட்டத்துப் புதிய பணியாளன் ஒருவனும், அந் தப்புரத்துப் புதிய பணிப்பெண் ஒருத்தியுமேயாவர். அவர்கள் சிறைப்படுத்தப்பட்டு விட்டனர்......

அரசகுமாரியைக் கண்டு பிடித்துத் தருபவருக் குப் பாதியரசு வழங்கப்படும் எனப் பறையறைந்தோ மன்றோ? அதனைக் கேட்ட இருவர் அப்பணியில் ஈடுபட்டனர். அவர்கள் தங்கள் நுண்ணறிவால் புலன் விசாரித்துச் சில இரவுகள் கண் விழித்து, கள்வரும் கொலை பாதகர்களும் வட்டமிடும் அபாய கரமான விடங்களில் சுற்றி, அரசகுமாரி அடைந்து கிடந்த இடத்தைக் கண்டறிந்து மீட்டுக்கொணர்ந்து விட்டனர். இவ்வரிய செயலை மிக எளிதில் செய்து முடித்த திறலுடையார் யாவர் என அறிய மிக்க ஆவலாயிருக்கின்றதன்றோ? இப்பணியில் ஈடுபட்ட இருவருள் முக்கியமானவர், நமது சக்கரவர்த்தி— சோழ வம்சதிலகர்—**கரிகாலர்** ஆவார்! மற்றொருவர் அவரது பாங்கர்.

**அவையோர் :** ஆ! அப்படியா! சக்கரவர்த்தி கரிகால ருக்கு - ஜே! வீராதிவீரருக்கு – ஜே!

அமைச்சர்: வேங்கடவரசர் தமக்குச் சொந்தமான பழைய கோட்டையில் நமது அரசகுமாரியைச் சிறை வைக்கச் செய்தாராம். இச் செயலைச் செய்து முடித்த கள்வன் பெருங்கொள்ளைக்காரன்! பெருங்கொலை காரன்! அவன் வேங்கட வரசருக்கு நீண்ட நாட்களாக நண்பனாயிருப்பவன். ஆயினும் நமது அரச குமாரியைச் சிறைவைத்த பின் அவன் மனந்திரிந்து தனது நண்பனான வேங்கடவரசருக்கே துரோகம் நினைத்தான். அவரைத் தந்திரமாக ஒழித்து, அவரது நாட்டையும், நமது அரசகுமாரியையும் கைக்கொள்ளவும் திட்டமிட்டான்.

நமது அரசகுமாரியைக் கைப்பிடிப்பதற்குப் பழைய கோட்டைக்கு வேங்கடவரசர் வருங்கால் சிறிது பரிவாரத்துடனேயே வருவாராதலால் அவ் வாய்ப்பை அவன் பயன் படுத்திக் கொள்ளத் தீர் மானித்தான். அவன் பழைய கோட்டைக்கு அருகாமையில் தனது கூட்டத்தாரைப் பதுக்கி வைத் திருந்தான். அதனால் கோட்டைக்குள் காவலர் சிலரே யிருந்தனர். இச் செய்திகளை எல்லாம் அறிந்த நமது சக்கரவர்த்தி, தக்க முன்னேற்பாடுகளுடன் இரகசியமாகக் கோட்டைக்குள் புகுந்து, அரசகுமாரி அடைபட்டிருந்த அறைக்கதவைப் பிளந்து அவரைச் சிறைமீட்டுக் கொணர்ந்தனர். ஆயினும், காவலர் பலர் சூழ்ந்து அவரோடு போரிட்டனராம். இணையற்ற வீரராகிய அவர்முன் எப் பகைவர்தாம் நிற்க இயலும்? பகைவர் கை ஒடுங்கியது. நமது குமாரி மீட்கப்பட்டு இதோ நம் அவையில் அமர்ந்துள்ளார்கள்!

இச்சதிச் செயலில் ஈடுபட்ட கள்வர் கூட்டத்தைப்பற்றி நாம் முன்னரே அறிவோமாயினும், அவர்கள் இச்செயலைச் செய்யத் துணிவார்கள் என்பதை நாம் கனவிலும் கருதவில்லை. மேலும்,

மகட்கொடை மறுத்த காரணத்தால் வேங்கடவரசர் இத்தகைய தீச்செயலில் இறங்குவார் என்பதை யும் நாம் எதிர்பார்க்கவில்லை. அதனால் அரசகுமாரி காணமற் போனது அறிய இயலாததொரு புதிராக இருந்தது. இந்நிலையில் நமது சக்கரவர்த்தி பெருமான், தமக்கே யுரித்தான தனி ஆற்றலால் நமது துன்பத்தைப் போக்கி நம்மையெல்லாம் இன்பக்கடலில் ஆழ்த்தினர்...இதோ, அப்பெரு மானும் நமது அவைக்கு எழுந்தருள்கின்றார்!

**கட்டியக்காரர்:** சக்கரவர்த்தி கரிகாலருக்கு – ஜே! வளவர் பெருமானுக்கு – ஜே! வெண்ணிப் பறந்தலை யில் பகைவரைப் புறங்கண்ட வீரருக்கு – ஜே! வாகைப் பறந்தலையில் பகைவரைப் பறக்கடித்த பார்வேந்தருக்கு – ஜே வடவர் குடவரது வலி தொலைத்த உரவோர்க்கு – ஜே!

*[கரிகாலன் பாங்கனுடன் வந்து உயரிய இருக்கையில் அமருதல், ஆரவாரம் அடங்குதல்.]*

**ஏனாட்டரசர்:** மன்னர் மன்னரே, அரிய உங்கள் திறல் புகழும் தரத்தன்று. யாங்கள் பறையறை வித்தவாறு, பாதியரசு மட்டும் தங்கட்குரியதன்று. அரசு முழுமையுமே தங்கட்கு உரிமையாக்குகின் றோம். ஏனெனில், தங்களால் மீட்டுக் கொணரப்பட்ட எமது மகளும் தங்கட்கு உரியவளாவாள். மேலும் அவளே எமது சந்ததியாதலின் அவளைத் தாங்கள் மணந்து கொள்வதோடு இவ்வரசையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். எமக்கு வயதாகி விட்டபடியால் இந்த என் மகளுக்கு மணமுடித்து, அம்மணமகன்பால் அரசை ஒப்புவித்துவிட்டு, தவத் திற்குச் செல்ல முன்னமேயே எண்ணியிருந்தோம். அதற்கு ஏற்ற செவ்வியும் இப்போது வாய்த்துள்ளது. ஆதலின் என் வேண்டுகோளை மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கரிகாலன் :** இங்குள்ளார் அனைவருக்கும் வணக்கம். அரசகுமாரி காணுமற்போன விதம் எமக்குத் தற் செயலாகத் தெரிய வந்தது. எம்மாலான முயற்சி செய்தோம். இறையருளால் முயற்சி கைகூடிற்று. இதில் புகழ்ச்சிக் குரியது எதுவுமில்லை. அரசர் வேண்டிக் கொள்ளும் வண்ணம் மணம் புரிந்து கொள்ளத் தடையில்லை. ஆயினும், தற்போது யாம் இமயம்வரை சென்று வடவாரியரை வென்று வரப் புறப்பட்டுள்ளோம். அத் தண்டயாத்திரை முடிந்ததும் மணம் முடிப்போம். அதன் பின்னர் வேண்டுமாயின் இவ்வரசை ஏற்றுக்கொள்கின்றோம். எமக்குப் பின் இவ்வரசகுமாரிக்குப் பிறக்கும் எமது சந்ததியார் இவ்வரசை ஆள்வாராக!

*[காவலன் ஒருவன் வந்து -]*

**காவலன் :** அரசே, வாழ்க! வேங்கடவரசர் வந்துள்ளார். அவைக்கு வர அநுமதி வேண்டுகின்றார்!

**கரிகாலன் :** வரவிடுக அவரை!

*[காவலன் போதல் - வேங்கடவரசன் வருதல்.]*

**வேங்கடவரசன் :** சக்கரவர்த்தியவர்களுக்கும், இந்நாட்டு அரசருக்கும் எமது தாழ்மையான வணக்கம்! நான் செய்த தீங்கை நான் உணர்ந்து வருந்துகின்றேன். இனி எவ்விதத் தீச்செயலிலும் இறங்குவதில்லை என என் தன்மானம் சான்றாக உறுதியாகக் கூறுகின்றேன். நான் செய்த தீங்கிற்குச் சக்கரவர்த்தியவர்கள் விதிக்கும் தண்டனையையும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். இதனைத் தெரிவிக்கவே இவ்விடம் வந்துள்ளேன்.

**கரிகாலன் :** நீர் செய்துள்ள குற்றம் மிகப் பெரிது. ஆயினும் நீர் கழிவிரக்கங்கொண்டு எமது தண்டனையை அனுபவிக்கச் சித்தமாக நீராகவே வந்துவிட்டபடியால் உமக்குரிய தண்டனையை குறைக்க வேண்

டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. நீர் இந்த ரேநாட்டரசர்க்குரிய சிற்றரசராய் அவரது அதிகாரத்துக்கு உட்பட்டு உமது நாட்டை ஆண்டு வருக. உமது வயதையும், இனி, நீர் உலக வாழ்வை நீத்து மேலுலகத்துக்குச் செல்லுங்கால் நல்வாழ்வு பெறுதற்குரிய வழியை ஆலோசிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றீர் என்பதையும் நினைவில் வைப்பீராக!

**வேங்கடவரசர் :** மற்றொரு செய்தி: எமது ஏவலுக்கிணங்கி சமீபத்தில் நடந்த தீச்செயலில் ஈடுபட்ட கள்வர் தலைவன்—நீண்ட நாளாக எமது நண்பனாயிருந்தவன்—இப்போது எமக்குப் பகையாய் மாறி என்னையே கொல்லத் துணிந்தான். அவனுடைய சூழ்ச்சிக்குட்பட்டு அவனிடம் அகப்பட்டுக்கொண்ட யான் ஏதோ தெய்வச் செயலால் பிழைக்க நேர்ந்தது. எங்ஙனமெனில் கூறுவேன் :

சக்கரவர்த்தியவர்கள் இவ்வரசகுமாரியை மீட்டுக் கொண்டுவந்த அதே இரவில்—ஏறக்குறைய அதே சமயத்தில்—நான் பழைய கோட்டைக்கு என் பரிவாரத்தார் நூற்றுவருடன் வந்தேன். அப்போது அக்கள்வன் தன் கூட்டத்தார் இருநூற்றுவருடன் வந்து எதிர்த்தான். பழைய கோட்டையின் முன் பக்கம் சண்டை நடந்துகொண்டிருந்தபோது அரச குமாரியை யாரோ விடுவித்துக்கொண்டு பின்பக்கமாகச் செல்லுகிறார்கள் என்றும் செய்தி வந்தது. உடனே அக்கள்வன் தன் ஆட்கள் சிலரை அங்கு அனுப்ப வேண்டியதாயிற்று. இதனாலுண்டான குழப்பத்தால் அச்சண்டையில் அவன் சற்றுத் தாழ, நாங்கள் அவன் கையிலிருந்து தப்பியோடி விட்டோம்.

பின்னர் அக்கள்வனை எப்படியாவது பிடித்துத் தண்டிக்க எண்ணிய யான், என் இருப்பிடம் சென்றதும் என் படைத்தலைவனை யனுப்பி, அவனையும்

அவன் கூட்டத்தாரையும் பிடித்துவரச் சொன்னேன். அவனையும் மூக்கன் என்னும் மற்றொருவனையும் தவிர, மற்றவர்களை அப் படைத்தலைவன் பிடித்து வந்துள்ளான். அவர்களைத் தங்கள்பால் ஒப்படைக்கின்றேன்,

**கரிகாலன் :** ரே நாட்டரசரே, அவர்களை யாம் தங்களிடம் ஒப்படைக்கின்றோம்.

**ரேநாட்டரசர் :** அமைச்சரே, அவர்களைச் சிறையிலடைக்க ஏற்பாடு செய்க!

**அமைச்சர் :** படைத் தலைவரே, அரசரது கட்டளை நிறைவேறுவதாக!

*[படைத் தலைவர் எழுந்து செல்கிறார். மற்றொரு காவலன் வருகிறான்.]*

**காவலன் :** அரசே, சிலர் நல்லமலைக் கள்வனையும் அவன் கூட்டாளி ஒருவனையும் பிடித்து வாயிலில் கொணர்ந்துள்ளனர்.

**ரே நாட்டரசர் :** ஆ! அக்கள்வன் பிடிபட்டுவிட்டானா? சக்கரவர்த்தியவர்களே, இது மிக்க ஆச்சரியகரமான செய்தி. அக்கள்வனைப் பிடித்துவந்த தீரர் யாரோ தெரியவில்லை. அவர்களை அவைக்கு வரவழைக்கலாமோ?

**கரிகாலன் :** கள்வனும் அவன் கூட்டாளியும் எதற்கு? அவர்களைப் பிடித்து வந்தவரை மட்டும் வரச் செய்வீர்.

**ரேநாட்டரசர் :** கள்வனையும் அவன் கூட்டாளியையும் சிறையிலடைக்க. அவர்களைப் பிடித்து வந்தவரை இங்கு வரச் செய்க.

*[காவலன் போதல்-சிலர் வருதல்.]*

(வந்தவர்களை நோக்கி) நீங்கள் யாவர்? எப்படிக் கள்வரைப் பிடித்தீர்கள்?

**வந்தவர்கள் :** அரசே, வணக்கம். நாங்கள் சோழ நாட்டுப் படைத் தலைவர்கள். அதோ வீற்றிருக்கும் எமது அரசரது கட்டளைக்கு இணங்க, அவருக்கு அருகில் வீற்றிருக்கும் பாங்கருடன் கூடிச் சென்று கள்வரைப் பிடித்து வந்தோம். எங்களைக் காட்டு வழியாகக் கூட்டிச் சென்ற அவர் காட்டின் நடு விடத்தை அடைந்ததும், தாம் முன்னால் சென்றார். அவர் செய்யும் சில குறிகளைக் கண்டறிந்து நாங்கள் அவரைப் பின்பற்றிச் செயலாற்ற வேண்டு மெனக் கூறினார். அதாவது அவரைப் பின்பற்ற வேண்டும் என்று இருந்தால் அம்புக்குறி தரையில் கிழிக்கப்பட்டிருக்கும்; அப்போது அம்பின்முனை காட்டும் திசையில் செல்ல வேண்டும். போகும்போது குறியை அழித்துவிட வேண்டும். புள்ளடிக் குறி யிருந்தால் அருகிலுள்ள செடி, புதர் முதலியவற் றில் ஒளிந்துகொண்டு அவரது வரவை எதிர்பார்த் திருக்க வேண்டும்; அவர் வாயிலேயே குழலோசை போன்ற ஓசை எழுப்ப வல்லவர். அப்படி எழுப்பும் ஓசையைக் கேட்டால் எச்சரிக்கையாக நாற்புறமும் கவனித்துக்கொண்டு ஒருவர் கண்ணிலும் படாமல் ஓசை உண்டாகும் இடத்திற்குச் செல்ல வேண்டும். சீட்டியடிக்கும் ஓசை கேட்டால் விரைந்து அவ்விடத் திற்கு ஓடிவர வேண்டும்.

அவர் முன்னே எங்கள் கண்ணுக்கு மறைந்த பின் நாங்கள் அவர் இடும் அம்புக் குறிகளைக் கவனித்துக்கொண்டே நீண்டதூரம் வளைந்து வளைந்து சென்றோம். உத்தேசம் ஒரு காததூரம் சென்றபின் புள்ளடி காணப்பட்டது. அங்கே அருகில் குத்துப் பாறைகளும் முட்புதர்களும் நிறைய இருந் தன. அவற்றிற்குப் பின்னால் பதுங்கியிருந்தோம். அங்கே அருகில் ஒரு குன்று இருந்தது; சிறிது நேரத்திற்கெல்லாம் குன்றின்மேல் இருந்து குழ

லோசை கேட்டது. அதைக் கேட்டதும் அவர் கூறியவாறே குத்துப்பாறை, முட்புதர் இவற்றின் வழியே பதுங்கிப் பதுங்கி எங்களை எவரும் பார்க்க இயலாதவாறு குழலோசை வருமிடத்தை நோக்கிச் சென்ரும். அப்போது நாங்கள் பிடித்து வந்த கள்வர் இருவரும் பின்தொடர்ந்து ஓடிவரப் பாங்கர் ஓடிவந்தார். அவர் ஏறக்குறைய நாங்கள் இருக்கு மிடத்தை அடைந்தபோது அக்கள்வர் அவரை நெருங்கிவிட்டனர். உடனே பாங்கர் வாளை உருவிக் கொண்டு அவர்களை எதிர்த்தார். சிறிது சண்டை யிட்டதும் சீட்டி அடித்தார். உடனே நாங்கள் ஒளிந்திருந்த இடத்திலிருந்து அவர்கள் சண்டை யிடும் இடத்திற்கு ஓடிக் கள்வரை எளிதில் பிடித்துப் பிணித்து இங்கே கொணர்ந்துவிட்டோம்.

**ரேநாட்டரசர் :** ஆ! சக்கரவர்த்தியாருடையதும், அவரது பாங்கருடையதுமாகிய அரிய செயல்கள் கேட்கக் கேட்கத் திகட்டாதவைகளாக உள்ளன! பாங்கரே, தயவு செய்து, தாங்கள் கள்வரின் இருப் பிடத்தை எப்படி அறிந்து அவர்களைப் பிடித்தீர்கள் என்பதைக் கூறவேண்டுகின்றேன்.

**பாங்கர் :** நாங்கள் தங்கள் குமாரியை மீட்டு இங்கு அரண்மனையில் கொண்டுவந்து விட்டபிறகு எமது அரசர் அக்கள்வரைப் பிடித்துவர வகைசெய்யுமாறு என்னிடம் கூறினர். உடனே நான் பழைய கோட் டைக்குச் சென்று அக்கள்வர் போக்கை யறிந்து அவர்கள் இருப்பிடத்தை அறிய எண்ணி அங்குச் செல்லலானேன். அவ்விடத்தை யடைந்ததும் அங் குச் சில வழிப்போக்கர் வேங்கடவரசர்க்கும் கள்வர்க் கும் போர் நடந்ததையும், அவ்வரசர் அவர்களை வென்று சிறைப்படுத்திக்கொண்டு சென்றதையும், ஆனல், தலைவனும் சிலரும் ஓடிவிட்டதையும் பற்றிப் பேசிக்கொண்டு சென்றனர்.

அதைக் கேட்ட யான் தலைவனையும் ஓடியவர்களையும் எப்படிப் பிடிப்பதென்று ஆலோசித்திருக்கையில் அதற்குமுன் மூக்கன் என்பவன் வேறு சில கள்வரைக் காட்டில் ஓரிடத்தில் சந்தித்துப் பேசியது நினைவிற்கு வந்தது. இப்படிப் பேசியது நாங்கள் தங்கள் புதல்வியைத் தேடி முதலில் சென்றபோது நிகழ்ந்தது. அது நினைவிற்கு வந்ததும் அவ்விடத்தை நோக்கிச் சென்று ஆங்கோரிடத்தில் மறைந்து கவனித்தவாறு இருந்தேன்.

என் ஊகம் வீண் போகவில்லை. இந்நகரில் பேய்க் குளத்திற்கு அருகிலுள்ள கள்ளுக் கடையில் அக்கள்வர் கூட்டத்தார் சிலர் அங்கு வந்தனர். அவர்கள் அங்கு நெடுநேரம் ஓரிடத்தில் இருந்து பார்த்துவிட்டு, 'இனி இங்கிருப்பதில் பயனில்லை. குகைக்குச் சென்று காத்திருப்போம்,' என்று கூறிக் கொண்டு சென்றனர். நானும் அவர்களறியாமல் அவர்களைப் பின்பற்றினேன். நீண்ட தூரம் சென்று அவர்கள் ஒரு மலையை. அடைந்து அதன்மேல் சிறிது தூரம் ஏறி அங்குப் புதர்களின் இடுக்கில் மறைவாகச் சிறிது தூரம் சென்று அங்கிருந்த ஒரு குகைக்குள் புகுந்தனர். அங்ஙனம் இருந்தவர் ஐவராவர்.

இப்போது அக்குகையின் இருப்பிடம் தெரிந்துவிட்டதால் இனி இவ்வூரை அடைந்து இங்குள்ள எமது படையினர் சிலரை அழைத்துச் சென்று அக்கள்வரைப் பிடிக்கலாமென எண்ணித் திரும்பினேன். அப்படி நான் புறப்பட்டு ஏறக்குறைய அக்குன்றின் அடிவாரத்தை அடைந்தபோது என் பின்னல் ஓசையைக் கேட்டுத் திரும்பினேன். அப்போது மேற்கண்ட கள்வர் ஐவரும் வாட்களை உருவிக்கொண்டு என்னைக் கொல்ல வந்திருப்பதை அறிந்தேன்.

அப்போது ஒருவன், 'இவன்தான்! இவன்தான்! அப் பருத்தவனுடன் இருந்தவன். அவனை எங்கோ

காணேம்! இவன் மட்டும் இங்கே முளைத்தான். இவன் நிச்சயம் நமது இருப்பிடத்தை அறிந்திருப்பான். இவனைக் கொல்லுங்கள்! கொல்லுங்கள்!' என்று கூவினன். உடனே யாவரும் என்னைச் சூழ்ந்து கொண்டனர். நான் நெடுநேரம் அவர்களுடன் போரிட வேண்டியதாயிற்று. அப்போரில் இருவர் என் வாளுக்கு உடனே இரையாயினர். மற்ற மூவரும் காயமடைந்து வீழ்ந்தனர். அவர்களை அங்கேயே விட்டு வைக்கலாகாதெனக் கருதி, அக் குகைக்குள் அவர்களைக் கொண்டுபோய்ப் போட்டு விட்டுத் திரும்பினேன்.

பின்னர் இங்கு ஊருக்கு வந்து எம் படையின ராகிய இவர்களைக் கூட்டிக்கொண்டு சென்றேன். இவர்கள் என் குறிகளின்படி நடந்ததை நீங்கள் அறிவீர்கள். இனி நான்மட்டும் தனியே முன் சென்று செய்ததைப் பற்றிக் கூறுகின்றேன்.

நான் குன்றின் அருகில் சென்றதும் ஓரிடத்தில் புள்ளடி யிட்டுவிட்டுக் குகையை அடைந்தேன். அப்போது அங்கு ஒருவரும் காணப்படவில்லை. பிறகு குகையை விட்டு வெளியில் வந்து ஒருபுறம் மறைந் திருந்தேன். அப்போது இருவர் வெளியிலிருந்து வந்து குகைக்குள் நுழைந்தனர். அவர்கள் தோற் றத்தால் அவர்கள் அக்கள்வர் கூட்டத் தலைவனும் அவனது கூட்டாளியுமே என்பது தெற்றெனப் புலப்பட்டது. அவர்கள் உள்ளே சென்றபின் குகையை விட்டுச் சிறிது தூரம் வெளியில் வந்து குழலோசை போன்ற ஓசையை எழுப்பியவாறு ஒரு பாறைமீது உட்கார்ந்து கொண்டிருந்தேன். குகைக் குள்ளிருந்து கள்வர் இருவரும் வெளி வந்து என் னிடத்தை நோக்கி வரலாயினர். அவர்கள் என்னைக் கொஞ்சம் சமீபித்ததும் நான் பயந்து ஓடுகிறவனைப் போல் ஓடிக் குன்றின் அடிவாரத்தை அடைந்தேன்.

அப்போது அவர்களும் என்னை நெருங்கிவிட்டனர். அப்பால் நிகழ்ந்ததை இப் படைத் தலைவர்கள் சொல்ல நீங்கள் கேட்டீர்கள்!

**ரேனாட்டரசர் :** ஆ! அற்புதம்! அற்புதம்! ஆயின் அக்கள்வர் கூட்டத்தாருள் காயமடைந்த மூவர் தப்பித் திரிகின்றனர் போலும்! அவர்களைப்பற்றிப் பின்னர்க் கவனிப்போம்!

**கரிகாலன் :** வேண்டாம்! அவர்களைப்பற்றிய செய்தியை இங்கு எமது மற்றொரு படைத் தலைவர் கூறுவார்....அரசரே, காவலனை அழைத்து அரண்மனைவாயிலில் போய் அங்குக் காத்திருக்கும் **ஏனாதி முதுகண்ணரை** நாம் அழைத்ததாகக் கூறி அழைத்து வரச் செய்க!

**ரேனாட்டரசர் :** யாரங்கே...? காவல! வாயிலில் போய் அங்குக் காத்திருக்கும் ஏனாதி முதுகண்ணரை நமது சக்கரவர்த்தியார் அழைப்பதாகக் கூறி அழைத்து வா!

*[காவலன் போய் அழைத்து வருதல்.]*

**ஏனாதி முதுகண்ணர் :** அரசே, வணக்கம்! அடியேனுக்கு யாது கட்டளையோ?

**கரிகாலன் :** நீ பிடித்த கள்வரைப் பற்றிய செய்தியைக் கூறுவாய்!

**ஏனாதி முதுகண்ணன் :** நாங்கள் தங்கள் கட்டளைக் கிணங்க இரவு உத்தேசம் பத்து நாழிகைப்பொழுதிற்குப் பேய்க்குளத்தின் கீழ்கரையை முதலில் அடைந்து அங்கிருந்து தென்கரை வழியாக மேற்கு நோக்கிப் போய் அக்குளத்தின் மேற்குக் கரையில் இருந்த கள்ளுக் கடையின் எதிரில் ஒரு மரத்தின் மறைவில் பதுங்கியிருந்தோம். உத்தேசம் பன்னிரண்டு நாழிகை அளவிற்கு மூவர் காயக் கட்டுக்களுடன் அவ்விடத்திற்கு வந்தனர். அங்கிருந்த கடைக்காரனும் மற்றொருவனும் அவர்களிடம் செய்தி

களை விசாரித்தனர். அதற்கு அவர்கள் தங்களைப் பற்றிய செய்திகளைச் சொன்னார்கள். அவற்றிலிருந்து எங்களால் ஒன்றும் தெரிந்துகொள்ள இயலவில்லை. ஆனால், அவர்கள் கள்ளர் கூட்டத்தார் என்பதும், அவர்களது மறைவிடமான மலைக் குகையை ஒருவன் கண்டறிந்து சென்றுவிட்டான் என்றும் அறிந்தோம். அப்படிக் கண்டறிந்து சென்றவனை எப்படியாவது பிடித்துக் கொன்றுவிடுவதாக அவர்கள் அடிக்கடி சபதம் கூறினர்.

பிறகு பதினைந்து நாழிகை வரையில் அவர்கள் பேசியிருந்தனர். வேறு எவரும் அங்கு வரவில்லை. அப்பால் அவர்கள் படுக்கச்செல்லலாயினர். அதுவே சமயம் எனத் தாங்கள் முன்னர் அறிவித்திருந்ததால், அதன்படியே உடனே நான் என் வீரருடன் சென்று அம்மூவரையும் அவர்களோடு அக்கள்ளுக் கடைக் காரன், அவன் கூட்டாளி ஆகியோரையும் பிடித்துப் பிணித்து நமது படை தங்கியிருக்குமிடத்திற்குக் கொண்டு சென்று காவலில் வைத்தேன்.

**கரிகாலன் :** நல்லது! அக்கள்வரை இம்மன்னரது காவலர்பால் ஒப்படைப்பீராக! சென்று வருக!

**ரேனாட்டரசர் :** ஆ! ஆ! இவ்வற்புதச் செயலை என்னவென்று புகழ்வது! எங்கள் பகைவன் எமக்கடங்கி நல்வழியில் நடப்பவனானான். எங்கள் நாட்டையடுத்திருந்து நீண்ட நாளாகக் கூறவொண்ணா இன்னல்களைச் செய்து வந்த கள்வர் கூட்டத்தார் அனைவரும் செயலற்றவராயினர். வாழ்க நமது சக்கரவர்த்தி! தழைக்க அவரது கொற்றம்! யாங்கள் செய்யும் எந்தக் கைம்மாறும் இந் நற்செயலுக்கு ஈடாகாது. ஆதலால், வாழ்த்துவதும் வணங்குவதுமே நாங்கள் செய்யத் தக்கனவாம்!

## அங்கம் : ஐந்து
## களம் : ஒன்று

# வென்றி மேம்பாடு

**இடம்** : *புகார் நகரம்.*

**காலம்** : *காலை.*

**உறுப்பினர்** : *நகரமாந்தர், அரசகாவலர், பறையறை வோர்.*

*[நகர வீதிகளில் பறையறைவிக்கப்படுகின்றது. அரச காவலர் பறையறைவோரைப் பின்பற்றி வருகின்றனர். மக்கள் ஆங்காங்குக் கூடிப் பேசுகின்றனர்]*

**பறையறைவோர் :** டுடும்! டுடும்! டுடும்! டுடும்! எல்லாரும் கேளுங்கள்! எல்லாரும் கேளுங்கள்! வடநாட்டு அரசர்மேல் படையெடுத்துச் சென்ற நம்முடைய அரசர் வெற்றியோடு திரும்பிவருகிறார்! அதனால் நாளை முதல் பத்து நாளைக்கு அனைவரும் வெற்றிவிழாக் கொண்டாட வேண்டும்! எல்லாரும் அவரவர் வீடுகளை அலங்கரியுங்கள்! அரசரால் நடத்தப்படும் வெற்றிக் கொண்டாட்டங்களைக் கண்டு களிகூருங்கள்! டுடும்! டுடும்! டுடும்!

**கூட்டத்துள் ஒருவர் :** (மற்றொருவரை நோக்கி) நமது மன்னர் வடவாரியர் அனைவரையும் வென்று விட்டனராமே! அவர்கள் நாட்டில் நமதரசர் அடியெடுத்து வைத்ததுமே, அவர்கள் நம் மன்னரை எதிர்கொண்டழைத்து வணங்கித் திறையளந்தனராமே! ஆ! ஆ! நமதரசர் வீரமே வீரம்!

**மற்றவர் :** நமதரசர் தெய்விக வல்லமை வாய்ந்தவர். உலகாள்வதற்கெனவே தோன்றியவர். அவர் மலை அகழ்க்குவர்; கடல் தூர்க்குவர்; வான் வீழ்க்குவர்;

வளி மாற்றுவர். அவர் வடவரை வெல்வதோ பெரிது !

**மற்ருெரு கூட்டத்தாருள் ஒருவர் :** (மற்ருெருவரைப் பார்த்து) நமதரசர் சென்ற வழியில் ரேநாட்டில் அந்நாட்டு அரசகுமாரியைக் கள்வர், அரண்மனையி னின்று மஞ்சத்தோடு தூக்கிச் சென்று எங்கோ ஒளித்து வைத்திருந்தனராம். அவ்வரசர் எங் கெங்கோ தேடியும் அவள் அகப்படவில்லையாம். இதை நமதரசர் கேள்வியுற்று உடனே அங்கே இங்கே சென்று உளவறிந்து அரசகுமாரியை மீட்டு வந்ததுடன், எவருக்கும் பிடிபடாமல் தருக்கித் தீய செயல் புரிந்து வந்த அக்கள்வர் கூட்டத்தார் அனைவ ரையுமே பிடித்து ஒடுக்கிவிட்டனராம் !

**மற்றவர் :** அது மட்டுமா? அவ்வரசகுமாரியை நம தரசர் மணந்து கொண்டனராம்! அதனுல் அவ்வரசு நம்முடையதாயிற்று. மேலும் வேங்கடத்து வடுக அரசரும் நமதரசருக்குக் கீழ்ப்படிந்தவராயினர்.

**வேருெரு கூட்டத்தாருள் ஒருவர் :** நமது வேந்தரது மாண்பே மாண்பு ! உலக முழுவதிலும் இனிப் பகை இல்லை யென்னுமாறு எல்லா அரசரையும் வென்று விட்டார். வடவாரியரை எல்லாம் வென்றுவிட்ட அவர் இமயத்தை அடைந்தார். அது அவரை மேலே செல்லவொட்டாமல் தடுத்தது. அதனுல் சினங்கொண்ட அவர் தாம் காஞ்சியில் சாத்தன் என்னும் தெய்வத்தினிடமிருந்து பெற்ற அரிய திறலுடைய செண்டால் அடித்தார். உடனே அம் மலை நிலைவேறுபட்டுத் திரிந்தது. பின்பு மீளவும் அதனை முன்போலாக்கி அதன்மேல் கொடுவரி இலச்சினை பொறித்து மீண்டார்.

**மற்ருெருவர் :** அதுமட்டுமேயோ ! செல்லும் போதும், திரும்பு காலிலும் ஆங்காங்குள்ள மன்னர் பலர் தாம் பெற்ற அரிய பொருள்களைத் திறையாகக் கொடுத்

தனராம். அவற்றுள் மூன்று மன்னர்கள் அளித்தவை உலக அதிசயப் பொருள்களாம். அப்பொருள்கள் அவ்வரசரின் முன்னோருக்கு அவர்கள் வானவர்க்குச் செய்த உதவிக்காக மயனால் செய்யப்பட்டு அளித்தவையாம். அவை வச்சிரநாட்டரசன் அளித்த முத்துப்பந்தர், மகதநாட்டரசன் கொடுத்த பட்டி மண்டபம், அவந்திவேந்தன் மனமுவந்தளித்த தோரணவாயில் என்பவை.

**மற்றவர் :** அவற்றை யெல்லாம் ஒன்றுகூட்டி நாளங்காடியில் ஒரு மண்டபமாக அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாருங்கள், போய்ப் பார்க்கலாம்!

**நகரத்தின் மற்றொரு புறத்தில் ஒரு கூட்டத்தாருள் ஒருவர் :** நமதரசர் வெற்றிக் கொண்டாட்டத்தை எவ்வெவ் வகையில் கொண்டாடப் போகின்றார் என்பது தெரியுமோ ?

**மற்றொருவர் :** நகரத்து வீதிகள் எல்லாம் அரசாங்கச் செலவிலேயே அலங்கரிக்கப் படுகின்றன. ஆங்காங்குப் பந்தர்கள்; அவற்றில் திரைச்சீலை, மேற்கட்டி முதலிய அலங்காரங்கள். சில மண்டபங்களைப் போலவும், சில கோபுரங்களைப் போலவும் அமைக்கப் படுகின்றன. துகிலாலும், பன்னிற மணிகளாலும், ஓவியங்களாலும், மகர தோரணம் முதலியவற்றாலும் அவை அலங்கரிக்கப்படும் அழகே அழகு!

**முன்னவர் :** ஆடல் பாடல்களைப் பற்றிய செய்திகள் ஏதேனும் அறிவீரோ ?

**பின்னவர் :** பற்பல ஊர்களினின்று, புகழ்பெற்ற யாழ் வல்லார், குழல்வல்லார், மிடற்றுப் பாடல் வல்லார், ஆடன்மாக்கள் முதலியோர் மிகுதியாக வரவழைக்கப் பட்டுள்ளனர். அரண்மனையின் முன்புற முற்றத்தில் அவர்களுடைய பாடல் ஆடல் நிகழ்வதற்

கெனச் சிறந்ததொரு அரங்கும் நிர்மாணிக்கப் படுகின்றது.

**முன்னவர் :** அரண்மனையின் முன்புற முற்றமா? தக்க விடந்தான்! நகரமுழுதும் கூடினும் அவ்விடம் தங்கி யிருக்க இடங்கொடுக்கும்.

**பின்னவர் :** அவ்விடத்தில் செய்யப்படும் அலங்காரங் களை நோக்கின் அது முற்றுப் பெற்றபின் அவ்விடத் தில் இந்திர போகமே பூவுலகில் இறங்கிவந்து காட்சியளிப்பது போலக் காணப்படும். இக் கொண் டாட்ட நிகழ்ச்சிகளையன்றி, நமது நாட்டிலுள்ள எல்லாத் தேவாலயங்களிலும் சிறப்பாகப் பூசனை நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரண்மனையில் மற்றொருபுறமுள்ள வெளியிடத் தில் பலவகைப் பந்தய விளையாட்டுக்கள் நிகழப் போகின்றன. நாட்டின் பற்பல இடங்களினின்றும் சிறந்த வில்வீரர், வாள்வீரர், மற்போர்வீரர் முதலி யோர் திரண்டு வந்துள்ளனர்.

**முன்னவர் :** ஆயின் கண்கொள்ளாக் காட்சிதான்!

**பின்னவர் :** விண்கொள்ளா வெற்றிபெற்ற வேந்தரது வெற்றிக் கொண்டாட்டம் கண்கொள்ளாக் காட்சியா யிருப்பதற்குக் கேட்க வேண்டுமா, என்ன?

## அங்கம் : ஐந்து

## களம் : இரண்டு

### புனலாடல்

**இடம்** : கழார் என்னும் ஊரிலுள்ள காவிரித் துறை.

**காலம்** : காலை.

**உறுப்பினர் :** கரிகாலன், அவன் மகள் ஆதிமந்தி, அவளது கணவன் ஆட்டனத்தி, பரிவாரத்தார்.

*[துறையில் கரிகாலன் முதலியோர் ஓடம் விட்டும், நீந்தியும் புனல் விளையாட்டு விளையாடு கின்றனர். ஆதிமந்தியும், ஆட்டனத்தியும் ஓர் ஓடத்தில் செல்லுகின்றனர்.]*

**ஆதிமந்தி :** அன்பரே, இவ்வோடங்கள் நீரைக் கிழித்துக்கொண்டு செல்லும் காட்சி எவ்வளவு அழகாக இருக்கின்றது! அதோ, அன்னமுகப்பை யுடையதோர் ஓடம் நீரில் செல்லுவது அன்னம் நீந்திச் செல்லுவது போலவே காணப்படுவதைப் பாருங்கள்!

**ஆட்டனத்தி :** அதோ, சிங்கமுக ஓடங்கள் இரண்டு ஒன்றை யொன்று எதிர்த்துச் செல்லுங் காட்சி, இரண்டு சிங்கங்கள் போரிடச் செல்லும் காட்சி போலக் காணப்படுவதைப் பார்!

**ஆதிமந்தி :** அதோ, அரசர் ஓடத்தில் இருவர் நாட்டிய மாடுவதைப் பாருங்கள்! அவ்விருவரும் சிறந்த தேர்ச்சி யுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

**ஆட்டனத்தி :** ஆம்! அவர்களது அடகு வரிசைகள் அழகாய் ஒருவர் நிகழ்த்துவன மற்றவர் நிகழ்த்துவனவற்றிற்குக் கடுகளவும் பிசகாமல் இருக்கின்றன. மேலும் அவை தாளக்கட்டோடு பொருந்தி மிடுக்காகக் காணப்படுகின்றன!

**ஆதிமந்தி:** என்ன இது! நமது ஓடம் மிக வேக மாய் ஓடுகின்றது! வேடிக்கை பார்க்கும் மும்முரத்தில் ஆற்றின் நடுவிடத்திற்கு வந்துவிட்டோம் போல் இருக்கிறதே! இங்கென்ன வெள்ளம் இவ்வளவு வேகமாய் ஓடுகின்றது! இதினின்று நமது ஓடத்தை எவ்வாறு திருப்பிச் செல்வது?

**ஆட்டனத்தி:** ஆம்; நடு வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டோம்! ஆயினும் இவ் வெள்ளநீர் நம்மை என்ன செய்யும்? சென்ற ஆண்டு இதனி னும் வெள்ளம் மிக்கிருந்ததை அறிவாயன்றோ? அப்போது விளையாட்டுக்கெனவே வெள்ள நீரோட் டத்தில் பல தடவை ஓடத்தைச் செல்லவிட்டுத் திருப்பினேன்! இதோ, இப்பொழுதே இதினின்றும் நமது படகைத் திருப்பிச் செலுத்துகிறேன், பார்!

**ஆதிமந்தி:** அதோ சுழல்! அதில் நமது படகு அகப் பட்டுக்கொண்டு அமிழ்ந்துவிடும்போல் இருக்கிறதே! ஆ! என்ன செய்வேன்!

**ஆட்டனத்தி:** அன்பே, கவலையுறுதே! அச்சுழலில் அகப்படாவகையில் விரைவில் படகை அப்பாற்போகு மாறு செய்கின்றேன். அப்படிச் செய்ய இயலாமல் படகு ஒருகால் அச் சுழலில் அகப்பட்டுக் கொள்ளு மாயினும் கவலை வேண்டா! அதனை அச் சுழலினின் றும் மீட்க வகையறிவேன்!

**ஆதிமந்தி:** ஆ! அன்பரே! அதோ, பின்புறம் மேலும் வெள்ளம் ஓவென்று இரைந்துகொண்டு வருகின் றதே!

**ஆட்டனத்தி:** ஆயினும் அஞ்ச வேண்டா! இதற் கெல்லாம் அஞ்சுபவன் நானல்ல! இதோ, ஓடத்தை விரைந்து செலுத்துகிறேன் பார்!

**ஆதிமந்தி :** ஆ! படகு சாய்கிறதே! அன்பரே, எங்குள்ளீர்? நீரில் விழுந்துவிட்டேன்! சுழல் என்னை அழுத்துகிறதே!

*[படகு கவிழ்ந்துவிட இருவரும் நீரில் ஆழ்கிருர்கள். தூரத்தில் மற்றப் படகுகளில் உள்ளவர்கள் இதனைக் கவனிக்கின்றனர்.]*

**கரிகாலன் :** ஆ! ஆ! அதோ! அதோ! ஆதிமந்தியும் ஆட்டனத்தியும் சென்ற படகு சுழலில் அகப்பட்டுக் கவிழ்ந்துவிட்டது! அவ்விடத்திற்குச் செலுத்துங்கள் படகை!

*[பல ஓடங்கள் சுழலிருக்குமிடத்திற்கு விரைகின்றன. அங்குச் சென்றதும் பற்பலர் நீரில் குதித்து இருவரையும் தேடுகிருர்கள்.]*

**கரிகாலன் :** அதோ ஆதிமந்தி!

*[நீரில் குதித்து அவளை மீட்டுத் தன் படகிற்குக் கொண்டுவருகின்ருன். சிறிது சிகிச்சைக்குப் பின் அவள் உணர்வு வரப்பெறுகின்ருள்.]*

**ஆதிமந்தி :** ஆ! நான் எங்கிருக்கிறேன்? நானும், என் கணவரும் படகில் அல்லவா சென்ருேம்? படகு கவிழ்ந்தது! ஆ! அவர் என்ன ஆனுர்? அவரை வெள்ளத்தினின்று கரை சேர்த்தீர்களோ?

**கரிகாலன் :** மகளே, வருந்தாதே! ஆண்டவனருளால் நீ உயிர் மீளப் பெற்ருய்! உன் கணவனை ஆட்கள் தேடிக் கொண்டிருக்கின்றனர். இதோ நொடியில் அவனைக் கொணர்ந்துவிடுவர். சற்றே இளைப்பாறு!

**ஆதிமந்தி :** இளைப்பாறவா...? அவர் கதி யாதாயிற்று? அவரை இன்னும் மீட்கவில்லையே! ஐயோ! என்ன செய்வேன்?

*[ஆட்கள் வரும் அரவம் கேட்கிறது.]*

**கரிகாலன் :** குழந்தாய், அதோ ஆட்கள் வருகிறார்கள். உன் கணவர் செய்தி தெரிந்துவிடும் !

*[ஆட்கள் கவிழ்ந்த தலையுடன் வந்து நிற்கின்றனர்.]*

**ஆதிமந்தி :** ஆ ! ஆட்கள் கவிழ்ந்த தலையுடன் வந்து நிற்கின்றனரே ! எல்லாம் தெரிந்துவிட்டது ! நான் என் கணவர் சென்றவிடத்துக்குப் போகிறேன் !

*[எழுந்து ஓடுதல்.]*

**கரிகாலன் :** குழந்தாய் ! மகளே ! ஆதிமந்தீ ! எவரும் அவளைத் தடுக்கவேண்டாம் ! வாருங்கள் ! எல்லாரும் அவளைப் பின்பற்றிச் செல்லுவோம் !

*[யாவரும் பின்பற்றுகின்றனர்.]*

**ஆதிமந்தி :** ஆ ! என் கணவா ! அன்பே ! ஆருயிரே ! வெள்ளத்தின் வழி விரைந்து சென்றீரோ ? வெள்ளம் உம்மை ஈர்த்துச் சென்றது விதியோ ? ஐயோ ! கொடுங்கூற்றமே ! என் கணவன் உயிரைக் கொள்ளை கொண்டாயோ ? ஏ சதிகார விதியே ! நீ எங்களைப் பிரித்தாயோ ? என் கணவனுயிரை உன் வலிய கையினின்றும் மீட்பேன் ! இது உறுதி ! இங்ஙனம் செய்யேனாயின் யான் பத்தினியோ ? சோழர்குல மகளோ ? ஆ ! என் கணவரே ! என்னை எங்ஙனம் மறந்தீர் ? நீர் என்னை மறக்க யான் அத்தனை பாவியா ? உம் அன்பிற்கு உரியள் அல்லளோ யான் ? என்னை வெறுத்தீரோ ? வெள்ளத்தில் மூழ்கியபோது என்னவெல்லாம் நினைத்தீரோ ? எவ்விதம் அவதிப்பட்டீரோ ? இதோ வருகிறேன் உம்மிடம் !

*[அரற்றிக்கொண்டே செல்கிறாள்.]*

## அங்கம் : ஐந்து
## களம் : மூன்று

# ஆதிமந்தியின் கற்பு மேம்பாடு

**இடம்** : *காவிரி கடலோடு கலக்குமிடம்.*

**காலம்** : *பிற்பகல்.*

**உறுப்பினர்** : *ஆதிமந்தி, கரிகாலன், ஆட்டனத்தி, மருதி, பரிவாரத்தார்.*

*[ஆதிமந்தி, கரிகாலன், பரிவாரத்தார் ஆகியோர் கடற்கரையோரமாக வருதல்.]*

**ஆதிமந்தி :** என் கணவனை ஈர்த்துச் சென்ற ஏ வெள்ளமே! என் கணவனை என்னிடம் கொடுத்து விடு! ஆ! வெள்ளம் கடலையன்றோ அடைந்திருக்கின்றது! ஏ, கடலே! வெள்ளம் என் கணவனை உன்னிடம் கொண்டு சேர்த்ததோ? ஆயின் என் கணவனை என்னிடம் கொடுத்துவிடு!

*[கடலருகு சென்று-]*

ஏ, கடலே! என் கணவனை எனக்குத் தாரோயோ! கல் நவில் தோளாய்! என் கணவா! இரு கடலரசி என்னினும் உனக்கு இனியவளோ? இல்லை! இல்லை! அவ்விதம் இருத்தல் இயலாது! கடலரசன் கட்டளையால் வெள்ளம் உன்னை ஈர்த்துச் சென்றது! கடலரசனே! என் கணவனைத் தந்துவிடு! தந்து விடு இல்லையேல்......

*[மருதி வருகின்றாள்.]*

**மருதி :** அரசீ! அன்னாய்! கடலைச் சபித்துவிடாதே! கடலரசன் உன் கணவனைத் தந்து விட்டான்! நீ இங்கு வருவது அறிந்து, அவன் உன் கணவனைத் தன் கைகளில் ஏந்திக் கொணர்ந்து அதோ என்

வீட்டருகில் கிடத்திவிட்டுச் சென்ருன்! வெள்ள மாகிய அக்கொடியோனிடமிருந்து அவன் உன் கண வனை மீட்டு என்பால் கொணர்ந்து சேர்த்துளான்! வா! என் வீட்டிற்கு வா! வந்து உன் கணவனைக் காண்

*[யாவரும் மருதி வீட்டைச் சென்றடை கின்றனர்.]*

**ஆதிமந்தி :** கடலரசனே! என் கணவனை மீட்டாயோ? அவனை உன் கைகளால் ஏந்தி வந்து கரை சேர்த் தாயோ? நீ வாழ்க! ஊழூழி வாழ்க! அன்ருய்! உனக்கு நன்றி! கடற்கரையில் விழுந்து கிடந்த என் கணவனை உன் வீட்டிற்குக் கொண்டு சென்று காப்பாற்றி எனக் களித்தனையே! உனக்கு என் வணக்கம்! நீ நன்மை பல அடைந்து நீடு வாழ்க

*[கணவனைக் கண்டு-]*

ஆ! என் அன்பே! வெள்ளத்தின் வாயினின்று மீண்டு வந்தீரோ?

*[தழுவிக் கொள்ளுதல்.]*

**ஆட்டனத்தி :** ஆதிமந்தீ! என் அன்பே! வந்தாயா! எனக்கு யாதொரு ஊறும் இல்லை! வெள்ளத்தில் விழுந்ததை யான் அறிவேன்! பிறகு இங்கு இவ் வீட்டில் உணர்வு பெற்று எழுந்தேன்! இதோ இவ் வன்னையே என்னை இக்கடல் வாயினின்று மீட்டிருத் தல் வேண்டும்!

**கரிகாலன் :** அன்ருய், நீங்கள் செய்த இந்த உதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்ய இயலும்!

*"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது"*

அன்ருே?

**மருதி :** அரசகுலப் பெருமக்களே, குடிமக்கள்பால் உங் கட்குள்ள அன்பும், அருளும் அளவிடற்பாலனவோ?

உங்கள் ஆட்சியின்கீழ் உள்ள குடி மக்களாகிய யாங்கள் எல்லாரும் பசியும் பிணியும் இன்றி, வசியும் வளனும் மிகுந்து வாழ்கின்றேம் அன்றே? இதனினும் யாங்கள் அடைதற்குரிய நன்மை யாதுளது? இந்நன்மையே தக்க கைம்மாறு ஆகுமே. மேல் கூற வேண்டுவது என்ன இருக்கிறது? அன்றியும் கடற்கரையில் உணர்வற்று விழுந்திருந்த இவரைத் தூக்கி வந்து குடிலில் வைத்து உணர்வு வரச்செய்தது ஒரு பெரிய செயலா? இது மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தத்தம் கடமையாய்க் கொண்டொழுகு தற்குரியதன்றே? ஆதலின் என்னைப் புகழாதிருக்க வேண்டுகின்றேன்.

**கரிகாலன்:** உங்கள் அன்பு உள்ளம் உங்கள் செயலை இவ்வாறு குறைவாக மதிக்கச் செய்கின்றது! ஆயினும் இச்சிறு செயல் எங்கட்கு எவ்வளவு நன்மை விளைவித்துள்ள தென்பதை நாங்கள் எண்ணிப்பார்க்காமல் இருக்க இயலாது.

**மருதி:** அது கிடக்க. யாவரும் என் சிறு குடிலுக்கு வந்து என்னைப் பெருமைப் படுத்துமாறு வேண்டுகின்றேன்.

**கரிகாலன்:** நல்லது. அங்ஙனமே வருகின்றேம்!

*[யாவரும் மருதி வீடடைந்து அம்மூதாட்டியால் உண்டி முதலியன அளித்து உபசரிக்கப் பெறுதல்.]*

**மருதி:** அரசகுலப் பெருமக்களாகிய உங்கட்குத் தகுதியாக உணவு முதலியன அளித்து உபசரித்தற்குரிய வன்மை எனக்கில்லை. ஏதோ என்னால் இயன்றவரை உபசரிக்கக் கருத்துக் கொண்டேன். ஆதலின் இந்தப் புல்லிய உணவை வெறுக்காது ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றேன்.

**கரிகாலன்:** வெய்தாய், நறுவிதாய், வேண்டிய அளவு தின்பதாய், நெய் அளாவி, நிறைய இட்டு, பொய்யாக

அடகு என்று சொல்லி அமுதத்தை உண்ணுதற்குக் கொடுத்தீர்கள். அரண்மனையில் நாள்தோறும் அறு சுவையுண்டி வகை வகையாக உண்டாலும் அவ் வுணவு இதைப்போல் சுவையுடைய தாகாது. உண் மையாகக் கூறுகிறேன். யான் இதுவரை உண்ட எந்த உணவும் இதற்கீடானது அன்று.

**ஆட்டனத்தி :** 'அன்போடு உண்க, உண்க என உப சரித்து உப்பில்லாக் கூழிட்டாலும் அது அமுதமாம்' எனக் கூறிய ஆன்றோர் வாக்கு எத்தகைய உண்மை யான தென்பதை இப்போதே கண்டேன். இவ் வுணவு உணவின் தன்மையை நோக்க எளியதே யாயினும், இதன் சுவையையும் இதனை உண்ணுங் கால் உண்டாகும் இனிமையையும் நோக்க இதனி னும் உயரிய உணவு இல்லை என்று துணிந்து கூற லாம்.

**ஆதிமந்தி :** இன்று நீவிர் எங்கட்குச் செய்த உதவியால் எங்களை உவகைக் கடலுள் ஆழ்த்திவிட்டீர்! ஆத லின் தங்களை என் இதயமாகிய சிறைக்குள் சிறை வைக்கத் தீர்மானித்து விட்டேன்!

**ஆட்டனத்தி :** இவ்வம்மையினது இக் குற்றத்திற்கு உனது இதயமாகிய ஒரு சிறை போதாது. என் இதய மாகிய சிறையிலும் பிணித்துவிட உறுதி பூண்டு விட்டேன்.

**மருதி :** இப்போது எனக்கு இரு சிறைகள் ஏற்பட்டு விட்டதனால், இனி நான் உல்லாசமாக இன்ப வானில் பறந்து திரிவேன்.

**கரிகாலன் :** நாம் யாவருமே, இன்று இன்ப வானில் பறந்து திரியும் பறவைகள் ஆயினோம். 'மலை போல வந்த துன்பம் பனி போல நீங்கியது.' அன்னையே, வணக்கம். சென்று வருகின்றோம்!

**மருதி :** நல்லது. வணக்கம். சென்று வருக!

## அங்கம் : ஐந்து

## க ள ம் : நான்கு

# இலங்கைச் செலவு

**இடம்** : *கரிகாலன், அத்தாணி மண்டபம்.*

**காலம்** : *காலை.*

**உறுப்பினர் :** *கரிகாலன், அமைச்சர், அவையினர், புலவர், குடிமக்கள் முதலியோர்.*

*[அவை கூடியிருக்கின்றது, கரிகாலன் நாட்டுநலங் கருதிச் செய்ய வேண்டுவன வற்றை ஆராய்கின்றான். ]*

**கரிகாலன் :** அமைச்சரே, நாட்டின் நலம் கருதி நாம் செய்தற்குரியனவற்றுள் எவை எவை மிகுந் துள்ளன ?

**அமைச்சர் :** நாடு முழுவதிலும் விளை நிலமாக ஆக்கு தற்குரிய நிலப்பரப்பு எவ்வளவு உள்ளது எனக் கணக்கெடுத்தாயிற்று. தொண்டை நாட்டிலும், அருவா நாட்டிலும் குளந்தொட்டுக் கால்வாய்கள் அமைத்தற்குரிய விடங்களில் அவைகளை அமைத் தாயிற்று. இங்குச் சோணாட்டிலும் பல பகுதிகளில் கால்வாய்கள் அமைத்தாயிற்று. கிணறுகள் தோண்ட வேண்டுமெனக் குறிக்கப்பட்ட இடங் களில் கிணறுகள் தோண்டப்பட்டு விட்டன. மேற் கண்ட இடங்கள் எல்லாவற்றிலும் இப்போது சாகுபடி நடந்தேறி வருகிறது. காடுகளைத் திருத்தி விளைநிலமாக்க வேண்டுமெனக் குறிக்கப்பட்ட இடங்கள் பெரும்பாலன சீர்படுத்தப்பட்டு விட்டன. சிறுபான்மை அரைகுறையாய்ச் சீர்படுத் தப்பட்ட நிலையிலுள்ளன. சென்ற ஆண்டில் காவிரியின் வெள்ளப் பெருக்கால் சீர்கெட்ட நிலத்

தில் ஒருபகுதி இன்னும் சீர்படுத்தப்படவில்லை. இவ்வாண்டில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் சீர்கேடு அடைதற்குரிய இடங்கள் எவை என ஆராயப்பட்டு அவ்விடங்களில் முன்னெச்சரிக்கை யாகச் செய்தற்குரியனவற்றைச் செய்துகொண்டு வருகின்றோம். இனி, மேலும் ஏதேனும் செய்தற் குரியனவோ எனக் குடிகளுடன் ஆலோசித்தல் வேண்டும்.

*[காவலன் ஒருவன் வருதல்.]*

**கரிகாலன் :** அரசே, வாழ்க! அரண்மனையின் முன்புற முற்றத்தில் குடிமக்கள் கூடியுள்ளனர். அவர்கள் சமுகத்தில் ஏதோ தெரிவித்துக் கொள்ள விரும்பு கின்றனர்.

**அமைச்சர் :** நல்லது. அவர்கட்குத் தலைமை பூண்ட வரை ஈண்டு வரச்செய்க!

*[காவலன் போதல் — சிலர் வருதல்]*

**பொதுமக்கள் தலைவருள் ஒருவர் :** அரசே, வாழ்க! கொற்றம் செழிக்க! சமுகத்தில் செண்டுகொண்டு இமயம் திரித்த செய்தியறிந்து மிக்க வியப்பு எய்தி னேம். அத்தகைய தெய்விக ஆற்றல் பொருந்திய தாங்கள் இப்போது சாதாரணக் குடிகளாகிய எங்களால் செய்ய இயலாதன செய்து எங்கட்கு உண்டாகிய துன்பத்தினைத் துடைக்க வேண்டுகின் றோம்! அத்துன்பம் யாதோ வெனின், இக்காவிரி யாறு ஆண்டுதோறும் தன் மனம்போனபடி நடந்து அதன் கரை எவ்வளவு பலப்படுத்தப்படினும் கரை புரண்டு எங்கள் விளைநிலங்களைப் பாழ்படுத்தி விடுகின்றது. இக்காவிரியை அடக்கி யாள்வது நும் கடன்!

**கரிகாலன் :** அமைச்சரே, ஆண்டுதோறும் இங் ஙனமே பாழ்படுத்தி வருகின்றதன்றோ? இதனைத் தவிர்க்க யாது செய்தல் வேண்டும்?

**அமைச்சர் :** அது மிகவும் கடினமான செயல் என்றெண்ணுகிறேன். அதற்கு ஓரிடத்தில் வடிகால் காணவேண்டும்! காவிரியின்கரை தொடக்கம் முதல் முடிவுவரையில் உறுதியாகக் கட்டப்பட வேண்டும். காவிரியில் அடிக்கடி கரை உடைபடும் இடமொன்றுளது. அங்கு ஒரு கால்வாய் வெட்டி வடிகாலில் சேர்க்கப்பட வேண்டும். அவ்விடத்தில் கல்லணை யொன்று கட்டுவதும் அவசியமே! இவையெல்லாவற்றையும் செய்து முடிக்கப் பல நூறாயிரக்கணக்கான ஆட்கள் வேண்டும். யாவும் வெள்ளக்காலம் வருவதற்குள் முடிய வேண்டும். அவ்வளவு பணியாட்களுக்கும் உணவும் உறையுளும் வேண்டும்! வேலை முடிந்த பின்னர் யாவருக்கும் வெகுமதி தரல் வேண்டும். அவற்றிற் கெல்லாம் போதுமான பணம் இப்போதில்லை. சென்ற பல ஆண்டுகளாகப் போர்கள் நிகழ்ந்ததில் பணம் எல்லாம் செலவழிந்து விட்டது. நமது மக்களிடத்தில் அளவுக்கு மேலாக வரி திரட்டினாலும் அக்காரியங்களுக்குரிய பணம் கிடைக்காது. ஆதலால் யாவற்றையும் தீர ஆலோசித்துச் செய்யவேண்டும்!

**கரிகாலன் :** எப்படியும் காவிரியை அடக்கியே தீர வேண்டும்!...அன்புள்ள குடிமக்களே, இவ்வாண்டோடு உங்கள் துயரம் நீங்குமாறு செய்கின்றேன். அதற்காகச் செய்தற்குரிய செயல் எதுவாயினும் இப்போதே அச்செயலில் இறங்குகின்றேன். சென்று வருவீர்!

**வந்தவர்கள் :** அரசு வாழ்க! கொற்றம் செழிக்க!

*[வந்தவர் போதல்.]*

**கரிகாலன் :** இக்காவிரியை நெறிப்படுத்த ஆட்களும் பணமும் தேவை என்கின்றீர்! இவைதாமே குறுக்கே நிற்கின்றன. இவற்றைப் போக்குவேன்!

...இலங்கை யரசனுக்கு நாம் விடுத்த செய்தி யாதாயிற்று?

**அமைச்சர் :** இலங்கையரசர் திறை கொடுக்க மறுக்கின்றார்; மேலும் நம்மீது போருக் கெழவும் ஏற்பாடுகள் செய்கின்றாராம்! அந் நாட்டிலுள்ள நமது ஒற்றர் மூலம் இச்செய்திகள் தெரிய வருகின்றன!

**கரிகாலன் :** நன்று! அவர்மீது யாம் போர் தொடங்கி விட்டோமெனச் செய்தி அனுப்புக! நமது படைகளைப் போருக்குச் சித்தம் செய்க. ... காவிரியை அடக்குதற்குரிய வகையும் இப்போதே என் கருத்தில் தோன்றியுள்ளது. இவ்விலங்கை வேந்தனை யடக்கி, ஈழத்தவர் பல நூறாயிரவரைச் சிறைபிடித்துக் கொணர்வேன்! அவர்களைக் கரையைக் கட்டச் செய்வேன்! கரைகட்டி முடித்தவர்க்கு விடுதலை எனக் கூறின் இச்செயல் மிக விரைவில் முடியும். மேலும் நமக்கு அடங்கிய வேந்தர் யாவரும் தத்தம் திறத்திற் கேற்றவாறு பணமும் ஆட்களும் இக்காரியத்திற்காகக் கொடுத்துதவ வேண்டுமென ஆணையிடுவேன். அவரவர்க்குரிய பங்கு வேலை இதுவெனத் திட்டமிட்டு அவ்வேலையை முடிக்கச் செய்வேன்! நல்லது. இனிச் சபை கலைக!

## அங்கம் : ஐந்து

## களம் : ஐந்து

# காவிரியை ஏவல் கொள்ளல்

**இடம்** : *காவிரிக் கரையிலுள்ளதோர் ஊர்.*

**காலம்** : *காலை.*

**உறுப்பினர்** : *பொதுமக்கள்.*

*[உள்ளூரார் ஒருவர் வேற்றூரார் ஒருவரோடு உரையாடுகிருர்.]*

**உள்ளூரார் :** வாருங்கள், வாருங்கள்! தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்களோ? இன்று எளியேன் வீட்டில் தங்கி விருந்துண்டு செல்க!

**வேற்றூரார் :** நன்று, அங்ஙனமே...... நான் முன்னொருகால் இவ்வூர் வழியாக வந்தகாலை ஊரெல்லாம் வெள்ளத்தால் பாழ்பட்டுக் கிடந்ததே! இப்போது எல்லாம் சீர்படுத்தப் பட்டுவிட்டது போலும்! முன்போல் இப்போது நிலங்கள் நன்கு பயிரிடப்படுகின்றனவோ?

**உள்ளூரார் :** ஆம்; சீர்படுத்தப்பட்டுவிட்டன. நிலங்களும் நன்கு விளைகின்றன. அது மட்டுமன்று. இனி ஒருபோதும் வெள்ளம் நிலங்களைப் பாழ்படுத்தாதவாறு காவிரியின் இருமருங்கிலும் கரை மிக உயரமாக அமைக்கப்பட்டுவிட்டது. அதன் நீர் முழுதும் விளைநிலங்கட்குப் பயன்படுமாறு அதினின்று வெட்டாறு, அரிசிலாறு என இரண்டு கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன. அவை தனித்தனிக் கிளையாறுகளாகக் கடல்வரை செல்லுகின்றன. காவிரியிலும் அக் கிளைகளிலும் அவற்றின் இருமருங்கிலும் ஆங்காங்குப் பல மதகுகள் அமைத்துச் சிறு

சிறு கால்கள் மூலம் நீர் விளைநிலங்கட்குப் பாய வசதி செய்யப்பட்டுள்ளது.

**வேற்றூரார் :** செய்தற்கரிய இச்செயல்கள் எல்லாம் எவ்வாறு செய்து முடிக்கப்பட்டனவோ ?

**உள்ளூரார் :** நிலங்கள் பாழ்பட்டதனால் எங்கள் வாழ்வு கெட்டது. நாங்கள் எங்களரசரது முகம் நோக்கினோம் ! அரசர் பகைவரது மண்ணை நோக்கினர். கருதியது கைகூடிற்று.

**வேற்றூரார் :** நீவிர் கூறுவதன் கருத்து விளங்கவில்லையே ! விளக்கிக் கூறுவீர் !

**உள்ளூரார் :** காவிரி நிலங்களைப் பாழ்படுத்திய செயலை அரசர்க் கறிவித்தோம். அவர் உடனே இலங்கைமீது படையெடுத்தார். சிங்களவரைப் போரிற் புறங்கண்டு, பல்லாயிரவரைப் போரில் சிறைபிடித்துக் கொணர்ந்தார். காவிரிக் கரை அமைப்பதில் அவரவர்க்கு இன்ன செயல் உரியது எனப் பணித்தார். அச் செயல்களைச் செய்து முடித்தால் சிறைவீடு பெற்றுச் சுதந்தரமாக ஊர் செல்லலாம் என அறிக்கை விடுத்தார். இதனால் வேலையும் எளிதில் முடிந்தது. பொருளும் மிச்சமாயிற்று.

**வேற்றூரார் :** இது ஒரு நல்ல உபாயந்தான் !

**உள்ளூரார் :** இது மட்டுமேயோ ! காவிரிக் கரை கட்டுவதற்கு இலங்கையினின்று கொணரப்பட்டவர்கள் போதாதென்னும் நிலை ஏற்பட்டது. உடனே எமதரசர் வேற்று நாட்டு வேந்தரெல்லாம் தலைக்கு இவ்வளவு தூரம் கரை கட்டவேண்டும், இவ்வளவு தூரம் வாய்க்கால் வெட்டவேண்டும். இன்னின்ன இடத்தில் மதகுகள் அமைக்கவேண்டும் எனத் திட்டம் செய்தார். அங்ஙனமே யாவரும் வந்து அவரவர்க்குரிய பங்கு வேலையைச் செய்து முடித்

தனர். மற்று இச்சந்தர்ப்பத்தில் ஓர் அற்புதமும் நிகழ்ந்தது.

**வேற்றூரார் :** அஃதென்னவோ ?

**உள்ளூரார் :** காவிரிக்கரை அமைக்கவேண்டுமென வேற்றரசர்க்கு எமதரசர் கட்டளையிட்டார் எனக் கூறினேன் அன்றோ? அக்கட்டளைக்கிணங்க **ஓரங்கல்** நாட்டுப் **பிரதாபருத்திரன்** என்னும் ஓர் அரசனைத் தவிர ஏனையோர் எல்லாரும் உடனே வந்தனர். அப் பிரதாபருத்திரனுக்கு நெற்றியில் ஒரு கண் இருந்த தாம். அதனால் அவன் தன்னைச் சிவபெருமானின் அம்சமாக நினைத்துக்கொண்டு தருக்கியிருந்தானும். அதனால் அவன் மட்டும் வரவில்லை. இச் செய்தி எம தரசருக்கு அறிவிக்கப்பட்டதும் அவர் அவ்வரசனது படத்தை எழுதிக் கொணரச் செய்தார். அப் படத்தி லுள்ள அவனது நெற்றிக் கண்ணைத் தமது வேலால் குத்தினர். அவ்வளவில் உண்மையில் பிரதாபருத்திர னது நெற்றிக்கண் மறைந்துவிட்டது. அதுகண்டு அவன் பயந்து உடனே எமதரசரது கட்டளைக்கு இணங்கிக் காவிரிக்குக் கரைகட்ட முன்வந்தான். இவ்வாறு அவனுக்குரிய பங்கும் கட்டிமுடிக்கப் படவே காவிரிக் கரை கட்டும் வேலை இனிது முடிந்தது.

**வேற்றூரார் :** ஆ! அப்படியா! அவரவர் தத்தம் செலவில் ஆட்களைக் கொணர்ந்து தத்தமக்குக் கொடுத்த வேலையை நிறைவேற்றினர் போலும்!

**உள்ளூரார் :** ஆம்! அவ்வகையிலும் எவ்வளவோ பணம் மிச்சமாயிற்று! எவ்வளவோ சிரமம் குறைந்தது!

**வேற்றூரார் :** காவிரி நதியைப் பாசனத்திற்குப் பயன் படுத்துதற்காகச் செய்தற்குரியவை இன்னவை என அறிஞரால் திட்டங்கள் வகுக்கப்பட்டன எனக்

கேள்வியுற்றேன்! அத் திட்டங்கள் எல்லாம் நிறைவேறினவோ?

**உள்ளூரார்:** ஆம்! ஒன்று விடாமல் எல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டன. காவிரியினின்று **கொள்ளிடம்** வெட்டிவிடப்பட்டது. மற்றோரிடத்தில் காவிரியினின்று அக் கொள்ளிடத்திற்கு நீர் பாயுமாறு **உள்ளாறு** என ஒரு கால்வாய் வெட்டிவிடப்பட்டது. அந்த உள்ளாற்றின் குறுக்கே **கல்லணை** ஒன்று கட்டப்பட்டது.

**வேற்றூரார்:** ஆயின் காவிரி அடக்கி ஆளப்பட்டுவிட்டாள் என்று கூறுங்கள்!

**உள்ளூரார்:** ஆம்! பொன்னிச் செல்வர் ஆனார் எம் மன்னர் மன்னன்! பொன்னி நதியால் நாடு பொன் கொழிக்கின்றது இப்போது!

அங்கம் : ஐந்து

களம் : ஆறு

## பொன்னிச் செல்வன் பொலிவு மேம்பாடு

**இடம்** : *கரிகாலன் அவை.*

**காலம்** : *காலை.*

**உறுப்பினர் :** *அரசர், அமைச்சர், அவையத்தார், புலவர், பொதுமக்கள் முதலியோர்.*

*[அவை கூடியிருக்கின்றது. அரசர் வீற்றிருக்கின்றார். யாவரும் அவரைப் புகழ்ந்து போற்றுகின்றனர்.]*

**ஒரு புலவர் :**

“ திண்காழ் ஆரம் நீவிக் கதிர்விடும்
ஒண்காழ் ஆரம் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரசம் மூசுவன மொய்ப்ப
எருத்தந் தாழ்ந்த விரவுப்பூந் தெரியல்
பொலஞ்செயப் பொலிந்த நலம்பெரு விளக்கம்
வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச்
சோறமை வுற்ற நீருடைக் கலிங்கம்
உடையணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை
முருகியன் றன்ன ஒருவனை யாகி
... ... ... ... ... ... ...
பொலம்பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பின் குறுநில மன்னர்
அவரும் பிறரும் துவன்றிப்
பொற்பு விளங்கு புகழவை நிற்புகழ்ந்தேத்த
விலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும !
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.”

மற்ருெரு புலவர் :

" ஏரியும் ஏற்றத்தி ஞனும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம்—தேரின்
அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு. "

இன்னொரு புலவர் :

" அரிமா சுமந்த அமளிமே லானைத்
திருமா வளவனெனத் தேறேன்—திருமார்பின்
மானமா லென்றே தொழுதேன் தொழுதகைப்
போனவா பெய்த வளை. "

வேருெரு புலவர் :

" முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியக்கால்
இச்சக் கரமே அளந்ததால்—செய்ச்செய்
அரிகான்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனல் நீர்நாடன்
கரிகாலன் கானெருப் புற்று. "

பாணர் பாடியாடல்

(பாணர் பாட, விறலி ஆடுதல்.)

1. வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன்காண் அம்மானை !
ஓங்கரணங் காத்த வுரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை !
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை !

2. புரவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்காண் அம்மானை !
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை !
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை !

3. தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல் அவைப்போர் புகார் மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்
பாழித் தடவரைத் தோள் பாடேலோ பாடல் !
பாவைமார் ஆரிரக்கும் பாடேலோ பாடல் !

**கரிகாலன் :** நுமது பாடல் ஆடல்கள் மிக்க இனியன! ...பெரியோர்களே, அவையோர்களே! யாவருக்கும் வணக்கம்! யாம் பெற்ற வெற்றிகட்கும், பிற சிறப்பு கட்கும் உங்கள் ஆசியும், அன்பும், ஒத்துழைப்புமே காரணமாகும். சூடு கோடாக, வித்தியது ஆயிரம் விளையுட்டாக நெல் பொலிந்து விளைந்து நாட்டைச் செழிப்பித்து யாவரும் உண்டு களிக்குமாறு செய்தது நமது வேளாளரது தளரா ஊக்கமன்றோ? பகைவர் அஞ்சியொடுங்கி எமது ஏவல் கேட்குமாறு செய்தது ஈண்டுக் குழுமி நிற்கும் வீரரது தோள்வலியன்றோ? நடுநிலை கோடாது முறைசெய்யும் மன்னன் இவன், செங்கோலன் இவன் என எம்மை யாவரும் மதிக்கு மாறு செய்தது, இங்கு எம்மைச் சூழ்ந்திருக்கும் ஐம் பெருங் குழுவினருடையவும், அறங்கூறு அவை யத்தாருடையவும் ஆகிய நன்மக்களது சீரிய செய லன்றோ? இங்ஙனமாகவும் எம்மைப் பல படப் புகழ்வது எம்மிடம் உங்களுக்குள்ள அன்பையே புலப்படுத்துகின்றது. அவ்வன்பாகிய பெரும்பேற்றை யாமடைந்தது குறித்துப் பெரிதும் விம்மிதமடை கின்றோம்!

அமைச்சரே, இங்குக் குழுமியுள்ள புலவரனைவர்க் கும் அவரவர் தகுதிக் கேற்பச் சிறந்த வரிசைகளை நல்குக! எம்மீது பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினறு நூறாயிரம் காணம் பொன் கொடுக்க! அவ்வாறே எம்மீது பொருநர் ஆற்றுப்படை பாடிய முடத்தாமக்கண்ணியாருக்கும் சிறப்புச் செய்க! இங்குப் பாடியாடிய பாணர்க்கும் விறலியர்க்கும் தேரும், மாவும், பொற்பூவும், பொன்னரிமாலையும் அளிக்க! சபை கலைக! யாவருக் கும் வணக்கம்!

...ERSITY ...LIBRARY